
முத்துலட்சுமி ராகவன்
மௌனத் திரையின்
மறைவினிலே...
மௌனத்திரையின் மறைவினிலே... முத்துலட்சுமிராகவன்
முத்துலட்சுமி ராகவன்
மௌனத் திரையின்
மறைவினிலே...
இது ஒரு
கற்பகம் புத்தகாலயம்

**நூல் விவரப் பட்டியல்**

நூலின் பெயர் : மௌனத் திரையில் மறைவினிலே...

ஆசிரியர் : முத்துலட்சுமி ராகவன்

மொழி : தமிழ்

நூல் வகை : நாவல்

உரிமை : © ஆசிரியருக்கு

பதிப்பு ஆண்டு : முதல் பதிப்பு - அக்டோபர் - 2012

பக்கங்கள் : 120

நூல் அளவு : 18.5 x 12.5 செ.மீ.

எழுத்து : 12 புள்ளிகள்

தாள் : 11.6 கி.கி. வெள்ளைத்தாள்

பைண்டிங் : கார்டுபோர்டு

நூல் வெளியீடு : கற்பகம் புத்தகாலயம்
4/2, சுந்தரம் தெரு,
(நடேசன் பூங்கா அருகில்)
தி. நகர், சென்னை - 600 017.
✆ : 24314347

ஒளி அச்சு : விக்னேஷ்வர் கிராபிக்ஸ்
தொலைபேசி : 9940214836

அச்சிட்டோர் : சென்னை மைக்ரோ
பிரிண்ட் (பி) லிட்.,
130/34, நெல்சன் மாணிக்கம் ரோடு,
சென்னை - 600 029.
✆ : 23740099

விலை : ரூ. 50.00

# மௌனத் திரையின் மறைவினிலே...!

**முத்துலட்சுமி ராகவன்**

## 1

**வா**னம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. எந்த நேரமும் வானத்தைக் கிழித்துக் கொண்டு மழை நீர் கொட்டோ... கொட்டென்று கொட்டப் போவதை... வானிலை அறிவுறுத்திக் கொண்டிருந்தது.

'மொட்டை மாடியில் துணி காய்கின்றதே...'

பூஜா அவசரமாக மாடிப்படியேறினாள்... மொட்டை மாடியின் குறுக்காகக் கட்டப்பட்டிருந்த கொடியில் காய்ந்து கொண்டிருந்த துணிகளின் மேலிருந்த கிளிப்பை அவசரமாய் அகற்றி... துணிகளை எடுக்க ஆரம்பித்தாள்...

'மழை வருவதற்கு முன்னால் ஹரிஷை வீட்டுக்கு கூப்பிட்டுக் கொண்டு வரவேண்டுமே...'

வாசல் கேட்டு திறக்கப்படும் சப்தம் கேட்டு... மொட்டை மாடியிலிருந்து எட்டிப் பார்த்தாள்... பால் கவர் போடும் பையன் வந்து கொண்டிருந்தான்...

துணிகளை அள்ளிக் கொண்டு... கீழே இறங்கிவந்தாள். வாசல் கதவில் இருந்த பையில் இருந்த பால் பாக்கெட்டை எடுத்துக் கொண்டாள். ஹாலில் இருந்த சோபாவில் துணிகளைப் போட்டுவிட்டு... சமையலறைக்குள் சென்று காஸ் ஸ்டவ்வை உயிர்ப்பித்தாள்.

'நேரமாச்சே...'

மனமெல்லாம் மகனிடம் இருந்தது. பால் கிண்ணத்தை அடுப்பில் வைக்கும்போது செல்ஃபோன் அழைத்தது. ஸ்டவ்வின் அனலைக் குறைத்து வைத்து விட்டு ஹாலுக்கு ஓடினாள். செல்ஃபோனை எடுத்துப் பார்த்தாள்.

'நரேந்திரன் அழைக்கிறான்' என்றது செல்ஃபோன். செல்ஃபோனை உயிர்ப்பித்து காதுக்குக் கொடுத்தாள்...

''என்ன செய்து கொண்டிருக்கிறாய்...?'' என்று கேட்டான் நரேந்திரன்.

'நீங்கள் வாங்கிக் கட்டி வைத்திருக்கும் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருக்கிறேன்...' என்று சொல்ல வேண்டும்போல் அவள் நாவு துடித்தது. அடக்கிக் கொண்டாள்.

''மழை வருவதைப் போல இருக்கு... மொட்டை மாடியில் கிடந்த துணிகளை எடுத்துக் கொண்டு வந்து போட்டுவிட்டு... பாலைக் காய்ச்சிக் கொண்டிருக்கிறேன்.''

அவளுடைய குரலின் தொனி...



'இந்த விவரம் போதுமா... இன்னும் கொஞ்சம் வேணுமா...' என்று கேட்பதைப் புரிந்து கொள்ளாதவனாய்... நரேந்திரன்,

''ஏன் இப்படி பிளைட்டைப் பிடிக்க ஓடிக்கிட்டு இருக்கிறவ போல பதட்டமாய்ப் பேசுகிற...? உனக்கு நிதானமாய்ப் பேசத் தெரியாதா...?'' என்று சாவதானமாய்க் கேட்டான்.

'பேசுகிற பேச்சில்கூட ஆயிரம் குற்றங்களைக் கண்டு பிடிக்க உன்னால்தான் முடியும்' - மனம் வெதும்பினாள் பூஜா.

'எப்போது பார்த்தாலும் இப்படியேதான் பேசுவது... அமைதியாகப் பேசினால்... 'ஏண்டி உனக்கு வேகமே வாராதா'ன்னு திட்டுவது... அவசரமாய் பேசினால்... 'நிதானமாய் பேசத் தெரியாதா'ன்னு கேட்பது... இவருக்கு இதுவே பிழைப்பாக போயிருச்சு...' பொறுமினாள்.

''என்னடி... லைனில் இருக்கிறாயா... இல்லையா?'' அவன் குரல் சுட்டது.

'லைனில் இல்லாமல் எங்கே போய்விடப் போகிறேன். பேய்க்கு வாழ்க்கைப் பட்டாகிவிட்டது. முருங்கை மரத்தில் ஏறுவதற்குப் பயந்தால் முடியுமா...'

நினைத்ததைச் சொல்லாமல்...

''மழை வந்து விடும்ங்க...'' என்று சொன்னாள் அவள்.

''ஏண்டி... நான் என்ன கேட்கிறேன்... நீயென்ன பதில் சொல்கிற? உனக்குப் பேசக் கூடத் தெரியாதா...?'' மீண்டும் தீயாய் சுட்டான் நரேந்திரன்.

அவன் மட்டம் தட்டிய விதத்தில் பூஜாவிற்கு கண் கலங்கிவிட்டது. இவன் இப்படியேதான் இருப்பானா..? முன்னால் போனால் கடிப்பதும்... பின்னால் போனால் உதைப்பதுமாக வாழ்நாள் பூராவும்... அவள் மனதைப் புரிந்து கொள்ளாமல் வதைத்துக் கொண்டேதான் இருப்பானா...?

''ஹரிஷை ஸ்கூலில் இருந்து கூப்பிட்டுக் கொண்டு வரணும்ங்க. மழை வருவதற்குள்ள போக வேண்டும்..'' அவள் இமைகளைச் சிமிட்டி.. இமையோரம் அரும்பிய கண்ணீர் துளி விழுந்து விடாமல் பாதுகாத்தவாறு கூறினாள்.

''ஆமாமில்ல... மழை வந்தால் பிள்ளை நனைந்து விடுவானே...'' அவன் புரிந்து கொண்டு பேசியதைக் கேட்கும்போது அவளுக்கு இதமாக இருந்தது.

சற்று முன் அவன் நாவால் சுட்ட புண்... உடனே ஆறிவிட... அவள் மனம் மலர்ந்தாள்.

''ஒண்ணு செய் பூஜா...''

'என்னங்க...?''

''சூடாய் வெங்காய பஜ்ஜியும் கேசரியும் செய்து வை...''

''ஹரிஷ்..?''

''நான் கூப்பிட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்...''

'அப்பாடி...' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். பூஜா... அதை வாய்விட்டு சொல்லி விட முடியாது... அவனுக்கு 'சுள்'ளென்று கோபம் வந்து விடும்.



'அது என்ன வார்த்தை... 'அப்பாடி'ன்னு? அதைக் கேட்கும் போதே பத்திக்கிட்டு எரிச்சலா வருது... என் முன் சொல்லாதே...' என்பான்.

அவனுக்கு பயந்து கொண்டு... அதை வாய் விட்டுச் சொல்லமாட்டாள். சில சமயம் அவளையுமறியாமல் சொல்லி விட்டு... நாக்கைக் கடித்துக் கொள்வாள். அவன் கண்டுகொள்ளாமல் விட்டுவிட வேண்டுமே என்று ஊரில் உள்ள தெய்வங்களையெல்லாம் துணைக்கு அழைத்து வேண்டிக் கொள்வாள். சில நேரங்களில் அவளுடைய வேண்டுதல் தெய்வங்களின் காதுகளில் விழும். அவன் ஏதோ யோசனையாய் இருந்து விடுவான். சில நேரங்களில் அவள் வேண்டும்போது தெய்வங்கள் தூங்கி விடும். அவன் உடனே கண்டு கொண்டு விடுவான்.

''ஏண்டி... எத்தனை தடவை சொன்னாலும் உன் மண்டையில் ஏறவே ஏறாதா...? நீயென்ன மக்கா...? எனக்குன்னு வந்து வாய்த்துத் தொலைத்திருக்கிறாயே... தத்தி... தத்தி...'' என்பான்.

இன்று வாய்வரை வந்த 'அப்பாடி'யை மனதிற்குள் தடுத்து நிறுத்தி விட்டோம் என்ற மகிழ்வில்... அவள் உற்சாகமாக...

''சரிங்க...'' என்று சொல்லிவிட்டு போனை அணைத்தாள்.

பள்ளிக்கு பறக்க வேண்டிய அவசியமில்லை என்ற விடுதலை உணர்வுடன்... மழை வந்தாலும் பயமில்லை - ஹரிஷ் நனையாமல் வீடு வந்து சேர்ந்து விடுவான் என்ற நிம்மதியும் ஒன்று சேர்ந்துகொள்ள... அவள் மெலிதான

குரலில் பாட்டொன்றை முணுமுணுத்தவாறு துணிகளை மடித்து வைக்க ஆரம்பித்தாள்.

**"சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு...**
**தென்றலே உனக்கெது சொந்த வீடு...**
**உலகம் முழுதும் பறந்து பறந்து...**
**ஊர்வலம் வந்து விளையாடு.."**

வாணலியில் காய்ந்த எண்ணெயில் பஜ்ஜிகளைப் பொரித்து எடுக்கும் போதும்... அவள் மனதில் அந்த மகிழ்ச்சி குடி கொண்டிருந்தது.

நரேந்திரன் கூட இப்படித்தான். வேலைப் பளு இல்லாத சமயங்களில் அவளைக் கொஞ்சுவான். அவளை இழுத்து அணைத்துக் கொண்டு... அவளது காதோரமாய் கேட்பான்.

"ஏண்டி என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டே? என்னிடம் என்னத்தைடி கண்டே...? நான் சுத்த வேஸ்டுடி..."

அவனுக்குத் தெரியும் - அவள் மனம் அவனிடம் மயங்கிப் போய்கிடக்கிறது என்பது...

தெரிந்து கொண்டே அவளைச் சீண்டுவதில் அவனுக்கு தனி இன்பம்.

பால் கொதித்து மேலே எழ... அடுப்பை அணைத்தாள் பூஜா.

'அப்பாவும், மகனும் வரட்டும்... அவங்க வந்த பின்னால் காபி கலந்து கொள்ளலாம்...'

முகம் கழுவி... தலைவாரிப் பின்னலிட்டவள், ஹாலுக்கு வந்தாள். நடுவில் ஹரிஷை வைத்துக் கொண்டு...



அவனை அணைத்தவாறு நரேந்திரனும்... அவளும் நின்று கொண்டிருந்த பெரிய புகைப்படம் ஹாலில் மாட்டப்பட்டிருந்தது. அதன் முன்னால் நின்று கணவனைப் பார்த்தாள்.

கன்னம் குழிய சிரித்துக் கொண்டிருந்த அவனின் கண்களில் தெரிந்த சிரிப்பு, அவளை வாவென்று அழைத்தது.

'பேய்க்கு வாழ்க்கைப் பட்டு...' சற்றுமுன் நினைத்ததை நினைத்துக் கொண்டாள்.

'இவன் பேயா..?' அவள் குனிந்து... புகைப்படத்தில் இருந்தவனை முத்தமிட்டாள்.

'கள்ளன்...' ரகசியப் புன்னகை அவள் முகத்தில் படர்ந்தது. முன்னால் போனால் கடித்து... பின்னால் போனால் உதைத்து... பாடாய்ப்படுத்தும் இவன்... புயல் போன்றவன். ஆயினும் குதிரைகளின் வேகம் கொண்டவன். எதையும் எதிர்த்து நிற்கும் வல்லவன்.

வாசலுக்கு வந்து... படிகளில் அமர்ந்தாள். அவனுக்கு அவள் வாசலில் அமர்ந்திருந்தால் பிடிக்காது.

"இது என்ன பழக்கம்?" என்பான்.

அவன் இல்லாத சமயங்களில் சில நேரம் பூஜா வாசலில் வந்து உட்காருவாள். அவன் எதிரில் இல்லாத போதும் அவன் வார்த்தைகள் அவளைக் கட்டுப்படுத்த...

'அவருக்குப் பிடிக்காதே...!' என்ற நினைவுடன் எழுந்து உள்ளே போய்விடுவாள்.

அது சிறைதான். அன்புச் சிறை... தன் அன்பை வெளியே காட்டாத.. நெருஞ்சி முள்ளைப் போன்ற சுபாவம்

உடையவன் போட்ட முள்வேலி... அதை பூவேலியாய் நினைத்து சிறைப்படுவதில் அவளுக்கு இருக்கும் சுகத்தை அவன் உணரவில்லையே என்ற ஏக்கம்தான் அவளுக்கு...

லேசாக மழைத்துளிகள்... பொட்டுப் பொட்டாக... போர்டிகோவிற்கு முன்னால் இருந்த சிமிண்ட் தரையில் விழுந்தன.

'மழை வந்து விட்டது.'

அவள் எழுந்து போர்டிகோவின் ஓரமாக வந்து நிற்ப தற்கும் மழை வலுப்பதற்கும் சரியாக இருந்தது. சடசட வென மழை நீர் தாரை தாரையாய் ஊற்ற... பூஜா கை நீட்டி மழைநீரில் விரல் நனைத்தாள்.

''ஸ்... ஆ...''

மழை நீரின் ஸ்பரிசத்தை வாய் விட்டு ரசித்தாள்.

மழை நீரின் ஸ்பரிசத்தை ரசிக்க.. முதன் முறையாக அவளுக்கு சொல்லிக் கொடுத்தவன் நரேந்திரன்தான். பூஜாவிற்கு மழையென்றால் சிறு வயதிலிருந்தே பயம்...

''மழையைப் பார்த்து பயப்படுகிற முதல் ஆள் நீதாண்டி...''

''அதெல்லாம் எனக்குத் தெரிந்து நிறைய ஆள் இருக்காங்க...''

''உனக்குத் தெரிந்ததெல்லாம் பயந்தாங்குளி மனிதர்கள் தான் போல...''

''நானொன்றும் பயந்தாங்குளி இல்லை...''

''மழையைப் பார்த்து பயப்படுகிறவள் தைரிய சாலியா?''

''மழை வந்தால் தனியே வரவேண்டியதுதானே... இதை யாரு... இடி... மின்னலை துணைக்கு அழைத்துக் கொண்டு வரச் சொன்னதாம்...''

பூஜா சிணுங்கியபோது... அந்த மழைகூட வரும் இடியைப் போல அவன் இடிச் சிரிப்பு சிரித்தான்.

''நீ சொன்னேன்னு மழையிடம் இதை நான் சொல்கிறேன்... இப்ப நீ என்கூட மழையில் நனைய வா...''

அவள் கைபிடித்து இழுத்து... கொட்டும் மழையில் அவன் நனைந்தபோது... பயத்துடன் அவன் மார்பில் அவள் ஒன்றிக் கொண்டாள்.




மழை நீரில் நனைந்து உடல் வெடவெடக்க நின்றவளின் தோள் தொட்டு அணைத்து அவள் முகம் நிமிர்த்தி இதழ்மீது முத்தமிட்டான் நரேந்திரன்.

அந்த நொடியில் பூஜாவிற்கு மழையைப் பிடித்துப் போனது. அதுவரை அஞ்சி நடுங்கியவள் அன்றிலிருந்து மழை நீரின் மீது பிரியமானாள்.

அன்று பனியில் குளித்த மலர்போல்... முகத்தின்மீது மழைத்துளிகள் படிந்திருக்க... கண் மூடிக் கிறங்கி நின்ற

வளின் முகத்தோடு முகம் புதைத்து நரேந்திரன் கூறிய வார்த்தைகளை இன்று வரை பூஜா மறக்கவில்லை.

''பூப்போல மனசுடி உனக்கு. அதே பூப்போல முகத்தையும் வைத்துக் கொண்டு என்னை மயக்கறயேடி...''

அன்று அந்த மழை நாளில் மயங்கியவன்... அதன் பின்னால் பல முறை அவளிடம் மயங்கியிருக்கிறான்.

'அதெல்லாம்... ஒருகாலம்..' பூஜா பெருமூச்சு விட்டாள்.

இப்போதெல்லாம் நின்று பேச அவனுக்கு நேரம் இருப்பதில்லை.

'நல்ல வேளையாய்... இவர் கையால் தாலி வாங்கிக் கொண்டேன்...'

அடிக்கடி இப்படி பூஜா நினைத்துக் கொள்வாள். தாலிகட்டிய கடமைக்காகவாவது... அவளைத் தேடி வீட்டுக்கு வந்து சேர்கிறானே...

வாசலில் கார் வந்து நின்றது... பூஜா அவசரமாய் ஓடி கேட்டைத் திறந்து விட்டாள். கார் உள்ளே நுழைந்ததும் கேட்டைப் பூட்டி விட்டு போர்டிகோவிற்கு அவள் போவதற்குள் நன்றாக நனைந்து விட்டாள்.

''அம்மா...''

ஆறு வயது ஹரிஷ் அவளிடம் தாவி வந்தான்.

''அம்மா நனைஞ்சிருக்ககேண்டி செல்லம். அப்பா கிட்டேயே இரு... நொடியில் டிரெஸ் சேன்ஜ் பண்ணிக் கிட்டு வந்து குட்டிப் பையனை தூக்கிக்குவேனாம்.'' மகனிடம் தள்ளி நின்று கொஞ்சினாள் பூஜா...

''அறிவிருக்காடி உனக்கு...? காரில் குடையிருக்கு. நான் இறங்கி வந்து கேட்டைத் திறந்து விட்டு பூட்டிக் கொள்ளமாட்டேனா...? இல்லை... நீதான் வீட்டுக்குள்ளே போய் குடையை எடுத்துப் பிடிச்சுக்கிட்டு மழையில் நனையாமல் வரக்கூடாதா...? இப்படி பைத்தியம் போல சொட்டச் சொட்ட யாராவது மழையில் நனைவாங்களா...?'' நரேந்திரன் எரிந்து விழுந்தான்.

'நாம் நனைந்தோமே... அது நினைவில்லையா...?'

பூஜா மனதிற்குள் கேட்டுக் கொண்டாள். இப்போதெல்லாம் அவள்... அவனிடம் எதைக் கேட்க நினைத்தாலும்... மனதிற்குள்தான் கேட்டுக் கொள்கிறாள். வாய் திறந்து பேசுவதில்லை.

நனைந்த உடையை மாற்றிக் கொண்டு... சமையலறைக்குள் புகுந்தாள். நரேந்திரன்... மகனுடன் பேசியபடி அவனுக்கு உடை மாற்றிவிட்டுக் கொண்டிருந்தான். பூஜாவின் மனம் கனிந்தது. கணவனுக்கும் மகனுக்கும் டிபனை டிரேயில் எடுத்துக் கொண்டு ஹாலுக்குள் சென்றாள். அவர்கள் இருவரும் டிவி பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

கால் நீட்டி சரிவாய் அமர்ந்திருந்த நரேந்திரனின் மடியில் கையூன்றி அவன் தோள் மேல் சாய்ந்தபடி... கதை பேசிக்கொண்டிருந்த ஹரிஷ்... நரேந்திரனின் ஜெராக்ஸ் காபி போல இருந்தான்.

'அப்படியே... அவனின் அப்பாவின் ஜாடை...'

கண்... மூக்கு... பேச்சு... என்று தன் ஒவ்வொரு அசைவிலும்... தகப்பனைக் கொண்டிருந்த மகனைப் பார்க்கும் போது... பூஜாவிற்குள்... ஏதோ பொங்கியது.

''ஹரிஷ் குட்டி அம்மாகிட்டே வா... டிபன் சாப்பிடலாம்...'' கணவனிடம் ஒரு தட்டை நீட்டியவாறு மகனை அழைத்தாள்.

அவன் நரேந்திரனின் தோள்மேல் சாய்ந்தவாறு ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தான். முகத்தில் இறுக்கம் தெரிந்தது.

கோபமாய் இருக்கிறானாம்.. அவன் வந்தவுடன்.. அவனுடைய அம்மா அவனைத் தூக்கிக் கொள்ளவில்லையாம். அதனால் அவள் கூப்பிட்டவுடன் அவன் வரமாட்டானாம்.

'அப்படியே... இவனுடைய அப்பாதான்...' பூஜா மகனின் கோபத்தை ரசித்தாள்.

நரேந்திரனும் இப்படித்தான் - கோபம் வந்தால்... அவளுடன் பேசமாட்டான். இறுக்கமாய் முகத்தை வைத்துக் கொள்வான். ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தபடி கட்டிலில் படுத்து... இருகைகளையும் மடித்து விரல்களைக் கோர்த்து தலைக்கு அணைவாக வைத்துக் கொள்வான். கால்களை ஆட்டியவாறு படுத்திருப்பான்.

''ஸாரிடா செல்லம்...''

ஹரிஷ் அசையவில்லை...

''என் கண்ணுல்ல...''

குழந்தையின் முகத்தில் இறுக்கம் தளர்ந்தது.

''அம்மா பாவமில்லையா...?''

அவன் தகப்பனின் தோளை விட்டு எழுந்து அமர்ந்து கொண்டான். பூஜா, கிடைத்த சந்தர்ப்பத்தை விடாமல்



இறுகப் பற்றிக் கொண்டு மகனின் அருகே அமர்ந்து கொண்டாள்.

''மழையில் நனைந்த டிரஸ்ஸோடு இருந்தால் என்ன ஆகும்?'' ஸ்பூனில் கேசரியை எடுத்து மகனின் வாயில் ஊட்டியபடி கேட்டாள்.

''கோல்டு வரும்...'' ஹரிஷ் கேசரியை சுவைத்துச் சாப்பிட்டவாறு பதில் சொன்னான்.

''கோல்டு முன்னாடி வந்தால்... பின்னாடியே என்ன வரும்...?'' மீதியிருந்த கேசரியை மகனின் வாயில் ஊட்டியபடி வினவினாள்.

''ஃபீவர் வரும்...'' விடையைச் சொல்லி விட்ட பெருமையுடன் அவன் தாயின் முகம் பார்த்தான்.

''குட்... என் சக்கரைக் கட்டி சரியாச் சொல்லிடுச்சே... அம்மாவுக்கு ஃபீவர் வந்தால் தாங்குவேனா?''

''நோ... நோ...''

''அதனாலதான் பர்ஸ்ட் டிரெஸ்சேன்ஜ் பண்ணினேன். நெக்ஸ்ட் குட்டிப் பிள்ளையைப் பார்க்க வந்தேன். இப்ப சொல்லு அம்மாகூட டூவா...?''

''நோ... நோ...''

ஹரிஷ் தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். அவனது தோள் வளைவில்... கணவனின் முகம் பார்த்த போது, நரேந்திரன் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

''சரியான கள்ளிடி நீ... பிள்ளையிடம் என்னமாய் பேசி, காரியத்தை சாதிக்கிற...''

'உன்னிடம்தான் என்னால் எதையும் சாதித்துக் கொள்ள முடிவதில்லை.'

பூஜா கணவனுக்கு காபி கலந்து கொடுத்து விட்டு, மகனுக்கு பாலை ஆற்றினாள். ஹாலில் சிரிப்புச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். ஹரிஷ் பேசியதைக் கேட்டு நரேந்திரன் சிரித்துக் கொண்டிருந்தான்.

வரிசையான பற்களைக் கொண்ட அழகான முக அமைப்பு அவனுடையது. சிரிக்கும்போது தெரியும் அவனது பல் வரிசை... எப்போதுமே பூஜாவை ஈர்க்கும். அன்றும் அவனது சிரிப்பு அவளை ஈர்க்க - அவனையே பருகுவது போல் ஒரு கணம் பார்த்தாள்.

''ஹா... ஹா... காக்காகிட்ட நரி பாட்டுப்பாடச் சொல்லிக் கேட்டதும்... காக்கா வடையை... அதன் காலுக் கடியில் வைத்துக்கிட்டு பாட்டுப்பாடுச்சாம். ஹா... ஹா...''

'பாட்டி வடை சுட்ட ஹைதர் அலி காலத்துக்கதையை உல்டா பண்ணுகிறான்...' பூஜாவின் முகத்தில் புன்னகை அரும்பியது.

''அது என்ன பாட்டு பாடுச்சு தெரியுமா...?''

''என்ன பாட்டுப்பா..?''

''ஏமாறாதே.. ஏமாறாதே... ஏமாற்றாதே... ஏமாற்றாதே... ஹா.... ஹா...''

தான் பாடிய பாடலை ரசித்து அவனே விழுந்து விழுந்து சிரிக்க... தகப்பனைப் பார்த்து ஹரிஷூம் அந்தச் சிரிப்பை பின்பற்றினான்.

''ஹா... ஹா...''

'இந்த நையாண்டியில் எல்லாம் குறைச்சல் இல்லை...' பூஜா இதழ்களை வளைத்து அழகு காட்டினாள்.

நரேந்திரனுக்கு அழகு சேர்க்கும் அம்சங்களில் இந்த நையாண்டியும்... கிண்டலும் கலந்த பேச்சும் ஒன்று...

தோட்ட வேலை செய்ய வந்த பெரியவர் ஒருவரிடம் ''உன் வயது என்ன..?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான் நரேந்திரன்.

உள்ளே வேலையாக இருந்த பூஜாவின் செவிகளில் அவர்களின் பேச்சு கேட்டது. அவள் அந்தப் பெரியவரைப் பார்க்கவில்லை... குரலை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எழுபத்தி ஏழு...'' என்றார் அந்தப் பெரியவர்.

''எழுபத்தி ஏழா...? நான் இருபத்தியேழுன்னுல்ல நினைச்சுக்கிட்டு இருந்தேன்...''

''உங்களுக்கு இருபத்தி ஏழு... மத்தவங்களுக்கு எழுபத்திஏழு...''

''இதைப்பாருடா... ஆளாளுக்கு வயதை மாத்திச் சொல்லுவியா?''

''சொன்னால் என்னா தப்பு...?''

''ஏய்ய்... போடி...''

இந்தக் கொஞ்சு கொஞ்சுகிறானே... எந்த இள வட்டத்தைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறான் என்ற நினைவுடன் டீகோப்பைகளைக் கையில் ஏந்திக் கொண்டு வெளியில் வந்த பூஜா... பஞ்சு போல் நரைத்த தலையுடன்

தோட்டத்தை கொத்திக் கொண்டிருந்த பெரியவரைப் பார்த்ததும் திகைத்துப் போனாள்.

''ஏங்க... இவரையா.. போடின்னு சொல்லிக்கிட்டு இருந்தீங்க?''

''ஆமாம். இந்த உலகம் சுற்றும் வாலிபனைத்தான் கொஞ்சிக் கொண்டிருந்தேன்... நீ டீயைக் குடு...''

அவனது உற்சாகம் ததும்பும் பேச்சில்... மற்ற இடங்களில் வேலை செய்வதைவிட... அதிகமான வேலையை... அங்கே செய்து விட்டுப் போனார் அந்தப் பெரியவர்.

'அது எப்படி... இவனால் மட்டும் சிறியவர்களில் இருந்து பெரியவர்கள்வரை கவர்பண்ண முடிகின்றது...'

பூஜாவின் நீண்ட நாள் சந்தேகங்களில் இதுவும் ஒன்று... அவனிடம் ஒருமுறை இதைப் பற்றி வாய்விட்ட போது...

**''சிறிசு என்றாலும்...**
**பெரிசு என்றாலும்...**
**சொகுசு என் மேலதான்...''** என்று பாடிவைத்தான்.

பூஜா காலியான டிபன் தட்டுக்களை சேகரித்து சமையலறை சிங்க்கில் போட்டுவிட்டு வந்தாள். நரேந்திரனும் ஹரிஷும் கதை பேசுவதைத் தொடர்ந்து கொண்டிருக்க... ஹரிஷின் புத்தகப் பையை எடுத்துக் கொண்டு அமர்ந்தாள்.

''ஹரிஷ்.. ஹோம் வொர்க் செய்யலாம் வா...''

''போம்மா.. நான் டாடிகிட்ட கதை கேட்டுக்கிட்டு இருக்கேன்.''



''கதை கேட்டுக்கிட்டே இருந்தால் ஹோம் வொர்க்கை யார் செய்றது? உன் ஹோம்வொர்க்கை நீதானே செய்யணும்.''

''ப்ளீஸ் மாம்... கிவ் மி சம் டைம்...''

''ஹரிஷ்...''

பூஜா கண்டிப்புடன் குரலை உயர்த்தவும் நரேந்திரன் முறைத்தான்.

''ஏண்டி... ஒருதடவை சொன்னால் உனக்குத் தெரியாதா...? உன் மண்டையில் எதுவுமே ஏறாதா..? அவனே விளையாட்டு மூடில் இருக்கிறான். அவனுக்கு இப்பவே ஹோம் வொர்க் சொல்லிக் கொடுக்கணும்னு என்ன அவசியம்? கொஞ்ச நேரம் கழித்து சொல்லிக் கொடுத்தால் ஆகாதா...? போடி... போய் வேலையைப் பாரு...''

பூஜாவின் முகம் வாடிவிட்டது.




**''எந்தக் குழந்தையும்**
**நல்ல குழந்தைதான்...**
**மண்ணில் பிறக்கையிலே... பின்**
**நல்லவராவதும்...**
**தீயவராவதும்...**
**அன்னை வளர்ப்பதிலே...''**

சமையலறை அலமாரியில் இருந்த ரேடியோ எப்.எம்.மில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அதைக் கேட்டுக் கொண்டே சிங்க்கில் பாத்திரங்களைக் கழுவி அடுக்கிக் கொண்டிருந்தாள் பூஜா...

'பிள்ளையின் முன்னால் என்னை டீஸ் பண்ணினால் அவன் எப்படி என்னை மதிப்பான்...?' அவள் மனம் வலித்தது...

குழந்தைக்கு அவன் செல்லம் கொடுத்து வளர்க்கட்டும். யார் வேண்டாமென்று தடுத்தது...? அதற்காக அவனைக் கட்டுக்குள் கொண்டு வர நினைக்கும் தாயைக் கடிந்து கொள்வதா..?

நரேந்திரனுக்கு கோபம் வந்தால்... மனதில் நினைத்ததை உடனே பேசிவிடுவான். அதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களின் மனம் நோகுமே என்று நினைத்துப் பார்க்க மாட்டான். அவர்களுக்கு தன்னிலை விளக்கம் சொல்ல சந்தர்ப்பமும் தர மாட்டான்.

''பூஜா...'' ஹாலில் இருந்து நரேந்திரன் அழைத்தான்.

பதில் சொல்லாமல் முன்னால் போய் நின்றாள் பூஜா. அவன் முகம் கடுத்தது.

''ஏண்டி... பதில் சொல்ல மாட்டாயா...?''

''எதுக்கு கூப்பிட்டீங்க...?''

''ம்ம்ம்... மண்ணாங்கட்டிக்கு கூப்பிட்டேன்...''

'அப்போ சரி... ஆளை விடுங்க...' பூஜா நகர யத்தனித்தாள்.



''ஏண்டி... ஒரு மனுசன் கூப்பிட்டால் ஏன்னு கேட்க மாட்டியா?''

''அதுதான் கேட்டேனே...''

''எப்போக் கேட்ட...? நான் கூப்பிட்டு... ஏழு மணி நேரமாகுது. நீ ஆடி அசைஞ்சுக்கிட்டு திருவாரூர் தேர்போல வந்து நின்னுக்கிட்டு... என் மூஞ்சியைப் பார்க்கிற... இதுதான் நீ ஏன்னு கேட்கும் லட்சணமா...?''

'இவன் மண்டகப்படி நடத்த ஆரம்பித்துவிட்டான்...' அலுப்புடன் நினைத்துக் கொண்டாள் பூஜா...

ஏதாவது ஒரு வகையில் பூஜாவிடம் குற்றம் கண்டு பிடிப்பதையே அவன் தொழிலாகக் கொண்டிருந்தது போன்ற ஒரு பிரமை சமீபகாலமாக அவளுக்குள் ஏற்பட்டு இருந்தது. அதை உறுதிப்படுத்துவதைப்போல அவனும் சிடுசிடுத்துக் கொண்டே இருந்தான்.

''முதல்ல... இப்படி முகத்தை ஒரு முழ நீளத்திற்கு தூக்கி வைத்துக் கொண்டு நிற்பதை நிறுத்துடி... எனக்கு பத்திக்கிட்டு வருது...''

'நீ என்னை சட்டியில் போட்டு வறுத்தெடுப்பாய்... நான் அதை ரசித்து சிரித்து மகிழ வேண்டுமா...?'

''உன்னை எப்போப் பார்த்தாலும் கொஞ்சிக்கிட்டே இருக்கணுமா? வாயைத்திறந்து ஒரு வார்த்தை பேசினா... உடனே முறைச்சுக்கிட்டு வருவியா...?''

'நீ வாயைத்திறந்தால் ஒரு வார்த்தைதான் பேசுகிறாயா...? என்னைத் திட்ட வாயைத் திறந்தால்... உனக்கு வார்த்தைகள் அருவியாய் கொட்டுமே...'

''ஏண்டி... நட்டு வைச்ச நெடுமரமாய் நிற்கிற? போ... போய் எனக்கும்... ஹரிஷுக்கும் டிபனை எடுத்து வை...''

இரவு உணவு பரிமாறுவது பூஜாவின் கடமை... ஆனால், அதை நரேந்திரன் சொல்லிய விதத்தில் பூஜாவின் மனம் காயப்பட்டது.

'நான் இந்த வீட்டில் யார்...?' என்ற எண்ணம் தலை தூக்கியது...

'நான் ஒரு வேலைக்காரியா... இல்லை வீட்டுக் காரியா...?''

கேள்வியை மனதில் புதைத்துக் கொண்டே மௌன மாக டைனிங் டேபிளுக்குச் சென்றாள் பூஜா... நரேந்தி ரனுக்கும்.... ஹரிஷுக்கும் தட்டை எடுத்து வைத்தாள்.

''ஹரிஷ் சாப்பிட வா...'' என்று குரல் கொடுத்தாள்.

மகனுடன் விளையாடிக் கொண்டிருந்த நரேந்திரன் திரும்பிப் பார்த்தான். அவனுக்குத் தெரியும் - இந்த அழைப்பு நரேந்திரனுக்கானது என்று...

'இவளிடம் இது ஒன்று...' எரிச்சலுடன் மகனைத் தூக்கிக் கொண்டு டைனிங் டேபிளுக்குப் போனான். பூஜாவைப் பார்த்துக் கொண்டே சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

அவனுடைய முகம் பார்க்காமல் பூஜா பரிமாற ஆரம்பிக்கவும்... அவனது பொறுமை பறிபோனது.

''ஏண்டி... எதிரிக்குப் போடுவது போல சாப்பாட்டைப் போட்டால் எப்படிடீ.. தொண்டையில் இறங்கும்...''



பூஜா லேசாக நிமிர்ந்து அவனைப் பார்த்து விட்டு... ஹரிஷுக்கு... ஸ்பூனால் ஊட்டி விட ஆரம்பித்தாள்.

அதைக் கண்ட நரேந்திரனின் கோபம் அதிகரித்தது...

''ஏய்ய்... அவனைத் தனியார் சாப்பிடவிடு... தானாய் சாப்பிடத் தெரியலைன்னா... ஸ்கூலில் லஞ்ச்சை எப்படி சாப்பிடுவான்...?''

'பிள்ளைக்கு... காலையிலேயும்... நைட்லேயும்தான் ஊட்டி விட முடியுது... மதியம் தானாய் சாப்பிடுகிறேன் பேர் வழின்னு அப்படியே சாப்பிடாமல் வந்து விடுகிறான். இதுக்கும் இவன் தடா போட வேண்டுமா....' பூஜாவின் தாய்மை தவித்தது.

''சொல்றது காதில் விழுகுதா இல்லையா...?''

அதற்கு மேலும் ஹரிஷிற்கு ஊட்டிக் கொண்டிருந்தால் நரேந்திரன் ருத்ர தாண்டவம் ஆடிவிடுவான் என்பதை அறிந்திருந்ததால் பூஜா மௌனமாக எழுந்து கொண்டாள்.

ஹரிஷ் தானாக சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தபடி சமையலறையில் ஏதோ வேலையிருப்பதைப் போலச் சென்றவளுக்கு கண்ணீர் மல்கியது.

**''மௌனத்தில் விளையாடும்**
**மனச்சாட்சியே...**
**ஆயிரம் நினைவாகி...**
**ஆனந்தக் கனவாகி...**
**காரியம் தவறானால்...**
**கண்களில் நீராகி...**
**மௌனத்தில் விளையாடும்**
**மனச்சாட்சியே...''**

சமையலறையின் அலமாரியில் இருந்த வானொலியில் பாடல் ஒலிக்க... நரேந்திரன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்... அவன் பார்வையின் பொருள் புரிந்தவளாய்... அவள் ரேடியோவை அணைத்தாள்.

''எல்லாரும் லேப்டாப்போடு அலைகிற இந்தக் காலத்தில் உன் அம்மா ரேடியோவோடு அலைகிறாள்டா... எல்லாம் என் நேரம்... ம்ஹூம்... வாடிப்பட்டி வனிதாவையோ... இல்லை - அலங்காநல்லூர் அமுதாவையோ கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால்... வருசாவருஷம்... வண்டியைக் கட்டி மாமனார் வீட்டிலிருந்து சீரும் அனுப்பு வாங்க... வந்தவளும் சொன்ன பேச்சைக் கேட்டு குடித்தனமும் பண்ணியிருப்பா. அதை விட்டுவிட்டு... உன் அம்மாவின் பின்னால் போனதற்கு அனுபவிக்கிறேண்டா ஹரிஷ்...''

ஆறு வயது ஹரிஷ்... பெரிய மனிதன் போல... தகப்பனின் பேச்சிற்கு தலையை ஆட்டிக் கொண்டிருந்தான். அவன் வளர்ந்த பின்னால் இப்படிப்பட்ட பேச்சுக்களை எப்படி எடுத்துக் கொள்வானோ என்ற கவலை பூஜாவின் மனதில் எழுந்தது.

''பொண்ணு பார்க்கப் போனேண்டா... இவ தலையைக் குனிந்து கொண்டு வந்து நின்னா.. அடக்க ஒடுக்கமா இருக்கிறாளேன்னு நினைச்சேன். தனியாய் பேசணுமுன்னு கேட்டேன். என் மாமனார் - அதுதான் இவளைப் பெத்த மனிதர் - என்னவோ அவர் மகளை நான் தூக்கிக் கொண்டு போய் விடுவேன்னு சொன்னதுபோல பதறிப் போய் முறைச்சார். சரி... இது கதைக்கு ஆகாதுன்னு இவள் வேலைக்குப் போய்விட்டு வரும் வழியில் காத்திருந்து வழியை மறிச்சேன்...''

நரேந்திரன் கூறுவதை.. சுவாரஸ்யமாகக் கதை கேட்கும் பாவனையில் கேட்டுக் கொண்டிருந்தான் ஹரிஷ்...

## 4

**பா**லைக் காய்ச்சியவாறே... நரேந்திரனின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த பூஜாவிற்கு அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்தது.

ஆபீஸ் முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பூஜா... வழியில் காத்திருந்த நரேந்திரனைக் கண்டதும் மிரண்டு போனாள். அவனைக் கடந்து எப்படிப் போவது என்று தவித்தாள். நடக்க முடியாமல் அவள் கால்கள் பின்னிக் கொண்டன.

அவளுடைய அவஸ்தைகளை ரசித்த வண்ணம் நரேந்திரன் - இயல்பாக நடந்து அவள் அருகில் வந்து நின்றான்.

''உன்னிடம் பேசணும்...''

''அப்பாகிட்ட கேட்கணும்...''

''நான் உன்னைப் பெண் பார்க்க வந்தேனா? இல்லை... உன் அப்பாவைப் பெண் பார்க்க வந்தேனா...?''

''என்ன நீங்க... இப்படியெல்லாம் பேசறீங்க...?''

''வேறு எப்படிப் பேசச் சொல்கிற...?''

''நான் வீட்டிற்குப் போகணும்...''

''போ...''

'அப்பாடி... போன்னு சொல்லி விட்டான்...'

அவள் ஆசுவாசப் பெருமூச்சு விட்டபடி நகர முனைய... நரேந்திரன் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

''என்னிடம் பேசிவிட்டுப் போ...''

''என்ன பேசணும்...''

அவள் அழமாட்டாத குறையாய் வினவினாள். நரேந்திரன் அவளருகில் நெருங்கி வரவும்... அவள் அவசரமாய் சுற்று முற்றும் பார்வையை ஓட்டினாள்.

''ஹலோ... எனக்கு உன்னை முத்தமிடும் உத்தேசமெல்லாம் இல்லை...'' என்றான் அவன்.

''என்னது...'' அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது.

''சுற்றி... யார் யார் இருக்கிறாங்கன்னு பார்த்து வைக்கிறாயே... அதுக்கு அவசியமில்லைன்னு சொன்னேன்...''

பூஜாவிற்கு கைவிரல்கள் தந்தியடிக்க ஆரம்பித்து விட்டன. அவளுக்கு இது புதிது. இந்த உணர்வு புதிது.. இந்த பேச்சு புதிது... ஆனால், இதை உருவாக்கியவனைப் பார்த்தால் புதியவனாகத் தோன்றாமல் என்னவோ காலம்காலமாய் அவளுடன் பழகியவன் போலத் தோன்றும் விந்தையை ஆச்சரியத்துடன் உணர்ந்தாள் அவள்.

அவன் அளவான உயரத்துடன் - அளவான உடலமைப்புடன் - அழகான பல்வரிசையுடன் இருந்தான். வசீகரமாகச் சிரித்தான். அவனது பேச்சில் தெறித்து விழுந்த கேலியும் கிண்டலும் அவளை சாரலாய் நனைத்தன... அவளருகில்



அமர்ந்திருந்தவர்கள், அவன் வாயைத் திறந்து உதிர்க்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் வெடித்துச் சிரிப்பதை பெண் பார்க்கும் வைபவத்தன்றே... ஜன்னலின் பின்னால் ஒளிந்திருந்து பார்த்திருந்தான் பூஜா..

கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் ஆயர்குல மக்கள்... ஏன் மகிழ்ச்சியாக இருந்தார்கள்...?

அவர்களுக்கு நடுவில்.. எதையும் இலகுவாக எதிர்கொள்ளும் மாயக்கண்ணன் இருந்தான். குழலூதி கோபியரை மயக்க வைத்தான். நகைச்சுவையாய் பேசி... ஆயர்குல மக்களை சிரிக்க வைத்தான். அவன் இருக்கும் இடத்தில் உற்சாகம் கரைபுரண்டோடும்.

இவனும் அதைப்போலவே இருப்பதை உணர்ந்தவளின் இதயம் பூவாய் மலர்ந்தது.

அவளுடைய முகத்தைப் படித்தவன் வாய்திறந்து சிரித்தான். அந்தச் சிரிப்பு அவளை மயக்க...

'சிரிக்காதே..' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

'உன் சிரிப்பு என்னை மயக்குகிறது...'

மயங்கியவள்... தன் மயக்கத்தை வெளிப்படுத்தாமல் மௌனமாய் தலைகுனிந்து நின்றாள்... அவள் அப்படி முகம் சிவக்க... தரையில் பார்வையைப் பதித்து நின்ற கோலம் அவனை ஆகர்ஷித்தது. அவன் உதடுகளில் அவளது நாணத்தை அங்கீகரிக்கும் ஆண்மையின் கர்வப் புன்முறுவல் உதித்தது.

''ம்ம்ம்...''

''என்னைப் பார்...''

'உன்னை எப்படி என்னால் பார்க்கமுடியும்...? உன் பார்வையை நேருக்கு நேராய் சந்திக்கும் திராணி என் பார்வைக்கு இல்லை...'

அவள் பார்க்கவில்லை... அவன் இன்னும் அதிகமாகச் சிரித்தான். அவள் வெட்கத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''என்ன வேலை பார்க்கிற...?''

''உங்களுக்குத் தெரியாதா?''

''உன் வாயைத் திறந்து நீ சொல்லு.''

''பிரைவேட் கம்பெனியில் அக்கவுண்ட்ஸ் பார்க்கிறேன்.''

''கல்யாணத்திற்குப் பின்னால் நீ வேலைக்குப் போக முடியாது...'' அப்போதே இவளுடைய சிறகைப் பிய்த்துப் போட்டிருக்கிறான். இவளுக்குத்தான் அது தெரியாமல் போய்விட்டது. அவனுடைய பேச்சிலும் சிரிப்பிலும் மயங்கிப் போய்... தன் சுயத்தைத் தொலைத்து விட்டாள்.

''ஏன்... லேடீஸ் வேலைக்குப் போனால் உங்களுக்குப் பிடிக்காதா?''

''என் லேடி வேலைக்குப் போனால் பிடிக்காது.''

'என் லேடி...' - அவனுடையவளாக அவளைக் கருதி விட்டானாம்... அந்த மகிழ்வில் தன்னையறியாமல் 'சரி'யென்று சொல்லி விட்டாள் பூஜா.



''சரி...''

''தட்ஸ் குட்...''

அவன் அதற்குமேல் அதை பெரிய விசயமாகவே எடுத்துக் கொள்ளவில்லை. 'நான் சொல்வதைக் கேட்பது உன் கடமை' என்ற தொனியில் அடுத்துப் பேச ஆரம்பித்தான்.

''என்னைப் பிடிச்சிருக்கா...?''

''என்... என்ன இப்படிக் கேட்கறீங்க...?''

''அப்படி என்னத்தைக் கேட்டுவிட்டேன்? முத்தமா கேட்டு விட்டேன்...? நீ சொல்வதை யாராவது கேட்டு விட்டால் என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க...? உனக்கு... உன் அப்பாவே தேவலை போல இருக்கே...''

'இவன் ஏன் முத்தத்திலேயே நிற்கிறான்...?' பூஜாவின் முகம் சிவந்தது. அவன் அதை ரசனையோடு பார்த்தான். வேண்டுமென்றே அவன் அவளைச் சீண்டுவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

''இப்படி நடுரோட்டில் நிறுத்திக் கேட்கும் கேள்வியா இது?''

''வேறு எங்கே கேட்க...? உன் வீட்டில் கேட்கலா முன்னா... உன் அப்பா என்னைக் கொலைக் குற்றவாளி போலப் பார்க்கிறாரு. போதாத குறைக்கு... துணைக்கு வர ஒரு பாட்டிகள் பட்டாளமே ரெடியாயிருக்கு. எனக்கு உன்னைச் சுத்தி நூறு பேரை நிப்பாட்டிக் கொண்டு உன்னிடம் ரொமான்ஸ் பண்ணப் பிடிக்காது. வரவும் வராது. அதனால்தான் வழியில் மறித்துக் கேட்கிறேன். சொல்லு... என்னைப் பிடிச்சிருக்கா...?''

''என் அப்பாவிடம் சொல்லியிருக்கிறேனே...''

''உன் அப்பா உண்மை சொல்கிறாரா... இல்லை பொய் சொல்றாரான்னு எனக்கு எப்படிம்மா தெரியும்...? எனக்கு உன் அபிப்பிராயம் என்னன்னு தெரியணும். என்னைப் பிடிக்காத பெண்ணின் கழுத்தில் நான் தாலியைக் கட்ட முடியாது.''

அன்றே அவன் அதில்தான் தெளிவாக இருந்தான். அந்த தெளிவு ஏன் பூஜாவிடம் இல்லாமல் போனது..?

'என்னைப் பிடிக்காத பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்ட மாட்டேன்' என்று சொன்னானே... அதைப் போல 'என்னைப் பிடிக்காதவன் கட்டும் தாலிக்கு கழுத்தை நீட்ட மாட்டேன்' என்று அவள் ஏன் சொல்லாமல் போனாள்...? அதை விட்டுவிட்டு.

''எனக்குப் பிடித்திருக்கு...'' என்று காதலுடன் சொல்லி வைத்தாள்.

அவன் மகிழ்ந்து போனான். ஆனால், கடைசி வரை ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை... 'பிடித்திருக்கு...' என்று அவளைப் பார்த்து அவன் சொல்லவில்லை. சொல்லவேயில்லை.






ஹாலில் பேச்சு சத்தம் கேட்கவில்லை. ஹரிஷுடன் அவன் தூங்கப் போய்விட்டதைப் புரிந்து கொண்டாள் பூஜா... சமையலறையின் ஜன்னல் கதவுகளைச் சாத்தினாள். வாசல் கதவு பூட்டப்பட்டிருக்கிறதா என்று சரிபார்த்தாள்.

மாடிப்படியில் ஏறக் கால் வைத்தபோது... ஹாலின் சோபாவில் விரிந்து கிடந்த போட்டோ ஆல்பம் கண்ணில் பட்டது.

'அப்பாவும், பிள்ளையும் போட்டோவை பார்த்தாங்களா...?'

போட்டோ ஆல்பத்தை அலமாரியில் வைப்பதற்காக எடுத்தாள். விரிந்திருந்த பக்கத்தில் ஊட்டியில் ஹரிஷுடன் அவள் நின்று கொண்டிருந்த படம் இருந்தது.

ஹரிஷின் இரண்டாவது பிறந்த தினத்தை ஊட்டியில் கொண்டாட முடிவு செய்து... அவர்கள் போயிருந்தபோது எடுத்த படம் அது...

அங்கேதான் பூஜா அந்தக் கேள்வியை நரேந்திரனிடம் கேட்டாள்.

''என்னைப் பிடிச்சிருக்கா...?''

மலர் கண்காட்சியில் இருந்த மலர்களை, மகனுக்குக் காட்டிக் கொண்டிருந்த நரேந்திரன் வியப்புடன் அவளைத் திரும்பிப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

''என்னடி கேட்ட...?''

பூஜாவிற்கு புது மணபெண் போல் வெட்கம் வந்து விட்டது. முதலிரவில் அவனுடன் பேச முயன்றபோது... நா உலர்ந்தது போல்... தொண்டை வறண்டுவிட்டது. அவள் வெட்கத்துடன் தரையைப் பார்த்தாள்.

''ஏய்ய்... நில்லு... உனக்கு என்ன... நேத்துத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்ட புதுப் பெண்ணுன்னு நினைப்பா...?''

பூஜாவின் மனதிலிருந்த உணர்வுகள் சட்டென பொசுங்கிப் போயின. அவனுடன் நூறு வருடங்கள் வாழ்ந்து முடித்தாலும் முதன் முதலாய் அவனைப் பார்த்த போது அவளுக்குள் உண்டான கிளர்ச்சி மாறாமல் அப்படியேதான் இருக்கும் என்பதை எப்படி அவனிடம் சொல்வது என்று புரியாமல் மௌனித்துவிட்டாள் பூஜா...

''இதோ பார்... நாம் கல்யாணம் பண்ணி.. பிள்ளை பெற்று... பெயரும் வைத்து... அவனை வளர்க்கவும் ஆரம்பித்துவிட்டோம். இப்போப் போயி... இப்படி ஓரக்கண்ணால் பார்ப்பது... கால் விரலால் தரையை நோண்டி பள்ளம் பறித்து ஊற்றுத் தண்ணியை வரவைப்பதுன்னு அபத்தமாய் பண்ணிக்கிட்டு இருக்காதே... செய்கிற உனக்கு ஒன்றுமில்லை... பார்க்கிற எனக்குத்தான் கொடுமையா இருக்கு...''

இதற்கு மேலும் அவனிடம் காதல் மொழி பேச பூஜாவிற்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது...?

அதன் பின்னால் மனதில் எழும் உணர்வுகளை வாய் விட்டுச் சொல்லாமல் மனதிற்குள்ளேயே பூட்டி வைக்கக்





கொள்ள ஆரம்பித்தாள் அவள்... எதையும் வாய் திறந்து சொல்ல, ஆயிரம் யோசனைகள் செய்து - பேச ஆரம்பித்தாள். கூடியவரை மௌனமாகவே இருந்து விடுவாள்.

எவ்வளவுதான் கட்டுப்படுத்திக் கொண்டாலும், சில சமயம் அவளுக்குக் கஷ்டமாக இருக்கும்.

அவன் வாய் விட்டுச் சிரிக்கும்போது.. நகைச் சுவையாய் பேசும் போது.. ஹரிஷுடன் விளையாடிக் கொண்டிருக்கும்போது... லுங்கி பனியனில் இயல்பாக பேப்பர் படித்துக் கொண்டிருக்கும்போது, என்று இந்த நேரம் என்று இல்லாமல் அவள் மனம் பொங்கித் தொலைக்கும். அவனது தோற்றத்தில் கிளர்ச்சியுறும்... அவன் முகம்பற்றி முத்தமிட்டு அவன் தோளில் தலைசாய்த்துக் கொள்ள வேண்டும்போல் தோன்றும்.

செய்ய மாட்டாள். மௌனமாக அவன் இருக்கும் இடத்தைவிட்டு அகன்று... வேறு இடத்திற்குப் போய் விடுவாள். ஏதேனும் ஒரு வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள். அந்த வேலையில் மனம் லயிக்க... தன் மனதைக் கட்டுக்குள் கொண்டு வருவாள்.

அவன் - அவளுடைய கணவன்தான்... அவள் கழுத்தில் அணிந்திருக்கும் தாலியை அணிவித்தவன் தான்... அவள் நெற்றியில் இட்டிருக்கும் பொட்டிற்கு சொந்தக்காரன்தான். அவளைத் தொட்டுத் தழுவி அவளுடன் குடும்பம் நடத்தியவன் தான்.

ஆனாலும் அவன் எங்கோ ஒரு இடத்தில் எட்டாத உயரத்தில் இருப்பது போன்ற பிரமை அவளுக்குள் வேர் விட்டு வளர்ந்து விருட்சமாகி நின்றது.

அவன் அவளுக்குக் கிட்டாத கனியாகத் தோன்ற ஆரம்பித்திருந்தான். கட்டிய கணவனுக்காக தான் ஏங்கும் ஏக்கத்தை வெளியில் சொல்லாமல் மனதில் வைத்துக் கொண்டு மருகினாள் பூஜா.

சற்று முன் மழையில் நனைந்த முடி முன்நெற்றியில் படர்ந்திருக்க, முகத்தில் மழைத் துளிகளுடன் அவ வீட்டுக்குள் வந்த போது பார்க்க மிகவும் கவர்ச்சிகரமா இருந்தான்.

அவள் மனம் கிளர்ந்தாள். தன் முந்தானையால் அவ தலை துவட்டி அவன் முன்நெற்றியில் முத்தமிட்டு விட ஆசைகொண்டாள்.

செய்யவில்லை. நினைத்ததைப் பார்வையால்கூட வெளிப்படுத்தாமல் மகனைக் கவனிக்கச் சென்று விட்டாள்

ஒரு பெருமூச்சுடன் போட்டோ ஆல்பத்தை அலமா யில் வைத்துப் பூட்டிவிட்டு படியேறினாள் பூஜா.

படுக்கையறைக் கதவைத் தாழிட்டு விட்டு கட்டிலி அமர்ந்து... நடுவில் படுத்திருக்கும் மகனைப் பார்த்தாள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் ஹரிஷ்.

'தூங்கி விட்டான்...'

மகனின் மேல் அணைவாய் கை போட்டுக் கொண் படுத்து விழி மூடியவள் - மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்தாள்

ஆழ்ந்த உறக்கத்தில் அவளிருக்கும் போதுதான் அந் ஸ்பரிசத்தை உணர்ந்தாள்.

அது அவளுக்கு பழக்கமான தொடுகை. அவ காதலுடன் கிளர்ந்து உணர்ந்த ஸ்பரிசம். சட்டென்று விழித்து



கொண்டாள். நரேந்திரன் அவளருகில் இருந்தான். பூஜாவின் கண்கள் ஹரிஷைத் தேடின. அவனை அறையிலிருந்த இன்னொரு கட்டிலில் படுக்க வைத்திருந்தான் நரேந்திரன்.

''பூஜா...''

நரேந்திரன் குரல் தாபத்துடன் அவள் காதருகில் ஒலித்தது. அவள் பதில் சொல்லவில்லை. அதை அவன் லட்சியம் செய்யவில்லை. அவளது மௌனத்தை சட்டை செய்யாமல் வேட்கையுடன் அவளை அணைத்துக் கொண்டான்.

அல்லும் பகலும் அவனையே நினைத்து உருகிக் கொண்டிருந்தவள். அந்த அணைப்பில் உருகவில்லை. அவன் முகம்பார்த்து முத்தமிடத் தவித்தவள் - இப்போது அவன் முத்தமிட்ட போது சிலிர்க்கவில்லை. அவன் தலைமுடியில் விரல்விட்டு கோத ஆசைப்பட்டவள் - அவன் முடி கோதவில்லை. அவன் அவள்மேல் படர்ந்து பரவியபோது - துக்கத்துடன் விழிமூடிக் கொண்டாள்.

அவளுக்கு வேண்டியது இது இல்லை. இந்த நள்ளிரவுக் கூடல் அவளை கௌரவப்படுத்தவில்லை. அவளின் அவன் மீதான காதல் இந்த உடல் சேர்க்கையால் திருப்தி அடையாது. அவள் இதையும் தாண்டிய எதையோ தேடித் தவித்தாள். விலகிப் படுத்த நரேந்திரன் உறங்க ஆரம்பிக்க, அவள் உறக்கத்தைத் தொலைத்தாள். அவள் விழிகளில் இருந்து வழிந்த மௌனக் கண்ணீர் இமையோரம் வழிந்து கூந்தலை நனைத்தது.

**'மௌனத்தில் விளையாடும்
மனச்சாட்சியே...!'**

இதை எழுதிய கவிஞருக்கு கோயில் கட்டிக் கும்பிட வேண்டும் என்று அந்த நொடியில் அவளுக்குத் தோன்றியது.

## 6

"அர்ச்சனை யார் பேருக்கும்மா பண்ணணும்...?" அர்ச்சகர் கேட்டார்.

பூஜா, நரேந்திரனின் பெயரைச் சொன்னாள். அபிஷேகம் நடக்க.. கண்மூடி பெருமாளை வேண்டிக் கொண்டாள். கோயில் பிராகாரத்தைக் சுற்றி வரும்போது... தேவகி எதிரே வந்தாள்.

"என்ன பூஜா... கோயிலுக்கு வந்தயா...?" என்று கேட்டாள்.

'இல்லை... சினிமாவிற்கு வந்தேன். கோயில் பிராகாரத்தைச் சுற்றி வருகிறவளைப் பார்த்து... கேள்வி கேட்கிறாள் கேள்வி.'

மனதில் எரிச்சலுடன் - முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டு தேவகியைப் பார்த்து புன்னகை பூத்தாள் பூஜா.

"ஆமாம் தேவகி.."

"இன்னைக்கு என்ன.. அதிசயமாய் கோயில் பக்கம் வந்திருக்கிற.. வீடுதான் கோயில்ன்னு உன் நரேன் சொல்லுவாரே... இன்னைக்கு எப்படி வெளியில் விட்டார்."



'இன்றைக்கு விடுவார்' கர்வத்துடன் நினைத்துக் கொண்டாள் பூஜா...

அன்றைக்கு அவர்களின் திருமண நாள். காலையில் நரேந்திரன் அலுவலகம் கிளம்பும் போது... நயந்து... அவன் பூஜா அதை நினைவுபடுத்தினாள். அவன் அதைச் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளாமல், கையிலிருந்த பேட்டரியில் எதையோ தேடிக் கொண்டிருந்தான். மீண்டும் பூஜா அவனை,

"என்னங்க..." என்று அழைத்தபோது...

"என்னடி..." என்றான் எரிச்சலாக.

"சாயங்கால் சீக்கிரம் வீட்டுக்கு வந்து விடுகிறீங்களா...?"

அவள் சொல்லக் கூடாத எதையோ சொல்லிவிட்டதைப் போல.. அவன் பார்வையால் அவளை எரித்தான்.

பூஜா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'இப்படியாவது இவனுக்கு இன்றைய நாளை நினைவுபடுத்த வேண்டுமா...?'

பேசாமல் போய்விட.. அவள் மனம் துடித்தது. ஆனால், அவள் நகரவில்லை.

"ஏண்டி.... என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரிகிறது? ஒரு மனுஷன் உட்கார நேரமில்லாம உழைக்கக் கொட்டுகிறானேன்னு கொஞ்சமாவது உனக்கு எண்ணம் இருக்கா...? சாயங்காலம் சீக்கிரமாய் வந்து என்னத்தை வெட்டி முறிக்கச் சொல்கிற."

'நான் எதையும் வெட்டி முறிக்கச் சொல்லவில்லை உன் வார்த்தைகளால் என் மனதை வெட்டாமல் இரு...'

இதை எழுதிய கவிஞனுக்கு கோயில் கட்டிக் கும்பிட வேண்டும் என்று அந்த நொடியில் அவளுக்குத் தோன்றியது.




"அர்ச்சனை யார் பேருக்கும்மா பண் ணனும்...?" அர்ச்சகர் கேட்டார்.

பூஜா, நரேந்திரனின் பெயரைச் சொன்னாள். அபிஷேகம் நடக்க.. கண்மூடி பெருமாளை வேண்டிக் கொண்டாள். கோயில் பிராகாரத்தைக் சுற்றி வரும்போது... தேவகி எதிரே வந்தாள்.

''என்ன பூஜா... கோயிலுக்கு வந்தயா...?'' என்று கேட்டாள்.

'இல்லை... சினிமாவிற்கு வந்தேன். கோயில் பிராகாரத்தைச் சுற்றி வருகிறவளைப் பார்த்து... கேள்வி கேட்கிறாள் கேள்வி.'

மனதில் எரிச்சலுடன் - முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டு தேவகியைப் பார்த்து புன்னகை பூத்தாள் பூஜா.

''ஆமாம் தேவகி..''

''இன்னைக்கு என்ன.. அதிசயமாய் கோயில் பக்கம் வந்திருக்கிற.. வீடுதான் கோயில்ன்னு உன் ஹஸ்பெண்ட் சொல்லுவாரே... இன்னைக்கு எப்படி வெளியில் விட்டார்.''



'இன்றைக்கு விடுவார்' கசப்புடன் நினைத்துக் கொண்டாள் பூஜா...

அன்றைக்கு அவர்களின் திருமண நாள். காலையில் நரேந்திரன் அலுவலகம் கிளம்பும் போது... தயக்கத்துடன் பூஜா அதை நினைவுபடுத்தினாள். அவன் அதைச் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளாமல், கையிலிருந்த லேப் டாப்பில் எதையோ தேடிக் கொண்டிருந்தான். மீண்டும் பூஜா அவனை,

''என்னங்க...'' என்று அழைத்தபோது...

''என்னடி...'' என்றான் எரிச்சலாக.

''ஈவினீங் சீக்கிரம் வீட்டுக்கு வந்து விடுகிறீங்களா...?''

அவள் சொல்லக் கூடாத எதையோ சொல்லிவிட்டதைப் போல.. அவன் பார்வையால் அவளை எரித்தான்.

பூஜா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'இப்படியாவது இவனுக்கு இன்றைய நாளை நினைவுபடுத்த வேண்டுமா...?'

பேசாமல் போய்விட அவள் மனம் துடித்தது. ஆனால், அவள் நகரவில்லை.

''ஏண்டி... என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரிகிறது? ஒரு மனுசன் உட்கார நேரமில்லாம உழைச்சுக் கொட்டுகிறானேன்னு கொஞ்சமாவது உனக்கு எண்ணமிருக்கா...? ஈவினிங் சீக்கிரமாய் வந்து என்னத்தை வெட்டி முறிக்கச் சொல்கிற.''

'நான் எதையும் வெட்டி முறிக்கச் சொல்லவில்லை. உன் வார்த்தைகளால் என் மனதை வெட்டாமல் இரு...'

''கேட்கிறவனைப் பார்த்தால் உனக்கு கேணப்பயலாய் தோணுதா...? வாயைத்திறந்து பதில் சொல்லு.''

''இன்னைக்கு நம்ம கல்யாண நாள்...''

அவன் முகம் பார்க்காமல்... வேறு திசை பார்த்துக் கொண்டு அவள் கூறினாள். அவனது கோபம் தணிந்தது.

''இன்னைக்கு என்ன தேதி...?'' என்று அவளிடமே கேட்டு வைத்தான் அவன்.

அவள் வழக்கம்போல்... மௌனத்திரையின் மறைவில் ஒதுங்கிக் கொண்டாள்.

அவளிடமிருந்து பதில் வராமல் போகவும் அவனே செல்ஃபோனை உயிர்ப்பித்து அதில் தேதியைப் பார்த்தான்.

''இன்னைக்குத்தான் அதுவா...'' என்று முணுமுணுத் தான்.

'எது...?' என்று அவள் கேட்கவில்லை.

'சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். என் கடமை முடிந்தது.' என்ற பாவனையுடன் சமையலறையில் தஞ்சம் புகுந்தாள்.

அவளது முதுகையே பார்த்த நரேந்திரனுக்கு என்னவோ போல் இருந்தது. அவனைச் சொல்லியும் குற்றமில்லை. அவன் வேலை அப்படிப்பட்டது. நின்று ஒரு நிமிடம் யோசிக்கக்கூட நேரம் இல்லாத வேலை.

'காலையில் இதற்காகத்தான் ஸ்வீட் செய்திருந்தாளா?' அவன் மனம் குற்ற உணர்வில் மூழ்கியது.



அவன் எழுந்து சமையலறைக்குச் சென்றான். அவள் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தாள்.

''பூஜா...''

அவளது கை, காய் வெட்டுவதை நிறுத்தியதேயொழிய அவள் திரும்பிப் பார்க்கவில்லை. ஏனென்றும் கேட்க வில்லை.

அவனுக்குள் கோபம் குமிழ் விட்டது.

''என்னடி... திமிரா?'' என்று கேட்டான்.

''இல்லை...'' அவள் ஒரு வார்த்தையில் பதில் சொன்னாள்.

''கூப்பிடக் கூப்பிட பேசாமல் நிற்கிற...''

''என்னன்னு சொல்லுங்க.''

''ஈவினிங் சீக்கிரமாய் வரமுடியாது.''

'இதுதான் எனக்குத் தெரியுமே...' என்ற பாவனையில் அவள் காய்களை வெட்டுவதைத் தொடர்ந்தாள்.

அவளுடைய செய்கை அவனுடைய கோபத்தை அதிகப்படுத்தியது. அவள் வாய்விட்டுச் சண்டை போட்டால் தேவலை என்று அவனுக்கு இருந்தது. இப்படி மௌனத்தின் பின்னால் மறைந்து கொண்டு அவனை அவள் இம்சிப்பதாய் அவன் நினைத்தான்.

அவர்களது முதலாவது திருமண நாளை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள்.

அன்று முழுவதும் நரேந்திரன் பூஜாவின் அருகிலேயே இருந்தான். சினிமாவுக்கு அழைத்துச் சென்றான். கோயி

லுக்குப் போனார்கள். ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட்டார்கள். அன்றைய இரவை முதலிரவாக்கினார்கள்.

ஆனால்... அடுத்தடுத்த திருமண நாள்களில் நரேந்திரனுக்கு வேலை வந்து விட்டது.

''பூஜா ப்ளீஸ்... கோபித்துக் கொள்ளாதே. இன்னைக்கு டைட் வொர்க்கும்மா. இந்தா என் வெட்டிங்டே பிரசன்டேஷன்'' என்று.. அழகான நெக்லஸை அவள் கழுத்தில் இரண்டாவது திருமண நாளின் போது அணிவித்தான்.

''இந்த ஸாரியை உனக்காக வாங்கிக்கிட்டு வந்தேன் பூஜா. கட்டிக்கொள். பட் என்னால் உன்னுடன் இன்னைக்கு இருக்க முடியாது. வேலையிருக்கு... பை...'' என்று மூன்றாவது திருமண நாளின் போது பறந்தான்.

நான்காவது திருமணநாளில் பூ வாங்கிக் கொடுத்து விட்டு 'டாட்டா' சொன்னான்.

ஐந்தாவது திருமண நாளில் அதுவும் இல்லை.

இப்போது என்னடாவென்றால்... திருமண நாளையே மறந்து விட்டான்.

பூஜாவிற்கு கண்கள் கரித்தது. இமைகளைக் கொட்டி வேக மூச்சுக்களை விட்டுத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

நரேந்திரன் கையில் இருந்த வாட்ச்சில் மணி பார்த்தான்.

''நேரமாகுதுடி...''

''என்னை என்ன செய்யச் சொல்கிறீங்க...?''

''எனக்கு வேலையிருக்குடி...''



''வேலை செய்யுங்க...''

''என்னால் உன்னோடு எங்கேயும் வரமுடியாது.''

''வர வேண்டாம்.''

இப்படி ஒற்றை வரியில் பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறவளிடம் தொடர்ந்து எப்படிப் பேசுவது?

நரேந்திரன் கோபத்துடன் வெளியேறப் போனான்.

''எனக்குக் கோயிலுக்குப் போகணும்...''

பூஜாவின் குரல் அவனைத் தடுத்து நிறுத்த... அவன் நேரமாகும் நினைவில் அவளை முறைத்தான்.



**வி**ழியுயர்த்தி அவனைப் பார்க்காமல் பூஜா வினவிய விதம் நரேந்திரனைப் பாதித்தது.

'ஏன் இப்படி பிஹேவ் பண்ணுகிறாள்? இந்த ஸ்டேட்டஸைக் காப்பாற்ற நான் ஓடும் ஓட்டம் பற்றி இவளுக்குத் தெரியுமா...? திருமண நாளைக் கொண்டாடினால்தான் இந்தத் திருமணத்தை நான் மதிக்கிறேனென்று அர்த்தமாகுமா...? என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்கிறாளே...'

''இந்நேரம் வரைக்கும் நான் என்ன சொன்னேன்...? என்னால் சீக்கிரம் வர முடியாதுன்னு சொன்னேனா இல்லையா...?''

''ம்ம்ம்...''

''அப்புறமும் என்னைக் கோயிலுக்கு வான்னு கூப்பிட்டால் என்ன அர்த்தம்...?''

''உங்களை யார் கூப்பிட்டது?''

''ஏண்டி... என்னையென்ன வேலைவெட்டி இல்லாத வெட்டிப்பயல்ன்னு நினைச்சயா...?''

'உன்னைப் போய் அப்படி நினைப்பேனா? நீ யாரு...? உன் லெவல் என்ன? கட்டின பெண்டாட்டியிடம் பேசுவதற்கு நிமிசக் கணக்கு பார்ப்பாயே.. உன்னைப் போய் அப்படிச் சொல்லிவிட முடியுமா?'

''இங்கே பாருடி... கேள்வி கேட்டால் வாயைத் திறந்து பதிலைச் சொல்லு. இப்படி ஊமைக் கோட்டான்போல நின்னுக்கிட்டு மனசுக்குள்ள பிலிம் ஓட்டாதே...''

'இதையெல்லாம் கண்டுபிடித்து விடுவான்.' பூஜாவிற்கு லேசாக சிரிப்பு வந்தது. அதை மறைக்க சட்டென்று முகம் திருப்பிக் கொண்டாள்.

அந்தச் செய்கை நரேந்திரனை இன்னும் கோபப்படுத்தியது.

''எதுக்குடி அந்தப் பக்கம் பார்க்கிற? என் முகத்தைப் பார்க்கப் பிடிக்கலையா...?''

'பிடிக்காமல்தான் உனக்குக் கழுத்தை நீட்டினேனா...?'

''உன்கிட்ட என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்டேனா... இல்லையா...?''

'அதைத்தானே நானும் கேட்டேன். நீ பதில் சொல்ல மாட்டேன்னு கடைசி வரை பிடிவாதமாய் சாதித்து விட்டாயே...'

''நீயும் அப்போ பிடிச்சிருக்குன்னு சொல்லித்தானே தலையை ஆட்டின...?''

'இப்போதும் உன்னை பிடித்துத்தான் இருக்கிறது. உனக்குத்தான் என்னைப் பிடிக்காமல் போய்விட்டது.'

மனதிற்குள் பேசியபடி வேலையைக் கவனித்துக் கொண்டிருந்த பூஜாவை உறுத்துப் பார்த்தான் நரேந்திரன்.

''வரவர... வீட்டுக்கு வரவே எனக்குப் பிடிக்கலைடி...''

சட்டென்று நிமிர்ந்து நரேந்திரனை தீர்க்கமாய் பார்த்தாள் பூஜா. அவள் கண்களில் அடிபட்ட பார்வை இருந்தது. அந்தப் பார்வையில் தெரிந்த பகிரங்க குற்றச்சாட்டை நரேந்திரனால் எதிர்கொள்ள முடியவில்லை.

''இப்ப எதுக்கு இப்படிப் பார்க்கிற...?''

''எப்படிப் பார்க்கிறேன்...?''

''ஒரு கொடுமைக்காரனைப் பார்ப்பதைப் போல பார்க்கிற...''

''அது உங்கள் கற்பனை...''

''கற்பனையெல்லாம் உனக்குத்தாண்டி வரும்...''

''அதுதானே... நீங்கள்தான் பிராக்டிகல் மேனாச்சே...''

''என்னடி... வாய்க் கொழுப்பா...? பேச்சு நீளுது...''

''உள்ளதைச் சொன்னேன்.''

''நீ பெரிய உண்மை விளம்பி...''

''பொய்க்காரியுமில்லை...''

''வார்த்தைக்கு வார்த்தை எதிர் பேச்சு பேசாதே. என்னால் உன்னோடு வெளியில் வர முடியாது.''

''நானும் அழைக்கவில்லை...''

இந்த வார்த்தையில் தெரிந்த கோபம் நரேந்திரனைச் சுட்டது. அவன் அக்கினியாய் பார்த்தான்.

''வேற எதுக்குடி... என்னைக் கூப்பிட்ட?''

''கோயிலுக்கு நான் போகணுமுன்னு சொன்னேன்...''

''தனியாகவா...?''

''வேற வழி...?''

''வீட்டில் சாமி கும்பிடு...''

''எனக்கு கோயிலுக்குப் போய்த்தான் சாமி கும்பிடணும்...''

''உனக்கு எங்கே போகணுமோ போ... என்கிட்ட சொல்லாதே...''

''சொல்லாமல் போனால் நீங்க சும்மாவா விடுவீங்க...?''

''வீட்டுப் பெண்கள் பாதுகாப்பாய் வீட்டுக்குள்ளேயே இருக்கணும்னு நான் நினைக்கிறது குத்தமில்லைடி. மனுசாஸ்திரத்தில் என்ன சொல்லுது தெரியுமா...?''

பூஜாவிற்கு அவன் என்ன சொல்லப் போகிறான் என்று தெரியும். அதைத்தான் மூச்சுக்கு முந்நூறு தடவை அவன் சொல்லிக் கொண்டிருப்பானே. ஆனாலும்,



''தெரியாது...'' என்று சொன்னாள்.

''பெண்கள் சிறுவயதில் தகப்பனின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமாம். கல்யாணமான பின்னால் புருஷனின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமாம். வயதான காலத்தில் மகனின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமாம்.''

'ஆக மொத்தம் பெண் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு உடமை... அவ்வளவுதான்போல. மற்றபடி அவளுக்கும் ஒரு மனமிருக்கிறது. அவளும் ரத்தமும், சதையும் கொண்ட ஒரு மனுஷி என்கிற எண்ணம் மனுஷனுக்கு ஏன் வரவில்லை...?'

''என்னடி நினைச்சுக்கிட்டு இருக்கே...?''

''அந்த மனுஷன் ஆம்பளைதானே? வேற எப்படிப் பேசுவான்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்.''

ஒரு நொடி நரேந்திரனின் கண்களில் பாராட்டுத் தோன்றி மறைந்தது.

''ஸோ... நீ ஃபெமினிசம் பேச ஆரம்பித்து விட்டாய்...''

''நான் எந்த இசமும் பேசவில்லை. இன்னைக்கு எனக்கு வெட்டிங்டே. நான் கோயிலுக்குப் போகணும்.''

''உனக்குத் தனியாவும் எனக்குத் தனியாவும் வெட்டிங் டே வருதா? நமக்குன்னு சொல்லித் தொலைடி.''

பூஜா சொல்லவில்லை. நரேந்திரன் பல்லைக் கடித்தான்.

''இப்போ உனக்கு கோயிலுக்குப் போகணும். அவ்வளவுதானே... போயிட்டு வா.''

''ஹப்பா...'' என்றாள் பூஜா.

''எதுக்கு இந்த 'ஹப்பா...?'' என்றான் நரேந்திரன்.

''இந்த வீட்டுப் படியைத்தாண்டி வெளியுலகத்தை நான் பார்க்க... எவ்வளவு நேரம் போராட வேண்டியிருக்கு...''

''நீ போராளியாத்தான் மாறிக்கிட்டு வர்றடி... நானும் உன்னை வாட்ச் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன்.''

பூஜா அமைதி காத்தாள்.

'இது போராட்டம்தான். அஹிம்சா வழியில் நான் நடத்தும் போராட்டம். மௌனத்தை அரணாகக் கொண்டு மௌனத் திரையின் மறைவினிலே நான் நடத்தும் போராட்டம். என்றாவது ஒரு நாள் நீ என்னைப் புரிந்து கொள்ள மாட்டாயா என்ற ஏக்கத்தில் நான் நடத்தும் போராட்டம்'.

அவள் பேசுவாளா என்று ஒரு நிமிடம் தாமதித்த நரேந்திரன், அவள் மீண்டும் மௌனத்தில் நுழைந்து விட்டதை உணர்ந்து கொண்டவனாக, எரிச்சலுடன் வெளியேறிவிட்டான்.

அவசரமாக வாசலுக்கு ஓடி நின்றாள் பூஜா. அவன் காரில் ஏறி, ஓங்கிக் கதவை அறைந்து சாத்திக் கொள்வதைக் கேட்டபடி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கார் வெளியேறியதும் தளர்ந்த நடையுடன் சென்று சோபாவில் அமர்ந்து தலைசாய்த்துக் கொண்டாள்.



## 8

மாலையில் ஹரிஷை அழைத்துக் கொண்டு கோயிலுக்கு கிளம்பினாள் பூஜா.

மனதில் நரேந்திரன் காலையில் பேசிய பேச்சுக்களே சுழன்று கொண்டிருந்தன.

'மனுவாம்... மனு! அவன் பெண்களுக்கு நீதி செய்திருக்கிறானா...? அவன் இழைத்ததெல்லாம் அநீதிதான். அவன்தான் அப்படி எழுதி வைத்தானா...? இல்லை... அவனுக்குப் பின்னால் வந்த ஆண்குலம், அவன் எழுதியதைத் தங்களின் வசதிக்குத் தகுந்தவாறு மாற்றிக் கொண்டார்களா...?

பெண்களை அவன் பூஜித்தானா...? இல்லை நசுக்கினானா...? பெண்களைப் போற்றும் இடத்தில் செல்வம் செழிக்கும் என்று சொன்னவன் ஏன்... பெண்கள் சுதந்திரமாக இருக்க அருகதையற்றவர்கள் என்றும் சொன்னான்...?

இரு மனம் இணையும் திருமண பந்தம் என்றுமே நிலைத்து நிற்கும் தன்மை வாய்ந்தது என்று சொன்னவன் ஏன்... ஆண்களின் மறுமணத்தை ஆதரித்தான்...?

ஒருத்திக்கு ஒருவன் என்று சொன்னவன் ஏன் ஒருவனுக்கு ஒருத்தி என்று சொல்லவில்லை?

பெண்களுக்கான நெறிமுறைகளைப் பக்கம் பக்கமாய் வரையறுத்து வைத்தவன் ஆண்களின் பலதார மணத்தை ஏன் அனுமதித்தான்...?

திருமணம் என்பது வாழ்வில் ஒருமுறை என்பது பெண்களுக்கு மட்டும்தானா? ஆண்களுக்கு அது இல்லையா?

அந்த வகையில் பாரதி மேன்மையானவன் என்று நினைத்துக் கொண்டாள் பூஜா.

'கற்பு என்பது இரு கட்சிக்கும் பொதுவானது...' என்று முதன் முறையாக முழக்கமிட்ட ஆண்மகன் பாரதி...

அவன் மனுவை அறியாதவனா...? ஆனாலும் மனு சொன்னதைத் தூக்கி உடைப்பில் போட்டானே... அவனல்லவோ முழுமையான ஆண்மகன்!'

கோயில் வந்து விட்டது. ஆட்டோவுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு இறங்கி உள்ளே நடந்தாள்.

''பூஜா...''

'அம்மா கூப்பிடுவதைப் போல இருக்கே...' அவசரமாகத் திரும்பினாள் பூஜா.

மரகதம்தான் நின்று கொண்டிருந்தாள்.

''பாட்டி...'' என்று தாவிய ஹரிஷைத் தூக்கிக் கொண்டு மகளைப் பார்த்தாள்.

''இன்னைக்கு நீ கோயிலுக்கு வருவேன்னு நினைச்சேன்.''

''எப்படிம்மா...? யட்சினி சொல்லுச்சா...?''

''இல்லை. நம் வீட்டுக் காலண்டர் சொல்லுச்சு...''

''காலண்டர் தேதியைத்தானே சொல்லும்?''

''அந்தத் தேதிதான் உனக்குக் கல்யாணமான தேதியாச்சே...''



''அம்மா...!'' என்று நெகிழ்ந்து போனாள் பூஜா. மரகதத்திற்கு பூஜாவோடு சேர்த்து மூன்று பிள்ளைகள். மூத்தவன் சத்யன். பேங்கில் உத்தியோகம். திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பன். அடுத்தவள் ரமா. பெங்களூரில் கணவனுடன் குடித்தனம் பண்ணுகிறாள். பூஜாதான் கடைக்குட்டி.

ஆனாலும் கடைசி மகளின் திருமண நாளை மரகதம் நினைவில் வைத்திருந்தாள்.

''நீ சாமி கும்பிட்டு விட்டு வா. நான் இப்படி படியில் உட்கார்ந்திருக்கிறேன்...''

மரகதம்... அங்கிருந்த மண்டபத்தின் படியில் அமர்ந்து கொண்டாள். ஹரிஷ் அவள் மடியில் சாய்ந்து கொண்டான்.

''ஹரிஷ்... வா சாமி கும்பிடலாம்.''

பூஜா பிராகாரத்தை சுற்ற ஆரம்பித்தபோது, ஹரிஷ் மரகதத்திடம் ஓடிவிட்டான்.

பிராகாரத்தை சுற்றி வந்த பூஜா தேவகியின் பார்வையில் பட்டுவிட்டாள்.

''உன்னை எப்படி உன் ஹஸ்பெண்ட் வெளியில் விட்டார்?''

தேவகியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல்,

''நேற்று நீ வெளியில் போன போல் இருக்கே...'' என்று பேச்சை மாற்றினாள் பூஜா.

''உனக்கு எப்படித் தெரியும்...?''

''உன் வீட்டிற்கு எதிர் வீட்டில் இருக்கிறேன். எனக்குத் தெரியாமல் இருக்குமா...?''

"அவ்வளவு தெரிந்தவள், நான் தனியாக வெளியே போனதைப் போல கேட்கறயே..."

தேவகி... அவளுடைய கணவனுடன்தான் போனாள். பூஜா பதில் சொல்லாமல் சிரித்தாள்.

"படத்திற்குப் போனோம்." என்றாள் தேவகி.

"அப்படியா...?" பூஜாவின் மனம் வெறுமையானது.

"ஆமாம் பூஜா... நான் ரொம்ப நாளா உன்னை ஒண்ணு கேட்கணுமுன்னு நினைச்சுக்கிட்டே இருந்தேன்."

"நினைத்ததைக் கேட்டுவிடு..."

"நீ ஏன் உன் ஹஸ்பெண்டோட வெளியில் போறதில்லை?"

'அப்படி ஒரு வேண்டுதல் எனக்கிருக்கு. என் வயித்தெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாமல் போடி.'

"என்ன பூஜா... பதிலே சொல்ல மாட்டேன்கிற...?"

'சொல்லாமல் நீ விட்டு விடுவாயா...?'

பூஜா மெலிதான புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு தேவகியைப் பார்த்தாள்.

"அவருக்கு அதுக்கெல்லாம் நேரமில்லை தேவகி.."

"என் ஹஸ்பெண்டும் பிஸி மேன்தான். இருந்தாலும் எனக்காக நேரத்தை ஒதுக்குவதில்லையா...?"

'இப்போ உனக்கு என்னடி வேணும்..? என் புருஷனுக்கு மனசில்லைன்னு நான் உன்னிடம் அழுது புலம்பணும். அதுதானே உன் ஆசை...? அதுக்கு வேற ஆளைப் பாரு...'



தேவகியிடம் விடைபெறுவதைப் போல நின்று விட்டாள் பூஜா.

"என் அம்மா கோயிலுக்கு வந்திருக்கிறாங்க தேவகி. நான் அவங்ககிட்டப் பேசணும். நீ கிளம்புகிறாயா...?"

"ஓ... யெஸ்..."

எவ்வளவு கிண்டியும் பூஜா வாயைத் திறக்காத வருத்தத்துடன் தேவகி போய்விட்டாள்.

பூஜா மரகதத்தை நோக்கிச் சென்றாள். வாழைப்பழத்தை உரித்துக் கொடுத்து ஹரிஷை சாப்பிட வைத்துக் கொண்டு இருந்த மரகதம், மகளைப் பார்த்துச் சிரித்தாள்.

"உட்காரும்மா..."

பூஜா கீழ்படியில் அமர்ந்து கொண்டாள். மகளின் வாடிய முகத்தைக் கண்ட தாயுள்ளம் துணுக்குற்றது.

"ஏம்மா என்னவோ போல் இருக்கே...?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே..."

"சும்மா சொல்லாதே. எனக்கு உன்னைத் தெரியாதா? நான் உன்னைப் பெற்று வளர்த்தவ பூஜா..."

"நிஜமாவே ஒண்ணுமில்லைம்மா."

"மாப்பிள்ளை உன்கூட வரலையா...?"

மரகதம் கேட்டு விட... பூஜா அமைதியாக படியில் விரலால் கோலம் போட்டுக் கொண்டே -

"வரலை..." என்று ஒற்றைச்சொல்லில் பதில் கூறினாள்.

'ஏன்...?" மரகதம் தூண்டித் துருவினாள்.

''ஏன்னு என்னையே ஏம்மா கேட்கறீங்க... உங்க மரு மகனைப் போய்க் கேளுங்க. அவருக்கு நிற்க நேரமில் லையாம்...''

பெண்மையின் மனதை பெண்மையே அறியும். பூஜாவின் முகம் வாடியிருப்பதற்கான காரணத்தை மரகதம் கண்டு கொண்டாள்.




இரவு வெகுநேரம் கழித்து வீடு திரும்பினான் நரேந்திரன். கதவைத் திறந்து விட்ட பூஜா, மௌனமாக உள்ளே சென்றாள்.

'ஏன் லேட்டாய் வந்தேன்னு ஒரு வார்த்தை கேட்கிறாளா?'

அன்று அலுவலகத்தில் காணாமல் போன முக்கியமான தகவல்கள் அடங்கிய ஃபைலின் சிடியைத் தேடி சோர்ந்து போயிருந்த நரேந்திரன் எரிச்சல்பட்டான்.

குளித்து... உடைமாற்றி, அவன் டைனிங் டேபிளுக்கு வந்தபோது இரவு மணி பதினொன்று ஆகி விட்டிருந்தது.

''ஹரிஷ் தூங்கிட்டானா...?''

''அவன் பதினொரு மணி வரைக்கும் முழிச்சிருக்க மாட்டான்.''

மற்ற நேரங்களில் ஒற்றைச் சொல்லில் பதிலளிப்பவள் இன்று நீளமாகப் பேசுவதன் காரணம் அவனுக்குத் தெரிந்து தான் இருந்தது. சுள்ளென்ற கோபம் வந்தது அவனுக்கு.



''உன் அம்மாவிடம் என்னைப் பத்தி கம்ப்ளெயிண்ட் பண்ணினாயா...?''

''எனக்கு அந்தப் பழக்கம் இல்லை...''

''அப்புறம் எப்படிடீ.. உன் அம்மா என் செல்லுக்கு ஃபோன் பண்ணி அப்படிப் பேசினாங்க...?''

''எப்படிப் பேசினாங்க...?''

''வேலை வேலைன்னு நான் அலைவதைக் குறைத்துக் கொள்ளணுமாம். மத்த நாளில் லேட்டா வந்தாக்கூட பரவாயில்லையாம். இன்னைக்கு சீக்கிரம் வந்து உன்னைக் கோயிலுக்கு கூட்டிக்கிட்டு போயிருக்கணுமாம்...''

''ம்ஹூம்... வாழ்க்கையை... வாழ்க்கையாய் வாழ்ந்து பார்த்தவங்க. மனசில் தோணினதைச் சொல்லியிருப்பாங்க.''

''அது எப்படி இத்தனை நாளாய் இதைச் சொல்லாதவங்க இன்னைக்கு மட்டும் சொல்கிறாங்க...?''

''ஏன்னா... இன்னைக்கு என் வெட்டிங் டே...''

''பல்லை உடைப்பேன்.''

''அது.. எதுக்கு...?''

''நம்ம வெட்டிங்டேன்னு சொல்லித்தொலை...''

பூஜா நிமிர்ந்து அவனையே இமைக்காமல் பார்த்தாள்.

'இப்படிப் பார்வையாலேயே இவள் கொன்று தொலைப்பாள்.'

''இன்னிக்கு கோயிலுக்குப் போயிருந்தேன்.''

''அதுதான் தெரியுமே... காலையில் என்கூட மல்லுக்கு நின்னயே...''

‘உனக்கு அதுதானே தெரியும்...? என் மனது தெரியாதே...’

‘‘திரும்பவும் உனக்கு வாயடைச்சுப் போச்சா...? பேச ஆரம்பிச்சதைப் பேசித் தொலைடி...’’

‘‘அங்கே அம்மாவைப் பார்த்தேன்...’’

‘‘உடனே உனக்கு நான் பண்ணுகிற கொடுமையைச் சொல்லிப் புலம்பினாயாக்கும்...?’’

‘‘அப்படியெல்லாமில்லை..’’

‘‘பொய் சொல்லாதே...’’

‘ஆமாம்... உன்னிடம் ‘பொய் சொல்லி’ன்னு பெயர் வாங்கணும்னு எனக்குத் தலைவிதி. கோயிலில் என்ன டான்னா அம்மா ‘பொய் சொல்லி’ங்கிறாங்க. வீட்டில் நீ ‘பொய் சொல்லி’ங்கிறாய். மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் அடி விழும் என்கிறது சரியாகத்தான் இருக்கு.’

‘‘திரும்பவும் ஊமையாகி விட்டாயா? வாயைத் திறடி...’’

‘‘ ‘கோயிலுக்கு ஏன் தனியா வந்தே? மாப்பிள்ளை உன்கூட வரலையா?’ன்னு கேட்டாங்க.’’

‘‘நீ உடனே புலம்பினாயாக்கும்?’’

‘நீ அதிலேயே இரு...’

‘‘ஏய்ய்.. இப்படி வாயடைச்சுப் போய் நின்னே... நான் உன் சாப்பாடே வேண்டாமுன்னு எழுந்திருச்சுப் போயிடுவேன்.’’

‘‘அவருக்கு வேலை இருக்குன்னு சொன்னேன்...’’



‘‘அதுக்காக மட்டும் எனக்கு ஃபோன் போட மாட்டாங்களே...’’

‘‘ ‘இன்னைக்கு உனக்கு கல்யாண நாளாச்சே! இன் னைக்குமா வேலைன்னு சொல்லணும்?’னு கேட்டாங்க...’’

‘‘அவங்களுக்கு எப்படி நம் கல்யாணத் தேதி தெரியும்?’’

பூஜா பரிமாறுவதை நிறுத்திவிட்டு நரேந்திரனைப் பார்த்த பார்வையில் அவன் நெளிந்தான்.

‘‘அதைத்தான் நானும் கேட்கிறேன். மூணு பிள்ளை களைப் பெத்த என் அம்மாவுக்கு என் கல்யாணத் தேதி நினைவில் இருக்கு... ஆனால் தாலிகட்டிய உங்களுக்கு அது நினைவில் இல்லை. இதை எங்கே போய் நான் சொல்ல...?’’

‘‘அதுதான் உன் அம்மாவிடம் போய் சொல்லி யிருக்கிறாயே...’’

‘‘இல்லை... நான் இதையெல்லாம் சொல்ல வில்லை...’’

பூஜா சமையலறைக்குள் சென்று விட்டாள். நரேந்திரன் சாப்பிட்டு முடித்து எழுந்தான். கை கழுவி விட்டு அவன் திரும்பும்போது... பால்தம்ளரை அவனிடம் நீட்டினாள் பூஜா... வாங்கிக் கொண்டான். பால் இதமான சூட்டுடன் இருந்தது.

‘ஆற்றியிருக்கிறாள்’ - அவன் மனம் குளிர்ந்தது.

சமையலறை வாசலில் நின்று... பாலைப் பருகிய படி... பார்வையால் அவளைப் பருகினான்.

ஒரு சிட்டுக் குருவியின் சுறுசுறுப்போடு... இங்கும்... அங்கும் நடந்து கொண்டிருந்தவளின் மேல் அவனுக்குக் காதல் பிறந்தது.

''பூஜா...'' என்று அழைத்தான்.

''ம்ம்ம்...'' என்றாள் அவள் - திரும்பாமலேயே.

''இன்றைக்கு ஆபிஸில் செம வேலைடி...''

''ம்ம்ம்...''

''அதனால் உனக்கு ஒரு ஸாரிகூட வாங்கிக்கிட்டு வர முடியலை.''

''ம்ம்ம்...''

''கோபமா...?''

''இல்லை...''

''இந்தா...''

எதைக் கொடுக்கிறான் என்று நிமிர்ந்து பார்த்த பூஜா திகைத்தாள்.

நரேந்திரன் பாதிப் பாலைக் குடித்து விட்டு... மீதிப் பால் இருந்த தம்ளரை அவளிடம் நீட்டிக் கொண்டிருந்தான்.

பூஜாவின் விழிகள் ஒளிர்ந்தன.

'இதுதானே... நிஜமான கல்யாணப் பரிசு...'

அவள் அவனுடைய எச்சில் பாலை... ஆனந்தத்துடன் வாங்கிக் கொண்டாள். அதைப் பருக ஆரம்பித்தாள். அன்று முழுவதும் அவள் மனதில் எழுந்த பெண்ணுரிமை வாதங்கள் போன இடம் தெரியாமல் மறைந்தன. நரேந்திரனும் அதையே நினைவுபடுத்தி அவளை வம்புக்கு இழுத்தான்.

''இது என் எச்சில்பால்...''

''தெரியும்...''



''மேடம்... காலையில் மனுவைத் தாக்கிப் பேசினீங்க... இப்ப அதெல்லாம் மறந்து போச்சா...''

பூஜா பதில் சொல்லாமல், ஒரு சொட்டு பாலைக்கூட மீதம் வைக்காமல் குடித்து முடித்து விட்டுத் திரும்ப - நரேந்திரன் அவள் பின்னால் வந்து நின்று அணைத்தான்.

அவனது கை... அவள் தோள் தொட்டுத் திரும்பிய போது... அவளுக்கு துக்கமாக இல்லை... அவளைத் தன்னுடன் அவன் இறுக்கிக் கொண்டபோது அவள் விழி மூடிக் கொள்ளவில்லை.

## 10

அதிகாலையில் விழிப்பு வந்த போது... தன் மேல் படர்ந்திருந்த நரேந்திரனின் கரத்தை உணர்ந்தாள் பூஜா. அவளுடைய முகத்திற்கு வெகு அருகாமையில் தெரிந்த அவனுடைய முகம் அவளைக் கிளர்ச்சியில் ஆழ்த்தியது. அவனுடைய முடி கோத விரைந்த மனத்தை அடக்காமல் அவன் முடியில் விரல் விட்டுக் கோதினாள். அவனது முன் நெற்றியில் முத்தமிட மனம் ஆசைப்பட - மெல்ல அவனது நெற்றியில் இதழ் பதித்தாள்.

'அன்னைக்கு எப்படி இருந்தியோ... அப்படியே இருக்கடி... நீ...'

முதல்நாள் இரவில் அவன் அணைப்பில் அவள் அடங்கியபோது, அவள் காதோரமாய் நரேந்திரன் சொன்னதை நினைத்துக் கொண்டாள்.

'நீ மட்டும் என்னவாம். அன்றைக்கு நான் பார்த்தபோது எப்படி இருந்தாயோ - அதே போல் மாறாமல்தானே இருக்கிறாய் - என்ன ஒன்று... உன் குணம்தான் மாறிவிட்டது'

பூஜா எழுந்து கொண்டாள்.

ஈர முடியை, உலர்வதற்காக விரித்து விட்டபடி சமையலறையில் காபி கலந்து கொண்டிருந்தவளின் கவனத்தை ஜன்னலில் அமர்ந்திருந்த சிட்டுக்குருவிகள் கவர்ந்தன.

**''சிட்டுக்குருவி... சிட்டுக்குருவி...**
**சேதி தெரியுமா...? என்னை**
**விட்டுப் பிரிஞ்சு...**
**போன கணவர் வீடு திரும்பல...''**

என்று பாடிக் கொண்டே... காபிக் கோப்பைகளை டிரேயில் அடுக்கித் தூக்கிக் கொண்டு திரும்பியவள் திகைத்து நின்றாள்.

சமையலறை வாசலில்... கையில் பேப்பரோடு நரேந்திரன் நின்று கொண்டிருந்தான்.

''விழிச்சுட்டீங்களா...?''

''ம்ம்ம்... பேப்பரைப் படிக்கணுமுன்னா காபி வேணும். அதுதான் வந்தேன்.''

''இந்தாங்க...''

அவள் ஹரிஷை எழுப்பி, பாலைப் பருக வைத்து விட்டுத் திரும்பியபோது... பேப்பரில் இருந்து விழியுயர்த்தாமல் அவன் கேட்டான்.

''என்னடி... உன் அம்மாவிடம் கம்ப்ளெயிண்ட் பண்ணியது போதாதுன்னு சிட்டுக் குருவிகிட்டயும் கம்ப்ளெயிண்ட் பண்றயா...?''



அவள் பாடியதைக் கேட்டிருக்கிறான் என்பது புரிந்து போக - பூஜா வெட்கத்துடன் சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அவள் காய் நறுக்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து பார்த்தால் நரேந்திரன் உட்கார்ந்திருக்கும் இடம் தெரியும்.

ஒரு நிமிடத்துக்கு ஒரு முறை நிமிர்ந்து அவனைப் பார்த்துக் கொண்டே வேலை செய்து கொண்டிருந்தாள்.

பேப்பரில் எதையோ படித்து விட்டு அது சம்பந்தமாய் செல்ஃபோனில் யாருடனோ பேச ஆரம்பித்தான். மறுமுனையில் இருப்பவர் சொன்னதற்கு வாய்விட்டுச் சிரித்தான். வழக்கம்போல்... அவனது சிரிப்பு அவளை மயக்கியது.

காலை நேரத்து சிலுசிலுவென்ற காற்று சமையலறை ஜன்னல் வழி நுழைந்து அவள் உடலைத் தழுவியது.

**'தென்றலே... உன் பவனியில் சிலிர்க்காதே...**
**பூ மயங்குகிறது.**
**வெண்ணிலா... உன் பவனியில் சிரிக்காதே...**
**மனம் மயங்குகிறது.**

அவள் மனம் அவசரக் கவிதையை எழுதியது.

ஹரிஷை பள்ளிக்கு கிளப்பி டைனிங் டேபிளில் அமரவைத்துக் கொண்டிருந்தபோது... நரேந்திரனும் அலுவலகம் கிளம்பத் தயாராகி... அங்கே வந்தான்.

''எனக்கும் டிபன் வை... சீக்கிரமாய் போகணும்...''

பூஜாவின் உற்சாகம் வடிந்து விட்டது. இவ்வளவு சீக்கிரமாய் அவன் போகவேண்டுமா என்று அவள் மனம் சிணுங்கியது.

மௌனமாய் அவனுக்கும் தட்டை வைத்துப் பரிமாறினாள்.. சாப்பிட்டுக் கொண்டே அவளைப் பார்த்த நரேந்திரன் முகத்தில் துளிக்கூட முதல் நாள் இரவில் அவன் காட்டிய நெருக்கத்தின் சுவடு இல்லை.

கடுமையான முகத்துடன் அவளிடம் கறாராக அவன் பேசினான்.

''உன் அம்மாவுக்கு ஃபோன் போட்டு நீ சந்தோசமாக இருக்கிறாய்ன்னு சொல்லி விடு. அது வேற எனக்கு டென்ஷன்... அவங்க பெண்ணை நான் சந்தோசமாக வாழவைக்கலைன்னு குற்றப் பத்திரிகை படிக்கிறாங்க என்ன... மறக்காமல் சொல்லிடறயா...?''

நரேந்திரன் ஹரிஷை அழைத்துக் கொண்டு போய் விட்டான். பூஜா சாப்பிடத் தோன்றாமல்... சமையலறை சுவரில் சரிந்து அமர்ந்தாள்.

'இதற்குத்தானா...? இதற்காகத்தானா...? நீ என்னிடம் பிரியம் காட்டியது இதற்காகத்தானா...? எனக்குத் தெரி யாமல் போய்விட்டதே! பெண்ணைக் கொடுத்த மாமி யாரிடம் சமாதானம் சொல்லத்தான் என்னைத் தொட்டுக் காதல் செய்தாயா...? நீ சொல்வது போல நான் பைத்தியக்காரிதான். கானல்நீரை... தாகம் தணிக்கும் ஊற்று நீர் என்று நினைத்து ஏமாந்து விட்டேனே...'

அவள் கண்களில் கண்ணீர் வழிய... சமையலறையில் சுருண்டு படுத்து விட்டாள்.

''ஒரு பெரிய ஜாடியில்... அடியில் தண்ணீர் இருந் துச்சாம். பக்கத்திலேயே சின்னச்சின்னக் கல் குவியலாய் இருந்துச்சாம். காக்காவுக்கு தண்ணீர் தாகமாக இருந்துச்சாம். பட்... அதனால தண்ணீர் குடிக்க முடியலை...



பூஜா கேள்வி கேட்க, ஹரிஷ் முகமலர்ச்சியாக...

''வாட்டர்... ஜக்குக்கு அடியில் இருக்கே மம்மி...'' என்றான்.

''குட்... இப்போ காக்கா என்ன பண்ணுச்சாம்? கற்களை எடுத்து ஜாடிக்குள் போட்டுச்சாம். உடனே தண்ணீர் மேலே வந்துருச்சாம். காக்கா தண்ணீரைக் குடிச்சிருக்காம். இதுல இருந்து நமக்கு என்ன தெரியுது...?''

''டிரை பண்ணினா... எதையும் அச்சீவ் பண்ணிர லாமுன்னு தெரியுது.''

''வெரிகுட்...''

மகனுக்கு வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த பூஜா... மகனை அணைத்துக் கொண்டாள்.

'முயற்சி திருவினையாக்குமா...? நானும் உன் அப்பாவின் மனதை என் பக்கம் திருப்ப... போராடித்தான் பார்க்கிறேன். அது முடியவில்லையேடா.'

ஹரிஷை அவள் தூங்க வைத்து விட்டு ஹாலுக்கு வந்த போது அழைப்பு மணி ஒலித்தது. கதவைத் திறந்து விட்டாள். களைத்துப் போனவனாக நரேந்திரன் உள்ளே வந்தான்.

''கொஞ்சம் தண்ணி கொடுடி...''

பூஜா மௌனமாக ஃப்ரிட்ஜைத் திறந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து அவன் கையில் கொடுத்து விட்டு உள்ளே சென்றாள்.

# 11

**கு**த்தூசி போல குளிர் உடலைத் துளைக்க ஆரம்பித்தது. பூஜா அவசரமாக ஸ்வெட்டரை எடுத்து ஹரிஷுக்கு போட்டு விட்டாள்.

''மிஸஸ் நரேனுக்கு மகனைப் பற்றின கவலைதான் எப்போதும் இருக்கும் போல... கொஞ்சம் எங்க சாரைப் பற்றியும் கவலைப்படுங்க மேடம்...''

நரேந்திரனின் பிஏ விமலா... கேலிபோலக் கூறினாள். பூஜா லேசாகச் சிரித்தாள். பதில் சொல்லவில்லை.

''என்ன சார்... மேடம் பேசவே மாட்டாங்களா...?''

விமலா விடாமல் கேள்வி கேட்க, நரேந்திரனுக்குள் சன்னமான எரிச்சல் குமிழ்விட்டது.

'வந்த இடத்திலாவது வாயைத் திறந்து பேசுகிறாளா... ஊமையாய் இருந்து உயிரை எடுக்கிறாளே... பட்டிக்காடு...'

''அவள் கொஞ்சம் மூடி டைப் விமலா...''

''ஓ...''

அந்த விமலா அழகாக இதழ் குவித்து, 'ஓ...' போட்டாள். அதை ரசனையுடன் நரேந்திரன் கவனிப்பதை பூஜா கவனித்து விட்டாள். அவள் மனம் வலித்தது.

'என் கண் முன்னாலேயே இன்னொருத்தியை சைட் அடிக்கிறாயா...'



மகனின் பக்கத்தில் நகர்ந்து அமர்ந்து கொண்டாள் அவள்.

'இந்த டூருக்கு வந்திருக்கக் கூடாது...'

கிளம்பிய நொடியிலிருந்து... இதே எண்ணம்தான் அவள் மனதில் சுழன்றது.

**''நா**ளைக்கு கொடைக்கானல் போகிறோம். கிளம்பு...''

திடீரென்று நரேந்திரன் கூறிய போது... பூஜாவுக்கு மகிழ்ச்சி வந்ததென்னவோ நிஜம்.

''நாளைக்கேவா...?'' அவள் விழி விரிய கேட்டாள்.

''யெஸ்...''

ஹரிஷிற்கு கோடை விடுமுறை என்பதால்... அவனுடைய பள்ளியைப் பற்றிய கவலை இல்லாதவளாய் பூஜா... பெட்டியில் துணிகளை அடுக்க அமர்ந்தாள்.

''எத்தனை செட் டிரஸ் எடுத்துக்கணும்...?''

''அங்கே மூன்று நாள் தங்க வேண்டியிருக்கும்... போக வர இரண்டு நாள்கள்... கணக்கில் வைத்துக் கொள்...''

பூஜாவிற்கு உற்சாகமாக இருந்தது. இந்த மாற்றம் அவளுக்குத் தேவைப்பட்டது. நான்கு சுவர்க்குள் புழுங்கிப் புழுங்கி... கரைந்து... கடைசியில் காணாமல் போய் விடுவோமோ என்று பயந்திருந்தாள்.

அப்படிப்பட்ட மனநிலையில் இருந்தவளிடம் அவனாக வந்து... கொடைக்கானலுக்கு கிளம்பச் சொன்னதும் மகிழ்ந்துதான் போனாள்.

'எத்தனை நாள்கள்.. இல்லையில்லை.. வருசங்களாச்சு - இப்படி வெளியூருக்குப் போய் வந்து...'

அவள் துணிகளை அடுக்கிக் கொண்டே மனக்கணக்குப் போட்டாள்.

'கடைசியாய் எப்போது... வெளியூருக்குப் போனோம்? ம்ம்... ஹரிஷின் செகண்ட் பர்த்டேக்கு... ஊட்டிக்குப் போனோம்...'

அவள் கைகள் துணிகளை அடுக்குவதை நிறுத்திவிட... கடந்த காலத்தில் மனம் சென்று நினைவுகளைத் துழாவியது.

'அங்கேதான் அவரிடம் நான் 'என்னைப் பிடிச்சிருக்கா'ன்னு கேட்டேன்...'

ஒரு பெருமூச்சுடன் அவள் மீண்டும் துணிகளை அடுக்க ஆரம்பித்தாள்.

'கடைசி வரைக்கும் அவர் பதில் சொல்லவேயில்லை.'

நரேந்திரனுக்கும்... ஹரிஷுக்குமான... ஸ்வெட்டர்களை எடுத்து மடித்து வைத்தவள், தனக்கு ஸ்வெட்டருடன் சால்வையை மறக்காமல் எடுத்துக் கொண்டாள்.

''சாப்பிட... ஏதாவது பிரிப்பேர் பண்ணி எடுத்துக் கொள்ளவா...?''

''வேண்டாம்... போகும் வழியில் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்ளலாம்.''

''கையில் எடுத்துக்கொண்டு போனால்... பசித்த நேரத்தில் பிடித்த இடத்தில் காரை நிறுத்தி சாப்பிட்டுக்கலாமே...''

வெளியூருக்குப் புறப்படும் உற்சாகத்தில்... அவள் மௌனத்திரையின் மறைவிலிருந்து வெளியே வந்தாள்.

நரேந்திரன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று... அவள் பேச்சை நிறுத்தியது.



''நாம் காரில் போகவில்லை...''

''டிரெயினில் போகிறோமா?''

''இல்லை... வேனில் போகிறோம்.''

''வேனா... அது எதற்கு?''

''ஏஸி வேன்... வீடியோ கோச் - மொத்தம் நம்முடன் சேர்த்து இருபத்து நான்கு பேர் போகிறோம்.''

அவர்கள் தனியாகப் போகவில்லை என்ற செய்தியைத் தாமதமாகத் தெரியப்படுத்தும் உணர்ச்சியில்லாமல் அவன் பேசினான். அது பூஜாவை மிகவும் பாதித்தது.

''இருபத்து நான்கு பேர்னா... யார் யாரு?''

''எங்கள் ஆபீஸில் இருந்து விமலா வருகிறாள். மத்தவங்க என் ஃபிரண்ட்ஸ்... ஃபேமிலியோட வருகிறாங்க.''

'விமலா ஏன் தனியாக வருகிறாள்?'

நினைத்துக் கொள்ளும் கேள்விகளை நேரில் அவனிடம் கேட்க முடியாது என்று அறிந்து வைத்திருந்ததால்... அவள் அமைதியாக சமையலறைக்குள் போனாள்.

ஒரு வார்த்தை அவளிடம் முன்னாலயே அவன் சொல்லியிருக்கலாம்.

'பூஜா... என் ஃபிரண்ட்ஸின் ஃபேமிலியோடு டூர் போகலாமா?' என்று அவளிடம் கேட்டிருக்கலாம்.'

அப்படிச் செய்யாமல் கடைசி நிமிடத்தில் அவன் அதைச் சொல்லியது அவள் மனதை வருத்தியது.

''என்னடி 'உம்'முன்னு இங்கே வந்து... இருட்டில் நிற்கிற?''

நரேந்திரன் சமையலறைக்குள் வந்து விளக்கைப் போட்டான். ஜன்னல் கம்பியில் முகம் பதித்து... சிந்தனையில் ஆழ்ந்திருந்த பூஜா சுதாரித்துக் கொண்டு நகர்ந்தாள்.

"ஒண்ணுமில்லை..."

"எதைக் கேட்டாலும்... இதையே சொல்லு... எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கியே... பட்டிக்காடு..."

அந்த நேரத்தில் தான் வேலையை விட்டது தவறு என்று பூஜாவிற்குத் தோன்றியது.

அவளுடைய அடையாளத்தை அழித்துக் கொண்டு சுயத்தை மறந்து நான்கு சுவர்களுக்குள் புதைந்து போனதால் தானே அவன் அவளை 'பட்டிக்காடு' என்று சொல்கிறான்...

பறக்க முடியாமல் சிறகை வெட்டிவிட்டு அதைப் பார்த்துப் பரிகசிப்பது எவ்வளவு கொடுமையான செயல் என்று இவன் உணர்வானா...?

"நோ அதர் வே'ன்னுதான் இந்த டூருக்கு ஒப்புக் கொண்டிருக்கிறேன். இல்லாட்டி... நீ பண்ணும் அழும்புக்கு மூன்று நாள் உன்னோடு ஊரைச் சுற்ற மாட்டேன். மத்த ஃபிரண்ட்ஸ் எல்லாரும் வொய்ஃப்.. பிள்ளைன்னு வர்றாங்க. நான் மட்டும் தனியே போனால் நல்லாயிருக்காது."

'ஏன் இந்த டூருக்குக் கிளம்பினோம்.' என்று பூஜா நொந்து போனாள். 'வேறு வழியில்லாமல் உன்னை அழைத்துக் கொண்டு போகிறேன்'னு சொல்கிறவனுடன் சுயமரியாதை உள்ளவள் கிளம்பிப் போவாளா...?

அவள் கிளம்பிப் போனாள். தன் மௌனத்திரையின் மறைவினிலே நத்தை தன் கூட்டுக்குள் ஒடுங்கிக் கொள்வதைப் போல... தனக்குள் ஒடுங்கிக் கொண்டு போனாள்...



"உன் உம்மணாம் மூஞ்சியை ஒருமுழ நீளத்திற்கு தூக்கி வைத்துக் கொண்டிருக்காமல் மற்றவர்களுடன் பேசிப் பழகப் பாரு..."

"யார்... யார்... வருகிறாங்க...?"

"ஜெகன்... அவனுடைய வொய்ஃப்,குழந்தைகள்... அப்புறம் பிரதாப், சரவணன், ஆனந்த், சூர்யான்னு, எங்க செட்டில் இருக்கும் ஆறுபேரும் ஃபேமிலியோடு கிளம்புகிறோம்."

இவர்கள் ஆறுபேரும் என்ஜினியரிங் காலேஜில் ஒன்றாகப் படித்தவர்கள். இன்று வரை இணைபிரியாத நண்பர்கள். ஒருவரின் குடும்ப விழாவிற்கும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் மற்ற ஐவரும் குடும்பத்துடன் முதல் நாளே பிரசன்னமாகிறவர்கள்.

அவர்களுடன் போவது பூஜாவிற்கும் ஆறுதலாக இருந்தது. மற்ற ஐவரின் மனைவிகளோடு அவள் நன்றாகப் பழகியிருக்கிறாள். அவர்களின் குழந்தைகளோடு ஹரிஷ் கலந்து விளையாடியிருக்கிறான்.

அந்த மட்டிலும்... இந்த டூர்... அலுப்பாக இருக்காது என்று நினைத்துக் கொண்டாள் பூஜா.

"ம்ம்... ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேன்..." நரேந்திரன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"என்ன...?"

"விமலாவும் நம்முடன் வருவது நினைவிருக்கில்ல..."

"ம்ம்ம்..."

''அவள் என்னை நம்பித்தான் வருகிறாள். அவளுடன் முறைத்துக் கொள்ளாமல் இருக்கப் பாரு...''

இதை என்னவென்று எடுத்துக் கொள்வது? கட்டிய மனைவியிடம், 'என் செகரட்டரி என்னை நம்பி வருகிறாள்' என்று சொன்னால்.. அதை எப்படி எடுத்துக் கொள்வது?

## 12

ஜெகன், பிரதாப், சரவணன், ஆனந்த், சூர்யா என்ற ஐந்து நண்பர்களின் மனைவி மக்களுடன் நரேந்திரனின் குடும்பமும் இணைந்து கொள்ள... இலவச இணைப்பாக இடைச் செருகலாக விமலாவும் தொற்றிக் கொள்ள... அந்த சொகுசு வேன் கொடைக்கானலை நோக்கிக் கிளம்பியது.

பூஜாவிற்கு விமலாவைப் பிடிக்காது. ஹரிஷின் பிறந்த நாள் விழாக்களுக்கு வரும்போது அவள் வேண்டுமென்றே நரேந்திரனின் அருகில் இணைந்து நின்று கதை பேசுவதை பூஜா கவனித்திருக்கிறாள். போதாக்குறைக்கு ஹரிஷையும் தூக்கிக் கொண்டு நரேந்திரனின் அருகே போய் நின்று கொள்வாள். பார்ப்பவர்களுக்கு கணவனும் மனைவியும் குழந்தையுடன் நிற்பதைப் போலத் தோன்றும்படி நடந்து கொள்வாள்.

இப்போதும் அதைப் போலவே... அவள் ஹரிஷை தூக்கிக் கொள்ள முயல... வளர்ந்து விட்ட ஹரிஷ் விலகி பூஜாவின் தோளில் சாய்ந்து கொண்டான்.

''அம்மாவை விட்டுட்டு வரமாட்டேன்...''



மகனை அணைத்துக் கொண்டு மௌனமாய் ஒரு பார்வையை விமலாவை நோக்கி வீசினாள் பூஜா.

அந்தப் பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் அவள் அவசரமாக ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

நரேந்திரனைத் தவிர.. மற்ற ஐந்து நண்பர்களும் தங்களின் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வந்திருந்தனர்.

''நம்ம செட்டிலேயே நாம் இருவர்... நமக்கு ஒரு வர்ங்கிற பார்முலாவை ஃபாலோ பண்ணிக் கொண்டிருப்பது நரேந்திரன் மட்டும்தான்டா...'' ஜெகன் சிரித்தபோது...

''அதை இப்பவே எப்படிச் சொல்ல முடியும்...? ஹரிஷுக்கு துணையாக தம்பிப் பாப்பா வராதுன்னு என்ன நிச்சயம்?'' என்று சரவணன் கேட்டு வைத்தான்.

பூஜா முகம் சிவக்க, நரேந்திரன் கிளர்ச்சியுற்றான். 'இவளுக்கு இந்த வெட்கம்தான் அழகு சேர்க்குது...' அவன் பூஜாவின் அருகே நெருங்கி அமர்ந்தான்.

''எல்லோரும் ஃபேமிலியுடன் வந்திருக்கிறப்போ... திருஷ்டிப் பொட்டு போல விமலா ஏன் தனியாக வரணும்?''

பெண்களிடம் கடலை போடுவதில் கைதேர்ந்த ஜாலி பேர் வழியான ஆனந்தின் மனைவி உஷா எரிச்சலுடன் கேட்டாள்.

வேன் கிளம்பியதில் இருந்து... பெண்களைத் தவிர்த்து ஆண்களிடம் மட்டுமே பேசி குலுங்கிச் சிரித்துக் கொண்டுவந்த விமலாவின் மேல் அவளுக்கு நல்ல அபிப்ராயம் வரவில்லை.

''அதைத்தான் நான் நினைத்தேன். நீ கேட்டுட்ட...'' பிரதாப்பின் மனைவி அனிதா உடனே உஷாவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டாள்.

''நீ தப்பா நினைச்சுக்காதே விமலா.. .குடும்பங்கள் சேர்ந்து போகும்போது... ஹோட்டல்... கோயில்... இப்படி... எல்லா இடங்களிலயும்... அவங்கவங்க ஃபேமி லியோட செட்டு செட்டாய் பிரிந்து சுற்றுவாங்க... நீ பாவம் தனியாய் இருக்கணுமே.. அதைத்தான் உஷாவும் அனிதாவும் சொல்கிறாங்க.''

மற்றவர்களின் மனம் புண்பட்டு விடக் கூடாது என்ற அக்கறை... ஜெகனின் மனைவியான ராகினிக்கு எப்போதும் உண்டு.

விமலா இதற்கெல்லாம் சளைத்தவள் இல்லை என்பதை உடனடியாக, அந்தப் பெண்களுக்கு உணர்த்தினாள்.

''நான் தனின்னு யார் சொன்னது? எங்க பாஸ் இருக்கிற வரைக்கும் நான் தனியில்லை. நானும் அவருடைய ஃபேமிலிதான்.

'குடும்பத்தில் ஒருத்தி...' என்று அவள் சொல்வதாக நினைத்துக் கொண்டு நரேந்திரன் இயல்பாகப் புன்னகைக்க - அந்தப் பெண்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அவர்களுக்குத் தெரியும், 'நான் அவருடைய ஃபேமிலியில் ஒருத்தி' என்பதற்கும் 'நானும் அவருடைய ஃபேமிலிதான்' என்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசம்.

''இவள் கெட்டிக்காரியாக இருக்கிறாள்...'' சூர்யாவின் மனைவியான தீபா யோசனையுடன் மெதுவான குரலில் கூறினாள்.

''பாவம்... அந்தப் பெண் பூஜாவைப் பார்த்தால் சாது மாதிரி தெரிகிறது. இவள் திட்டம் போட்டு கொடைக்



கானலுக்கு நம்முடன் ஒட்டிக் கொண்டு வந்திருக்காள்ன்னு நினைக்கிறேன்.'' சரவணின் மனைவியான வசுமதி இரக்கத்துடன் சொன்னாள்.

அதை மற்ற பெண்கள் ஆமோதித்தனர். அவர்களின் கோபத்தை அதிகப்படுத்துவது போல... வழியில் அவர்கள் சாப்பிட ஹோட்டலுக்குப் போனபோது... மற்ற குடும்பங்கள் டேபிளைச் சுற்றியுள்ள நான்கு சேர்களில் அமர்ந்து கொள்ள... விமலா மட்டும் நரேந்திரனின் குடும்பம் அமர்ந்திருந்த டேபிளைச் சுற்றியிருந்த நான்காவது சேரில் நரேந்திரனுக்கு அருகில் அமர்ந்து கொண்டாள்.

சர்வரிடம் ஆர்டர் கொடுக்கும்போது... நரேந்திரன் ஹரிஷுக்கு என்ன பிடிக்கும் என்று கேட்டுக் கொண்டதைப் போல... விமலாவுக்கும் என்ன பிடிக்கும் என்று கேட்டு ஆர்டர் கொடுத்தான்.

மறந்தும்... அவன் பூஜாவிடம் 'உனக்கு என்ன பிடிக்கும்?' என்று கேட்டுக் கொள்ளவில்லை.

அதைக் கண்டுகொண்ட விமலாவின் அலட்சியப் பார்வையைப் புறக்கணித்து... மௌனமாக சாப்பிட ஆரம்பித்தாள் பூஜா.

''அக்கிரமத்தைப் பார்த்தாயா அனிதா...?''

''அவளைச் சொல்லிக் குற்றமில்லை உஷா. எல்லாம் இவருடைய பிரண்ட் கொடுக்கும் இடம்...''

''தன் புருஷன்... தன் குழந்தைன்னு... ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பி வரும்போது, இப்படி ஒட்டுப் புல் போல.. ஒருத்தி தொற்றிக் கொண்டு வந்தால் -பாவம்... அந்தப் பெண் பூஜாதான் எப்படி சகித்துக் கொள்ளும்...'' ராகினி கவலைப்

"த்சு... என்னடி பேச்சு இது...? நரேன் அப்படிப்பட்ட ஆளில்லை. அந்தப் பெண் அவனுடைய செகரட்டரி..." ஜெகன் கோபப்பட்டான்.

"செகரட்டரின்னா ஆபிஸோட நிறுத்திக்கணும். அதை விட்டுட்டு இப்படி ஊர் சுத்திப் பார்க்க குடும்பத்தோட இணைச்சு கூப்பிட்டுக் கொண்டு வரக் கூடாது..." தீபா, சூர்யாவிடம் கூறினாள்.

"அவளுக்கு பேரண்ட்ஸ் இல்லை தீபா. அநாதை ஆசிரமத்தில் வளர்ந்தவளாம்..." நரேனுக்குப் பரிந்து பேசிய சூர்யா மனைவியிடம் மாட்டிக் கொண்டான்.

"அவளைப் பற்றிய இத்தனை விவரமும் உங்களுக்கு எப்படித் தெரியும்...?" என்று தீபா பிடித்துக் கொண்டாள்.

"நரேனிடம் பேசிக் கொண்டிருந்தபோது ஒருநாள் அவன் சொன்னதுதான்."

"ஸோ... டெய்லி உங்க ஃபிரண்டும் நீங்களும் இதைப் பத்தித்தான் பேசிக்கிட்டு இருப்பீங்க...?"

"ஐயையோ.. எங்களுக்குப் பேச ஆயிரம் விசயம் இருக்கும்மா. யதார்த்தமா இதை அவன் ஒருநாள் சொன்னான்."

"உடனே யதார்த்தமா நீங்களும் காதுல வாங்கி மனசில போட்டுக்கிட்டீங்க..."

சிந்துபாத்தின் கன்னித்தீவைப் போல சண்டை முடியாமல் நீண்டு கொண்டே இருக்க.. சூர்யா களைத்துப் போனான். மற்ற நண்பர்களுக்கும் இதே கதிதான் என்பதை அறிந்த பின்னால் அவனது களைப்பு குறைந்துபோனது.



# 13

வத்தலகுண்டைத் தாண்டி... கொடைக் கானல் மலையில் வேன் ஏற ஆரம்பித்தது. ஊசிக் குளிரில் இருந்து மகனைக் காப்பாற்ற பூஜா ஸ்வெட்டரை அவனுக்குப் போட்டு விட்டாள். விமலா எழுந்து அவர்களின் பெட்டியின் மேல் கை வைக்கப்போக... பூஜாவின் நெஞ்சம் எரிந்தது.

"என்ன வேணும்...?" கடுமையான குரலில் கேட்டாள்.

"சாருக்கு ஸ்வெட்டரை எடுத்துக் கொடுக்கணும்."

பூஜா அதிர்ந்து போனாள். அவளுடைய பெட்டியில் இருக்கும் - அவளுடைய கணவனின் ஸ்வெட்டரை விமலா எடுத்துக் கொடுக்க முனைகிறாள் என்றால் அவர்களுக்குள் இருக்கும் பழக்கம் எத்தகையது...?"

"விமலா.. பூஜாவின் ஹஸ்பெண்டை பூஜா பார்த்துக்குவா... நீ உன் இடத்தில் அடங்கி உட்கார்..." உஷா கண்டிப்புடன் கூறினாள்.

"இல்லை மேடம்... அவருக்கு குளிரும்."

"எவருக்கு...?"

"என் பாஸுக்கு..."

"ஆபீஸில்தான் அவர் உனக்கு பாஸ்... பட்... எல்லா இடங்களிலேயும் அவர் பூஜாவின் ஹஸ்பெண்ட்... நீ உன் லிமிட்டைத் தாண்டாமல் இரு..."

விமலா முகம் வாடிப் போனவள் போல் அமர்ந்து கொள்ள ஆனந்த் சன்னக்குரலில் மனைவியைக் கடிந்து கொண்டான்.

''நமக்கெதுக்கு ஊர் வம்பு...?''

''இது ஊர் வம்பில்லை. நம்ம வேனுக்குள் நாம் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கும் வம்பு...''

''அனிதா.. நான் என்ன சொல்ல வருகிறேன்னா...''

''நீங்க எதையும் சொல்ல வேண்டாம். மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும்ன்னு வேறு ஒரு அர்த்தத்தில் அண்ணா சொல்லி வைத்தார். ஆனா உங்க ஆம்பிளைப் புத்தி இருக்கே. அப்பப்பா.. இப்ப அவ முகம் வாடினா... உங்களுக்கு என்ன வந்துச்சு...?''

''மத்தவங்க மனசைப் புண்படுத்தாதேன்னுதான் சொல்றேன்... அது ஒரு குத்தமா...?''

''ஆஹா.. உங்க மனசைப் பத்தி எனக்குத் தெரியாதா...? அவ மனசு புண்ணாகுறது மட்டும்தான் ஐயா கண்ணுக்குத் தெரியுதா...? பூஜாவின் மனசு ரணமாகிறது உங்க கண்ணுக்குத் தெரியலையா...?''

''இதுல பூஜா மனசு கஷ்டப்படுறதுக்கு என்ன இருக்கு? குளிரடிக்குது. விமலா நரேந்திரனின் செகரட்டரிங்கிறதினால ஸ்வெட்டரை எடுத்துக் கொடுக்கப் போயிருப்பா. இதில ஒண்ணும் தப்பு இல்லையே...''

''வேண்டாம். மேலேமேலே அவளுக்கு வக்காலத்து வாங்கிட்டு இருக்காதீங்க. அப்புறம் எனக்கு நல்லா வந்திரும் வாயில. ஆமாம்... சொல்லிட்டேன்.''



''ரௌடியிசம் பண்றடி நீ. கொடைக்கானலுக்கு ஜாலியா ஒரு டிரிப் அடிக்க வந்தோமா... இல்லை சண்டை போட வந்தோமா...?''

''அது தெரிந்தவங்க எதுக்காக இந்த ஜென்மத்தைக் கூட அழைத்துக் கொண்டு வரணுமாம்...?''

''ஏண்டி... நான் என்னவோ திட்டம் போட்டு அவளை அழைத்துக் கொண்டு வரச் சொன்னதைப் போல பேசறியே... இது உனக்கே நல்லாயிருக்கா? அவ எனக்கா செகரட்டரி...? நரேந்திரனுக்கு செகரட்டரி.''

ஆனந்த்... இதை படு ஏக்கமாய் சொல்லிக் கொண்டே ஒரு மார்க்கமாய் விமலாவைப் பார்த்து வைத்தான். அவனுடைய சிறு அசைவை வைத்தே அவனின் மனத்தை அளவிட்டு விடும் உஷா, அதைக் கண்டு கொண்டாள்.

ஒரு பெருமூச்சுடன் திரும்பிய ஆனந்த், மனைவியின் எரிதணல் பார்வையைக் கண்டு அரண்டு விட்டான்.

''என்னடி உஷா...இப்படிப் பார்க்கிற...?''

''ஏன்... என் பார்வை... அந்த விமலாவின் பார்வையைப்போல இல்லையா...?''

அவர்கள் சன்னக்குரலில் மீண்டும் சண்டையை ஆரம்பிக்கும்போது வேன் கொடைக்கானலில் நுழைந்து விட்டது.

வேனை விட்டு இறங்கியவர்கள், 'வாவ்' என்று குளிரை ரசித்து உள்ளங்கைகளைத் தேய்த்து கன்னத்தில் வைத்து அதன் வெதுவெதுப்பை அனுபவித்தனர்.

மற்றவர்கள், மனைவியையும் குழந்தைகளையும் கவனித்தபடி பெட்டியைத் தூக்கிக் கொள்ள நரேந்திரன் மட்டும் -

"விமலா... உன் பெட்டியை எடுத்துக்கிட்டியா...?" என்று விசாரித்துக் கொண்டிருந்தான்.

"நம்ம பெட்டிகள் எல்லாம்... இதோ இருக்கு சார்."

விமலா சுட்டிக்காட்டும் போதுதான் பூஜா தங்கள் பெட்டிகளுடன் விமலாவின் பெட்டியும் கலந்திருப்பதைக் கவனித்தாள்.

"குட்... வா... போகலாம்."

நரேந்திரன் குனிந்து இரண்டு கைகளிலும் இரண்டு பெட்டிகளை எடுத்துக் கொள்ள... அதில் ஒரு பெட்டி விமலாவின் பெட்டியாக இருந்ததை பூஜா பார்த்தாள்.

விமலா... நரேந்திரனுடன் இணைந்து பேசியவாறு மீதி இருந்த பெட்டிகளை எடுத்துக் கொண்டு நடக்க... பூஜா புல்வெளியில் ஹரிஷுடன் பின்தங்கினாள்.

செய்வதற்கு எந்த வேலையும் இல்லாமல்... தான் ஒதுக்கப்பட்டு விட்டதைப் போல... அவள் உணர்ந்தாள்.

தன் குடும்பம் எது... என்று தெரியாமல் தவித்தாள். பூஜாவின் குடும்பத்தோடு விமலா ஒட்டிக் கொண்டு வந்தாளா... இல்லை.. விமலா - நரேந்திரனுடன் பூஜா ஒட்டிக் கொண்டு வந்திருக்கிறாளா என்று பூஜாவிற்கு சந்தேகமே வந்து விட்டது.

விமலா கூறிய ஏதோ ஒன்றிற்கு பலமாக சிரித்தபடி நரேந்திரன் ஹோட்டலின் படிகளில் ஏறிவிட... பூஜாவின் கண்களில் நீர் தழும்பி விட்டது.

அவர்களைப் பின்தொடர்ந்து செல்வதை அவமானமாக அவள் கருதினாள்.



பூஜாவைப் பற்றிக்கூட நரேந்திரன் நினைத்துப் பார்க்க வேண்டாம். ஹரிஷை கூடவா... அவனுக்கு மறந்து விட்டது?

ஹோட்டல் லாபிக்குள் நரேந்திரனும் விமலாவும் நுழைந்தபோது...

"பூஜா எங்கே...?" என்று அனிதா வினவினாள்.

"எங்களுடன்தானே வந்தாள்..." நரேந்திரன் திரும்பிப் பார்த்தான்.

"வரவில்லை... போல..." என்று முணுமுணுத்தான்.

அனிதாவின் பார்வை அவனைச் சுட்டது.

"அவள் வருகிறாளா... இல்லையான்னு பார்க்காமல் எதை அவ்வளவு முக்கியமாக பேசிக் கொண்டு வந்தீங்க நரேன்?" என்று கேட்டாள் அனிதா.

இதுவரை அனிதா நரேந்திரனிடம் இப்படிப் பேசியதில்லை. அவன் முகம் மாறியது. அதைக்கண்ட விமலா -

"சார் என்ன செய்வார்...? நானும் சாரும்தான் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டோமே... எங்களுக்குப் பின்னாடியே அவங்க வர வேண்டியதுதானே...? இதுக்குப் போய் சாரைக் குறை சொல்கிறீங்களே..." என்று பரிந்து கொண்டு வந்தாள்.

அனிதாவின் அனல் பார்வை... நரேந்திரனிடமிருந்து விமலாவிற்கு தாவியது.

"சொடுக்குப் போட்டவுடன் பின்னாடியே வருவதற்காகத்தான் பெண்டாட்டிகளை... கடவுள் படைத்து வைத்தாருன்னு நினைக்கிறாயா...?"

அனிதாவின் அருகே வசுமதி நகர்ந்து வர... அங்கே போர்க்களம் உருவாகப் போவதை அறிந்து கொண்ட நரேந்திரன் கோபத்துடன்... வெளியே விரைந்தான்.

# 14

ஹரிஷ்... குளிரில் நடுங்குவதை உணர்ந்து கொண்ட பூஜா... அவனைத் தூக்கிக் கொண்டாள். அவளது கழுத்தை தன் கைகளால் வளைத்துக் கொண்டு அவள் தோள் வளைவில் முகம் புதைத்துக் கொண்டான் ஹரிஷ்...

பூஜா... நின்றிருந்த இடத்தை விட்டு நகராமல் ஆணியடித்தாற்போல அங்கேயே நின்றாள்.

ஹோட்டலுக்குள்ளேயிருந்து நரேந்திரன் புயல் வேகத்தில் வெளிப்படுவதைப் பார்த்துக் கொண்டே அசையாமல் நின்றாள். அவன் வேகமாக அவளருகில் வந்தான். விழிகள் சிவந்து - அவன் முகம்பார்க்கவே பயங்கரமாய் - மிகக் கடுமையாக மாறியிருந்தது.

''இங்கே என்னடி பண்றே...?''

பூஜா பதில் சொல்லவில்லை...

''உன்னைச் சொல்லிக் குத்தமில்லேடி. என் புத்தியைச் சொல்லணும். உன்னைப் போய் வெளியில் கூப்பிட்டுக் கொண்டு வரணும்னு நினைப்பேனா...?''

'நான் கேட்டேனா... உன்னுடன் வெளியே வர வேண்டும் என்று நான்கேட்டேனா...?'

''நாலு பேர் மத்தியில் என் மானத்தை வாங்கணும்னு எத்தனை நாளாய் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த?''

'நீ என்னை அவமானப் படுத்திவிட்டு - அந்த உணர்ச்சியில்லாமல் என்னைக் குற்றம் சொல்கிறாயா...?'

''கொஞ்சமாவது நாகரிகமா பிஹேவ் பண்ணத் தெரிகிறதா... பட்டிக்காடு...''

'நான்கு சுவர்களுக்குள் என்னை அடைத்து வைத்தால் பட்டிக்காடாகத்தானே நான் மாறிப் போவேன்...?'

''பின்னாடியே வரவேண்டியதுதானே... எது கொள்ளை போய்விட்டதுன்னு... இங்கே நின்று கொண்டிருக்கிற...?''

'உன் பின்னால் வர நான் என்றைக்குமே தயங்கியதில்லை. நீ மலையுச்சியில் இருந்து குதிக்கச் சொன்னாலும் யோசிக்கமாட்டேன். உடனே குதித்து விடுவேன். ஆனால் இன்னொருத்தியுடன் பேசிக்கொண்டு என்னைப் பற்றியும் நம் பிள்ளையைப் பற்றியும் நினைவில்லாமல் நீ போனால் உன் பின்னால் நான் வரமாட்டேன். அதற்கு வேறு ஆளைப் பார்...'

அப்போதுதான் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த மகனைப் பார்த்தான் நரேந்திரன். சினத்துடன் மகனை வாங்கிக் கொண்டான்.

''நீ எக்கேடோ கெட்டுத் தொலை. என் பிள்ளையை விட்டு விடு...'' அவன் படபடத்தான்.

''அவன் எனக்கும்தான் பிள்ளை'' பூஜா வாய் திறந்தாள்.

பூஜாவை எரிப்பதைப் போல் பார்த்த நரேந்திரன் -

''வா...'' என்ற ஒற்றைச் சொல்லுடன் முன்னால் நடந்தான்.

சற்றுமுன் விமலாவுடன் பேசிக் கொண்டே அவன் இணைந்து நடந்த காட்சி... பூஜாவின் மனக்கண்ணில் தோன்றியது.

'இப்படியொரு டூருக்கு வந்திருக்கக் கூடாது...' என்ற நினைவுடன் நரேந்திரனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

ஹோட்டல் லாபியில் அவர்களுக்காகக் காத்துநின்ற மற்றவர்களின் முகம் இறுகியிருந்ததைக் கண்ட பூஜா சங்கடத்திற்கு உள்ளானாள்.

''ஸாரி... உங்களைக் காக்க வைச்சிட்டேன்.'' என்று பொதுவாக அவள் கூற, வசுமதி அவளருகே வந்து கையைப் பிடித்துக் கொண்டாள்.

''ஸாரி சொல்லி... எங்களை வேற்றாளாக்கப் பார்த்தால் நாங்க அடிச்சுடுவோம் பூஜா. நின்று உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு வராதது எங்கள் தப்பு. அதுக்கு நாங்கதான் உன்கிட்ட ஸாரி கேட்கணும்.'' வசுமதி நரேந்திரனைப் பார்த்த பார்வையில் குற்றச்சாட்டு தொனித்தது.

''ஓ.கே. பிராப்பளம் சால்வ்ட். வாங்க நாம அவங்கவங்க ரூமுக்குப் போகலாம்.''

நரேந்திரன் பேச்சைக் கத்தரித்து விட்டு தங்களின் அறைச் சாவியை வாங்கிக் கொண்டான். அவர்கள் லிஃப்ட்டை நோக்கிச் சென்றார்கள். லிஃப்ட்டிலிருந்து வெளிப்பட்டு நீண்ட காரிடாரியில் நடந்தார்கள். வரிசையாக முன்பதிவு செய்யப்பட்டிருந்த அறைகளில் நுழையப் போகையில் - தீபா யோசனையுடன் நின்று விமலாவைப் பார்த்தாள்.

அவள் நரேந்திரனுடன் ஒட்டிக்கொண்டு அவனின் அறைக்குள் நுழையப் போனாள்.

''என்ன நரேன்... விமலாவுக்கு தனி ரூம் புக் பண்ண வில்லையா?''



தீபாவின் கேள்வியைக் கேட்டதும் நரேந்திரன் விமலாவைப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

''உன் ரூமுக்கு போ விமலா...''

''சாவி எங்கே சார்...?''

''உன்னிடம் சாவி இல்லையா?''

''இல்லையே... நம் ரூம்களின் சாவிகளை நீங்கதானே வாங்கினீங்க?''

நரேந்திரனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. உஷா விமலாவை முறைத்தாள்.

''ஏன் விமலா... உனக்கு புக் பண்ணின ரூமின் சாவியை உன்னிடம் நீட்டினேனே... நீ அதை அங்கேயே வைத்துவிட்டு வந்துவிட்டாயா...?''

உஷா உண்மையைப் போட்டு உடைக்கவும் பூஜா சட்டென்று ஹரிஷுடன் அறைக்குள் போய்விட்டாள். விமலா அயராமல் உஷாவுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''சார் போனாரே... இன்னும் வரலையேன்னு... நான் அவரைப் பத்தியே நினைச்சுக்கிட்டு இருந்தேனா... அதில் நீங்க சாவி கொடுத்ததை கவனிக்க மறந்துட்டேன் போல அக்கா...''

''என்னது... அக்காவா...?''

இப்போது உஷா... நரேந்திரனை விட்டுவிட்டு ஆனந்தை முறைக்க ஆரம்பிக்க... அவசரமாய் அவன் அறைக்குள் ஓடிப் போனான்.

''இதோ பாரும்மா. இந்த 'அக்கா' போடும் வேலையை எல்லாம் வேறு எங்காவது வைத்துக் கொள். என்னை

'மேடம்'ன்னு கூப்பிட்டே பழகு. நான் பூஜா மாதிரி அமைதியாய் இருக்கமாட்டேன். கொலையும் செய்வாள் பத்தினின்னு கேள்விப்பட்டிருக்கயா...? நான் அந்த ரகம். பார்த்துப் பத்திரமாக இருந்துக்க...''

உஷா... ஆனந்தை ஒரு கை பார்க்க அறைக்குள் சென்று விட, நரேந்திரன், வேடிக்கை பார்க்கும் மற்றவர்களின் பார்வையிலிருந்து தப்பிக்க லிப்டை நோக்கி வேகமாகச் சென்றான்.

அதுதான் சாக்கென்று விமலா நரேந்திரனின் அறைக்குள் நுழைந்துவிட - மற்ற பெண்களின் முகத்தில் திகைப்பு படர்ந்தது.

''என்ன ராகினி... இங்கே என்னதான் நடக்குது...''

''புரியவில்லை அனிதா. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. இந்த கொடைக்கானல் டிரிப் நம் ஆறு பேரின் குடும்பங்களையும் பாதிக்கப் போகிறது...''

ஜெகனுக்கு தூக்கிவாரிப் போட்டது. ராகினி இதற்கு முன் இப்படிப் பேசியதில்லை.

''அடச்சீ... வாயை மூடு. அவன்தான் புத்தி கெட்டுப் போய் அடுத்த வீட்டுப் பெண்ணை அழைத்துக் கொண்டு அலைகிறான்னா... எல்லோருக்குமா... அதே புத்தி வரும்? நான் ஏகபத்தினி விரதன்டி.''

அவர்கள் பேசுவது அறைக்குள் இருந்த பூஜாவின் காதுகளில் தெளிவாக விழுந்தது.



## 15

பூஜா அங்கிருந்த சோபாவில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட... விமலா சுவாதீனமாக பெட்டிகளைத் தூக்கி கட்டிலில் வைத்து பெட்டிகளைத் திறக்கப் போனாள்.

அவளருகில் நிற்கப் பிடிக்காத ஹரிஷ், பூஜாவின் அருகே வந்து நின்று கொண்டு அவளின் முழங்கையை சுரண்டினான். கண் திறந்து பார்த்த பூஜாவின் பார்வையில் பெட்டியைத் திறக்க முயன்று கொண்டிருந்த விமலா தெரிந்தாள்.

''என்ன செய்கிற...?''

''பெட்டிகளைத் திறந்து துணிகளை அடுக்கி வைக்கப் போகிறேன்...''

விமலா திறந்து கொண்டிருந்த பெட்டியில் நரேந்திரனின் உடைகள் இருந்தன.

''கெட்லாஸ்ட்...'' பூஜா அடிக்குரலில் சீறினாள்.

''மேடம்...'' அறியாதவள்போல்... விமலா கண்களைக் கொட்டினாள்.

''வெளிய போன்னு சொன்னேன்.''

பூஜாவின் சீற்றத்தின் வேகத்தை விமலாவால் எதிர் கொள்ள முடியவில்லை.

'ஊமை மாதிரி இருந்தவள் இப்போது புலி போல் சீறுகிறாளே...'

அவள் அறைக்கு வெளியே வந்து விட்டாள். பூஜா அவளை வெறுப்புடன் பார்த்தபடி கதவை அடைத்து விட்டு... ஹரிஷைத் தூக்கி கட்டிலில் அமர வைத்தாள்.

''ஹூ இஸ் தட் லேடி மாம்...?'' ஹரிஷ் வினவினான்.

''உன் அப்பாவின் ஆபிஸ் செகரட்டரி...''

''ஐ ஹேட் ஹெர்...''

'உனக்கு மட்டுமா அவளைப் பிடிக்கவில்லை... எனக்கும் தான் பிடிக்கவில்லை. ஆனால் உன் அப்பாவிற்குப் பிடிக்கிறதே...!'

பூஜா மனம் வலிக்க துணிகளை எடுத்து அடுக்க ஆரம்பித்தாள்.

வரவேற்பில் இருந்து சாவியை வாங்கிக் கொண்டு வந்த நரேந்திரன் விமலா மட்டும் தனியாக - அவனது அறை வாசலில் நிற்பதைப் பார்த்தான்.

''என்ன விமலா இங்கே நிற்கிற? உள்ளே போய் ரூமில் இருக்க வேண்டியதுதானே...?''

அந்த வார்த்தைகளுக்காகவே காத்திருந்த விமலா... கண்களில் தயாராக தேக்கி வைத்திருந்த கண்ணீரை வழிய விட்டாள்.

''என்னம்மா... என்ன விசயம்...?'' நரேந்திரன் பதறினான்.

''ரூமில்தான் இருந்தேன் சார். மேடம் என்னை வெளியே தள்ளி கதவை மூடிட்டாங்க...''



''வாட்...?''

நரேந்திரன் அதிர்ந்து விட்டான். பூஜாவின் இறுக்கமான சுபாவத்தை அவன் அறிவான். ஆனால்... சக மனுஷியை அவமானப்படுத்தும் அளவிற்கு அவள் போவாள் என்று அவன் கற்பனைகூட பண்ணிப் பார்த்திருக்கவில்லை.

அவனுக்குள் கோபம் பீரிட்டு எழுந்தது. ஆனாலும் விமலாவின் முன்னிலையில் மனைவியை விட்டுக் கொடுக்க மனமின்றி, அவள் கையில் சாவியைக் கொடுத்தான்.

''லீவ் இட்... அவள் ஏதோ ஒரு மூடில் அப்படிச் சொல்லியிருப்பாள். அவள் ரொம்ப... பிரைவஸி பார்க்கறவ... டோன்ட் மிஸ்டேக் ஹெர்... நீ உன் ரூமிற்குப் போய் ரெஸ்ட் எடு...''

''பட்... என் பெட்டி உங்கள் ரூமில் இருக்கே சார்...''

விமலா... 'விடாது... கருப்பு...' என்று அவன் பின்னாலேயே அறைக்குள் மீண்டும் நுழைவதிலேயே முனைப்பாக இருந்தாள்.

வேறு வழியில்லாமல் நரேந்திரன் அறையின் அழைப்பு மணியை அழுத்தினான். பூஜா கதவைத் திறந்தாள். நரேந்திரன் உள்ளே வந்தான். பின்னாலேயே... விமலாவும் தொடர முனைய -

''வெயிட்... ப்ளீஸ்...'' என்றாள் பூஜா.

விமலா முகத்தை 'ஐயோ... பாவம்...' போல் வைத்துக் கொண்டு நரேந்திரனைப் பார்க்க - அவன்,

''உள்ளே வா... விமலா...'' என்றான்.

விமலாவின் முகத்தில் பிரதிபலித்த வெற்றிக் களிப்பை பூஜா கண்டுவிட்டாள். அவள் மனதில் ஒடுங்கிக் கிடந்த நிமிர்வு மௌனத்திரையின் மறைவிலிருந்து வெளியே

வந்தது. அவள் போராளியாக மாறி... நரேந்திரனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"அவள் உள்ளே வந்தால்... நான் வெளியே போய் விடுவேன்."

"ஏய்ய்..."

"எனக்கு... என் வீடு... என் குடும்பம்ன்னு இருந்துதான் பழக்கம். உங்களின் செகரட்டரியை சீராட்டுவதாக இருந்தால் நீங்களும் அவள் ரூமிற்கே போய் சீராட்டுங்க. ஐ டோன்ட் கேர். பட்... இது என் ரூம். இதில் உங்களுக்கும் என் பிள்ளைக்கும் மட்டும்தான் இடம் இருக்கும்..."

நரேந்திரன் பக்கத்து அறைகளைப் பார்த்தான். எந்த நேரத்திலும் யாராவது ஒரு நண்பனின் மனைவி வெளியே வரலாம் என்ற நிலை. தாய்க்குலத்தின் ஒருமித்த ஆதரவு பூஜாவின் பக்கம் இருப்பதைப் புரிந்து கொண்டவனாக, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"விமலாவின் பெட்டி உள்ளே இருக்குடி. அதை அவள் எடுத்துக் கொள்ளட்டும்."

"ஜஸ்ட் எ மினிட்..."

பூஜா அறைக் கதவுக்கு அருகிலேயே வைத்திருந்த விமலாவின் பெட்டியை எடுத்து... வெளியே வைத்தாள்.

"எனக்குத் தெரியும். இதை ஒரு சாக்காய் சொல்லிக்கிட்டு இவள் திரும்பவும் இங்கே வந்து நிற்பாள்ன்னு..."

விமலா... இதையெல்லாம் தட்டி விட்டுப் போகும் ரகம். ஆனால், பக்கத்தில் நரேந்திரன் இருந்ததால் பூஜாவின் வார்த்தைகளால் காயப்பட்டவள்போல முகத்தில் அதிர்வைக் காட்டினாள்.



'சரியான நடிகையர் திலகம்.'

"போய்ட்டு வரேன் சார்."

அடுத்த அறைக்குப் போவதற்கு - ஏதோ அண்டார்டிகாவிற்குப் போவதைப் போல... கண்ணீர் குரலில் பிரியா விடை பெற்றுக் கொண்டு விமலா போனாள்.

'தொலைந்து விட்டாள்.' என்ற நிம்மதியுடன் பூஜா அறைக்குள் செல்லத் திரும்பிய போது-

"சார்... இந்த லாக் ஒப்பனாக மாட்டேங்குது சார்..." என்று நரேந்திரனை விமலா உதவிக்கு அழைத்தாள்.

'அதுதானே பார்த்தேன்...'

பூஜா அசையாமல் நின்று கவனிக்க, நரேந்திரன் போய் விமலாவிற்கு கதவைத் திறந்து பூட்டுவது எப்படி என்று கற்றுக் கொடுத்தான்.

ஒன்றும் அறியாத பச்சை மண் போல கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு அவன் மேல் உராய்ந்தவாறு பூட்டைத் திறக்க அவளும் கற்றுக் கொண்டாள்.

தாளமுடியாதவளாய் பூஜா கண்மூடிக் கதவில் சாய்ந்தாள்.

## 16

ஒரு வழியாக விமலா... அறைக்குள் சென்று விட... ஆசுவாசப் பெருமூச்சு விட்டவாறு திரும்பினான் நரேந்திரன். அறைவாசலில் நின்று கொண்டிருந்த பூஜாவைப் பார்த்ததும் அவனுக்கு கோபம் வந்தது.

''சிஐடி வேலை பார்க்கிறாயா...?''

பூஜா மௌனமாக உள்ளே சென்றுவிட... அறைக் கதவைச் சாத்திவிட்டு கடுகடுத்த முகத்துடன் அவனும் உள்ளே போனான். பூஜா பெட்டிகளைத் திறந்து துணிகளை அடுக்க ஆரம்பித்தாள்.

''டாடி...'' என்று ஹரிஷ் கழுத்தைக் கட்டிக் கொண்டதை உணராதவனாக நரேந்திரன் மீண்டும் தேள்போல கொட்ட ஆரம்பித்தான்.

''அவள் பாவம் பூட்டைத் திறக்கத் தெரியலைன்னு ஹெல்ப் கேட்கறா. அவளுக்கு ஹெல்ப் பண்ணப் போனால் அதையும் ஒளிஞ்சிருந்து வேடிக்கை பார்க்கறியே... உனக்கே இது அசிங்கமாகத் தெரியலையா...?''

பூஜா மௌனத் திரையின் மறைவில் ஒதுங்கிக் கொண்டு அவன் பேச்சிற்கு எதிர் பேச்சுப் பேசாமல் மௌனித்து விடுவதுதான் இத்தனை வருட மண வாழ்க்கையில் நரேந்திரன் அறிந்திருந்த வழக்கம்.

ஆனால் இன்றுதான் அவள் மௌனத் திரையின் மறைவிலிருந்து வெளிப்பட்டு போர் முரசு கொட்டி விட்டாளே!

அதை உணராமல் அவன் பேசிவைக்க, அவள் நிமிர்ந்து அவனை நேர்கொண்ட பார்வையாய் பார்த்தாள்.

''எது அசிங்கம்...? கட்டின பெண்டாட்டியின் கண் முன்னாலேயே இன்னொருத்தியின் மேல் இழைந்துக்கிட்டு பூட்டைத் திறக்கச் சொல்லிக் கொடுப்பது அசிங்கமா...? இல்லை... அதைப் பார்த்தும் பாராதவள்போல கண்ணை மூடிக் கொண்டு நின்றேனே... அது அசிங்கமா?''

''பல்லைக் கழட்டிக் கையில் கொடுத்து விடுவேண்டி.''



''அதுக்குத்தான் கொடைக்கானலுக்கு வான்னு என்னைக் கூப்பிட்டுக் கொண்டு வந்தீங்களா? இந்தப் பல்லைக் கழட்டும் வேலையை சென்னையிலேயே செய்திருக்கலாமே. அதுக்கு ஏன் இவ்வளவு தூரம் மெனக்கெட்டு வரணும்...?''

பதிலுக்குப் பதில் கொடுக்கும் இந்த பூஜா அவனுக்குப் புதிது. அவன் கோபம் அதிகரிக்க - இன்னும் வெப்பமானான்.

''நீ நடந்து கொள்கிற முறையே சரியில்லை. நான் அவ்வளவுதான் சொல்வேன்...''

''நான் எப்படி நடந்திருக்கணும்...? நீங்கதான் கொஞ்சம் சொல்லுங்களேன். உங்களுக்கு தண்ணீர் தெளித்து விட்டு - ஊருக்கு நேர்ந்து விட்டு ஒதுங்கியிருந்திருக்கணுமா...? இத்தனை நாளும் அதைத்தானே செய்தேன். அக்கடான்னு வீட்டுக்குள் கிடந்தவளை... இழுத்துக்கிட்டு வந்து இம்சைப்படுத்துவது நீங்கதானே... என் கண் மறைவாய் எதுநடந்தாலும் எனக்குத் தெரியப் போவதில்லையே. நான் பாட்டுக்கு நிம்மதியாய் இருந்திருப்பேனே.''

இவ்வளவு நீளமாய்ப் பேசுவது தன் மனைவிதானா என்று நரேந்திரனுக்குச் சந்தேகமே வந்துவிட்டது.

'இவள் இப்படியெல்லாம் பேசமாட்டாளே! கொடைக்கானல் மலையில் ஏதாவது ஒரு மோகினிப் பேய் இவளைப் பிடித்துவிட்டதா...' என்ற சந்தேகம்கூட நரேந்திரனுக்கு வந்துவிட்டது.

''ஏண்டி... செய்வதையெல்லாம் செய்துவிட்டு வாய் கிழிய சட்டம் பேசறயா...?''

''சட்டம் பேசி என்ன ஆகப் போகுது...? என்னைக் கேட்டால் - நீங்க பேசாம என்னையும் ஹரிஷையும் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருக்கலாம்...''

''மத்தவங்க எல்லாம் ஃபேமிலியோட வந்திருக்காங்கடி.''

''நீங்க விமலாவோட வந்திருக்கலாமே..?''

நரேந்திரனின் அடக்கி வைத்திருந்த கோபம் அணை உடைக்க... அவன் 'பளார்' என்று பூஜாவின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்.

''அம்மா...'' ஹரிஷ் பயந்து பேய் பூஜாவைக் கட்டிக் கொள்ள, மகனை அணைத்தபடி கட்டிலில் அசையாமல் உட்கார்ந்து விட்டாள் பூஜா.

''பெண்ணாடி நீ? அவளும் உன்னைப் போல ஒரு பெண்தானே...?''

''அவளைப் பற்றி என்னிடம் பேசக்கூடாது...''

அடி வாங்கிய பின்னாலும் நிதானத்தோடு பேச இவளால் மட்டும்தான் முடியும் என்று நினைத்துக் கொண்டான் நரேந்திரன்.

''மனுஷி மாதிரி பேசுடி...''

''நான் மனுஷிதான். எனக்கும் உணர்ச்சி இருக்கு. ரோசம் இருக்கு. சுயமரியாதை இருக்கு. அதை நீங்களும் தெரிஞ்சுக்கணும்.''

ஹரிஷ்... நரேந்திரனை விரோதமாய் பார்த்தபடி பூஜாவின் தோள்வளைவில் முகம் புதைத்துக் கொண்டான்.

''அவளும் மனுஷிதானேடி...?''



''அவள் மனுஷியா...? மனுஷின்னா... சூடு சொரணை, மனச்சாட்சி இதெல்லாம் இருக்கணும். பாவ புண்ணியம் பார்க்கணும். அவகிட்டத்தான் இது எதுவுமே இல்லையே...''

''பூஜா...! ஸ்டாப் திஸ் நான்சென்ஸ் ஆர்க்யூமெண்ட்.''

''ஆரம்பித்தது நானில்லை.''

நரேந்திரன் ஹரிஷை வாங்கிக் கொள்ள முயல... அவன் நரேந்திரனிடம் வர மறுத்தான்.

''பிள்ளை மனசையும் பாய்சன் பண்ணி வச்சிருக்கடி...''

''நான் அதைச் செய்யலை. அவன் கண் முன்னாலேயே அவனோட அம்மாவைக் கை நீட்டி அடித்தால் அவன் இப்படித்தான் பிஹேவ் பண்ணுவான்...''

''ஓஹோ... அப்படியா..? உன் பிள்ளை... உன்னை அடிக்கிற என்னிடம் பேசமாட்டானா...? ஏய்... நீ எனக்குப் பெண்டாட்டியானதால் தான் என் பிள்ளைக்கு அம்மாவாகி இருக்க... மைண்ட் இட்...''

'பிள்ளையின் முன்னால் பேசும் பேச்சைப் பார்...''

பூஜாவின் முகம் சிவந்து விட்டது.

அவன் கட்டிலில் உட்கார்ந்து மகனைத் தன்னிடம் இழுத்தான்.

''நோ...'' என்று மறுத்தான் ஹரிஷ்...

''டேய்... நான் என் பெண்டாட்டியைத்தான் அடிச்சேன். நீ யாருடா... இதில தலையிட? முளைத்து மூணு இலை விடலை. அதுக்குள்ள அம்மாவுக்கு சப்போர்ட் பண்ணுகிறானாம். வாடா இங்கே...''

''ஏன் மம்மியை அடிச்சிங்க...?''

''அவ... உனக்கு மம்மியாகிறதுக்கு முன்னாடியே எனக்குப் பெண்டாட்டியாகிட்டா. அதனால அடிச்சேன்.''

ஹரிஷ் என்னவோ பெரிய மனிதன் போல... குறுக்கு விசாரணை பண்ண... நரேந்திரன் அதற்கு ஏடாகூடமாய் பதில் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட பூஜா சிரித்து விட்டாள்.

''ஹை... உன் அம்மாவே சிரிச்சுட்டா... பாருடா செல்லம். அம்மா என்கூட பழம் விட்டுட்டாள்ல? நீயும் பழம் விட வேணாம்...?''

''ஓகே...''

**'குழந்தையும்... தெய்வமும்**
**குணத்தால் ஒன்று...**
**குற்றங்களை மறந்து விடும்**
**மனத்தால் ஒன்று...'**

பூஜாவின் மனதில் பழைய பாடல் ஓடியது. அவள் எழுந்து துணிகளை அடுக்குவதைத் தொடர்ந்தாள். பிள்ளையுடன் விளையாடிக் கொண்டே நரேந்திரன் அவளிடம் தன் அடுத்த கணையைத் தொடுத்தான்.

''ஆயிரம்தான் உன் மனசில இருந்தாலும் நீ அடுத்த வீட்டுப் பெண்ணை வெளியில் பிடித்துத் தள்ளலாமா...? நான் வரும்வரைக்கும் அவ இந்த ரூமில் இருந்தால் நீயென்ன குறைஞ்சா போயிடுவ...?''

பூஜாவின் சிரிப்பு மறைந்தது. அவள் முகம் பழையபடி இறுக்கமானது.



''அவளை ரூமை விட்டு வெளியே போகத்தான் சொன்னேன். வெறும் வாய்வார்த்தைதான். கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவில்லை...''

''அவ அப்படிச் சொன்னாளே...''

பூஜா திரும்பி... முறைத்த முறைப்பில் நரேந்திரன் அடங்கிப் போனான்.

''அதையும் தான்... ஏன் சொல்லணும்..?''

''அவ அடங்கி உட்கார்ந்திருக்கணும்... அதை விட்டு விட்டு கட்டில் பெட்டிகளைத் தூக்கி வைத்து... திறந்து... அடுக்குகிறேன் பேர்வழின்னு கிளம்பினா...''

''ஹெல்ப் பண்ணலாமுன்னு நினைச்சிருப்பா...''

பூஜா ஒரு வேக மூச்சை விட்டு தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள்.

''அவள் பக்கம் ஆயிரம் நியாயங்களை - யோசிக்காமல் உடனுக்குடன்... பட்டுன்னு சொல்றீங்களே.. அதைப் போல... என்பக்கம் இருக்கிற ஒரு நியாயம்கூட உங்க மனசுக்குத் தோணலையா...?''

''அவ என்னை நம்பி வந்தவள்டி.''

''எப்படி..? கழுத்தில்தாலியை வாங்கிக்கொண்டாளா...?''

''பூஜா... நீயாடி இப்படிப் பேசற...? சீச்சி... இப்படியெல்லாம் பேச உனக்கு வாய் வருது பாரு....''

''வேற எப்படிப் பேசச் சொல்றீங்க? 'நம்மை நம்பி வந்தாள்'ன்னு நீங்க சொன்னா அது உங்களுக்கும் கௌரவம். எனக்கும் கௌரவம். அதை விட்டுட்டு 'என்னை நம்பி வந்தாள்'ன்னு பேசினால் நான் இப்படித்தான் பேச முடியும்.''

பெண் என்பவள் மகாசக்தி. அவளைக் கையாளும் விதத்தில்தான் அவளுடைய தோற்றமும் வெளிப்படும்.

**'நீரென்றால் நான் நீர்...**
**நெருப்பென்றால் நான் நெருப்பு...**
**மலரென்றால் நான் மலர்...**
**முள்ளென்றால் நான் முள்...**
**சிலையென்றால் நான் சிலை...**
**சிதையென்றால் நான் சிதை...**
**எதுதான் நானென்று நீயே தீர்மானிக்கிறாய்...**
**நான் அல்ல...!**

பூஜாவின் டைரியில் அவள் எழுதியிருந்த இந்தக் கவிதையைப் படித்தபோது புரியாத பல அர்த்தங்கள் - இப்பேது நரேந்திரனுக்குப் புரிந்தது.

'நானும் அப்படிச் சொல்லியிருக்கலாமோ...?'

அவன் யோசிக்கலானான். பூஜா துவாலையை எடுத்துக் கொண்டு... ஹரிஷுடன் குளியலறைக்குள் புகுந்தாள்.

''டாடி... துவட்டி விடுங்க...''

ஹரிஷ்... நீர்த்திவலைகள்... உடல் மேல் படிந் திருக்க... குளியலறையை விட்டு வெளியே வந்தான்.

''ஓ.கே... ஹரிஷ்! நீ டிவியைப் பாரு...''

நரேந்திரன் டிவியை உயிர்ப்பித்துவிட்டு குளிய லறைக்குள் சென்று குரல் கொடுத்தான்.

''பூஜா சோப் எங்கே...?''

''அங்கேதான் இருந்துச்சு. நல்லாப் பாருங்க...''

''நீ வந்து எடுத்துக் கொடு...''



பூஜா குளியலறைக்குள் நுழையவும் நரேந்திரன் கதவை மூடித் தாழ் போடவும் சரியாக இருந்தது.

''இதோ... சோப் இங்கே இருக்கே...''

''தெரியும்டி...''

நரேந்திரன் கண்களில் ஆவல் வெளிப்பட அவளை நெருங்கினான் - பூஜாவின் மனதிலிருந்த கோபம் பறந்து விட்டது. அவள் பின்னே நகர்ந்தாள்.

அவளுடைய நரேந்திரன் - அவள் ஆசைப்பட்ட நரேந்திரன் நனைந்த உடலுடன் கலைந்த முடியுடன் அவளுக்கு கிளர்ச்சியூட்டும் தோற்றத்துடன் கிட்டே வந்தான்.

## 17

''ஸ்ஸ்... ஹரிஷ் வெளியே இருக்கான்...''

''வெளியேதானாடி இருக்கான்...''

''நான் குளிச்சுட்டேன்...''

''இப்ப பாத்ரூமில்தானே இருக்கிற... இன்னொரு தடவை குளிக்கலாம்...''

நரேந்திரன் பிடிவாதக்காரன். அவன் வேண்டுமென்று நினைத்து விட்டால் அதை நிகழ்த்தி விட்டுத்தான் ஓய்வான்.

பூஜாவின் மேல்... அவன் படர்ந்து பரவியபோது... சற்று முன்னால் அவனால் அனுபவித்த அவமானம், மன வேதனை, கோபம் - எல்லாமே அவளுக்கு மறந்து விட்டது.

அவளுடைய நரேந்திரன் ஆவலுடன் அவளைத் தேடுகிறான் என்பது மட்டுமே அவள் நினைவில் நின்றது.

குளியலறையை விட்டு வெளியே வந்தபோது தோற்று விட்ட உணர்வு அவள் மனதில் எழவில்லை. மாறாக, ஒரு நிறைவு. இத்தனை நாள் கூடலில் கிடைக்காத இதம் கிடைத்து விட்டதைப் போன்ற சந்தோசம் அவளது நாடி நரம்பெல்லாம் நிறைந்து பரவியது.

''பூஜா...! எனக்கெந்த டிரஸ்?'' நரேந்திரன் குளித்து விட்டு வந்துவிட்டான்.

**ம**கனை நடுவில் விட்டு... இரண்டு பக்கமும்... அவர்கள் இருவரும் அவன் கையைப் பிடித்தபடி பேசிக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

மற்ற அறைகளில் இருந்தவர்களும் சேர்ந்து கொள்ள சிரிப்பும் கேலியுமாய் கலகலத்தபடி காரிடாரில் நடந்து லிப்டை நெருங்கினார்கள்.

''சார்...'' என்ற அமானுஷ்யக் குரல் அவர்களுக்குப் பின்னால் கேட்டது...

''மோகினி அழைக்கிறது தீபா...'' முணுமுணுத்தாள் உஷா... சட்டென்று நரேந்திரன் திரும்பிப் பார்த்தான். அவளது அறைவாசலில் விமலா நின்று கொண்டு இருந்தாள்.

''என்னை மறந்துட்டீங்களே...''

துஷ்யந்தனிடம் சகுந்தலை கூட இவ்வளவு ஏக்கமாகக் கேட்டிருக்கமாட்டாள். அப்படி ஒரு தொனியில் அவள் கேட்டதும் வசுமதி வெளிப்படையாகவே தலையில் அடித்துக் கொண்டாள்.



பூஜாவுக்கு சங்கடமாக இருந்தது. இந்த விமலா ஏன் இப்படிப் பேசித் தொலைக்கிறாள் என்று மனதிற்குள் பொருமினாள்.

நரேந்திரன் சட்டென்று ஹரிஷின் கையை விட்டு விட்டு அவசரமாக... விமலாவின் பக்கம் போனான்.

''ஐ ஆம் ஸாரி... ஐ ஆம் ஸோ ஸாரி...''

தன் கணவன்... இவ்வளவு தூரத்திற்கு மன்னிப்புக் கேட்க வேண்டுமா... என்று பூஜாவிற்கு இருந்தது.

'எனக்கு அப்பவே பசித்தது. நீங்க எப்போ வருவீங்கன்னு காத்துக்கிட்டு இருந்தேன் தெரியுமா...''

இதற்கு மேல் இந்த உரையாடலை சகித்துக் கொள்ள முடியாத உஷா...

''ஏம்மா விமலா.... உனக்குப் பசித்தா ரூம் சர்வீஸில் போன் பண்ணி சாப்பாட்டைக் கொண்டு வரச் சொல்லி... மொக்க வேண்டியதுதானே... அதை விட்டுவிட்டு நரேனை ஏன் டிஸ்டர்ப் பண்ற...? அவர் உனக்கு பாஸா இல்லை பேரரா...?'' என்று கேட்டு விட்டாள்.

''ஏய்ய்... எல்லோரும் சேர்ந்து சாப்பிடப் போகும் போது அந்தப் பெண்ணை மட்டும் ரூமில் தனியாய் சாப்பிடச் சொல்கிறாயேடி. இது உனக்கே நியாயமாய் இருக்கா?'' ஆனந்த் விமலாவைப் பார்த்துக் கொண்டே அவளுக்காக... உஷாவிடம் பரிந்தான்.

''ஆரம்பிச்சிட்டாங்க... அப்படியென்ன கரிசனம்... அந்தப் பொண்ணு மேல...?''

''அதுக்கில்லைடி உஷா...''

''வேற எதுக்கு...? நீங்களே 'ஜொள்'ளுங்க... கேட்கலாம்...''

ஜெகனுக்கு அவர்களின் பேச்சு வார்த்தையைக் கேட்டு சிரிப்பு வந்தது.

''டேய் நரேன்... வாடா இங்கே... நீயும் வாம்மா விமலா... என்ன நீ... வந்ததில் இருந்து உள்நாட்டுக் கலவரத்தை வெடிக்க வைச்சுக்கிட்டே இருக்க...?''

''சார்கூட வந்துட்டு... நான் எப்படி... ரூமில் தனியாகச் சாப்பிடுவேன் சார்...?''

''அடடா... நீ வாயைத் திறந்தாலே வில்லங்கம் தான்ம்மா... கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு சாப்பிட வரயா...?''

''சார்...?''

''அவன் பெண்டாட்டி பிள்ளையோட வருவான். நீ இப்படி ஓரம் கட்டி என் பெண்டாட்டி பிள்ளைகளோட வா...''

''அதெப்படி... நான் சாரின் பேமிலியில் ஜாயின் பண்ணிக்கறேன்.''

''ஊஹூம்... நீ இந்தப் பெண்ணிடம் வாங்கிக் கட்டிக் காமல் கொடைக்கானலை விட்டுத் திரும்பமாட்டா போல... பாரும்மா விமலா...! உன்நல்லதிற்குத்தான் சொல்றேன். இங்கே இருக்கிறவங்க பெண்டாட்டிகளிலேயே என் பெண்டாட்டி மட்டும்தான் கொஞ்சம் பாவ புண்ணியம் பார்ப்பா. மத்தவங்க எல்லாம் நீ பேசுகிற பேச்சுக்கு எதையாச்சும் செய்துருவாங்க. எதுக்கும் நீ அவங்ககிட்ட



இருந்து தள்ளியே இரு... ராகினி இந்தப் பெண்ணை உன் கண் பார்வையிலேயே வைச்சுக்க...''

ஜெகன் சாதுர்யமானவன். புத்திசாலி. விமலாவை நரேந்திரனின் அருகிலேயே இருக்க விட்டால் அவள் கொடைக்கானலில் இருந்து திரும்பும்போது... நரேந்திரனையும் பூஜாவையும் விவாகரத்து வாங்க கோர்ட்டுக்கு போகவைத்து விடுவாள் என்று தெரிந்து வைத்திருந்தான்.

## 18

**ரா**மாயணத்தில் குகனை அணைத்து 'நால்வருடன்... இன்று ஐவரானோம்...' என்று ராமன் சொல்வதாக ஒரு காட்சிவரும்.

ராமன்... லட்சுமணன்... பரதன்... சத்ருக் கனன்... என்ற நான்கு சகோதரர்களுடன் குகனும் சேர்ந்து ஐந்து சகோதரர்களாக ஆகிப் போனார்களாம்.

அதைப் போல தங்களின் மேஜையைச் சுற்றி இருந்த நான்கு சேர்களுடன்... ஐந்தாவதாய் ஒரு சேரை இழுத்துப் போட்டு... விமலாவை அதில் அமர வைத்து... நால்வருடன் ஐவரான ஜெகன் - அந்த சேரையும் நரேந்திரனின் குடும்பம் அமர்ந்திருந்த மேஜையில் இருந்து தூக்கிக் கொண்டு வந்து போட்டதுதான் அவனுடைய கெட்டிக் காரத்தனம்.

அதைக் குறிப்பாகப் பார்த்த ராகினியின் கண்களில் பாராட்டுத் தெரிந்தது.

''வெரிகுட்...'' என்று கணவனிடம் முணுமுணுத்தாள்.

''வேற வழி...? இல்லாவிட்டால்... இவள் ஓடிப் போய் அந்த காலிச் சேரில் உட்கார்ந்துக்கிட்டு... பூஜாவின் பி.பி.யை எகிற வைப்பாளே...'' ஜெகன் ஆசுவாசமாய் அமர்ந்து கொண்டான்.

நரேந்திரன் நிம்மதியுடன் பூஜாவின் பக்கம் திரும்பி பேசலானான். ஹோட்டலின் பில்லை மொத்தமாக... ஆறு நண்பர்களும் பகிர்ந்து செட்டில் பண்ணுவது என்று ஏற்கெனவே முடிவு பண்ணியிருந்ததால் விமலாவின் உணவைப் பற்றிய கவலையின்றி நரேந்திரனால் இருக்க முடிந்தது.

''ரொம்ப நாளாச்சு. இல்லையா பூஜா...''

அவன் எதைச் சொல்கிறான் என்று புரியாமல் அவள் முகம் சிவந்தாள். அதை ரசனையுடன் பார்த்த நரேந்திரன் கண் சிமிட்டினான்.

''பாத்ரூம் மேட்டரைச் சொல்லலைடி. இப்படி அவுட்டிங் வந்து நாளாச்சேன்னு சொன்னேன்...''

''ஸ்ஸ்... குட்டி இருக்கிறான்.''

''இப்ப நாம எதைப் பேசினோம்.''

''போதுமே...''

''எனக்குப் போதாதே... இந்தக் கொடைக்கானல் குளிரில் அம்சமாய் பெண்டாட்டியை பக்கத்தில் வைச்சுக் கிட்டு எவனாது அளவு சாப்பாடு சாப்பிடுவானா...?''

பூஜாவின் முகம் அந்தி வானமானது. அவள் நரேந்தி ரனின் கையில் செல்லமாகக் கிள்ளினாள்.



''ஸ்ஸ்... வலிக்குதுடி...''

''அப்ப வாயை வைச்சுக்கிட்ட சும்மா இருங்க...''

''இப்பத்தான்... நான் உன்னைப் பெண் பார்க்க வந்தப்போ இருந்ததைப் போல... சிரிச்ச முகமாய் இருக்கேடி.''

பூஜாவின் மனம்... பூவாய் மலர்ந்தது. இத்தனை நாளும் அவள் இதற்காகத்தான் ஏங்கினாள். ஒரு வார்த்தை... ஒரேயொரு வார்த்தை காதலுடன் அவன் அவளிடம் பேசிவிடமாட்டானா என்று தவமிருந்தாள்.

இன்றைக்கு அவள் கண்ட கனா பலித்துவிட்டது என்ற சந்தோசத்துடன் அவள் சிரித்தாள்.

அவர்கள் இருவரும் சிரித்துக் கொண்டே ரகசியம் பேசிக் கொள்வதை சற்று தூரத்தில் அமர்ந்து வயிற்றெரிச்சலுடன் பார்த்தவாறே சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் விமலா.

'எப்படிச் சிரிக்கிறா... கொடுத்து வைத்தவ... தாய்... தகப்பன் இருந்திருந்தா... எனக்கும் இப்படி ஒரு வாழ்க்கை அமைந்திருக்கும். ம்ஹூம்...'

விமலா அநாதை ஆசிரமத்தில் வளர்ந்தவள். குடும்பத் துடன் இருக்கும் மற்ற பெண்களுக்கு கிடைத்திருக்கும் வாழ்க்கை போல... தனக்கும் கிடைக்கவில்லையே என்ற காழ்ப்புணர்ச்சி... அவள் மனதில் உண்டு.

நரேந்திரனின் அலுவலகத்தில் அவள் வேலைக்குச் சேர்ந்தபோது அவளது கதையைக் கேட்ட நரேந்திரன் அனுதாபப்பட்டான்.

''உன்னை அநாதைன்னு நினைத்து வருத்தப்படா தேம்மா. நானிருக்கிறேன்.'' என்று இயல்பாக சொல்லி வைத்தான்.

விமலா... அந்த வார்த்தையைப் பிடித்துக் கொண்டாள். அதுதான் அவளின் சுபாவம். ஆண்களிடம் இரக்கத்தை வரவழைத்துப் பழகுவது... அதன் பின்னால் அவர்களின் குடும்ப வாழ்வில் சிக்கலை உண்டாக்குவது. இது அவளுக்கு இயல்பான ஒன்றாக ஆகிப்போனது.

அவள் கண் முன்னால் எந்தப் பெண்ணும் தான், தன் கணவன், குழந்தை, குடும்பம் என்று இருந்துவிட்டால் அவளுக்குப் பொறுக்காது.

எப்படியாவது... எதையாவது செய்து... அந்தக் கணவன் மனைவிக்குள் மனவேற்றுமையை உண்டு பண்ணி விடுவாள்.

நரேந்திரன் அவள்மேல் இரக்கப்பட்டு ஹரிஷின் பிறந்த நாள் விழாக்களுக்கு அழைத்தபோது கிடைத்த வாய்ப்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, அவன் வீட்டிற்குச் சென்று விட்டாள்.

'எப்பேர்ப்பட்ட பாஸ் இவர்... இவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பவளின் மூஞ்சி... எப்படியிருக்குன்னு பார்த்து விட வேண்டும்...'

பூஜாவின் முகம்... அழகான முகமாக இருந்துவிட - விமலாவின் மனதில் பொறாமைக் கனல் கொழுந்து விட்டு எரிந்தது. பூஜாவைப் பற்றி நரேந்திரனிடம் விசாரித்தபோது அவன் இயல்பாக மாமனாரின் வீட்டைப் பற்றிச் சொல்லி வைக்க... அவளின் பொறாமைக்கனல் இன்னும் அதிகமானது.

'நல்ல தாய்... தகப்பன்... அண்ணன்னு கிடைக்கப் பெற்ற மகராசி... பாஸைப் போன்ற ஒரு மாப்பிள்ளை இவளுக்குக் கிடைத்திருக்கு. எனக்கெல்லாம் கனவில்கூட இப்படிப்பட்ட வாழ்க்கை கிடைக்குமா...?'



கண் முன்னால் தினந்தோறும் தேனியின் சுறுசுறுப்போடு சுற்றிவரும் நரேந்திரனைப் பார்த்துக் கொண்டிருப்பவளின் மனதிற்குள்... பொறாமைத் தீயின் ஜுவாலை குறையாமல் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

அப்படி ஒரு விழாநாளில் நரேந்திரனின் வீட்டிற்குப் போயிருந்த போதுதான் விமலா ஒன்றைக் கண்டு பிடித்தாள்.

அது... நரேந்திரனின் மீது ஏதோ ஒரு வருத்தத்தோடு பூஜா இருப்பது.

'என்னவாக இருக்கும். ஏன் இவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு உம்மென்று இருக்கிறாள். நம்ம பாஸும் அவளைக் கண்டு கொள்ளமாட்டேன் என்கிறாரே...'

சிக்கலை உண்டாக்க... சிறு நூலின் முனை அவளிடம் கிடைத்து விட்ட உற்சாகத்தில் அவள் இருந்த போதுதான் நரேந்திரன் அந்த கொடைக்கானல் டூரைப் பற்றி அவளிடம் சொன்னான்.

''மூன்று நாள் டூர் விமலா... போகவர இரண்டு நாள்கள். ஸோ... ஏறக்குறைய ஒருவாரம் நான் ஆபீஸ் வர மாட்டேன்...''

அந்த நொடியில் விமலா முடிவு பண்ணிவிட்டாள். 'பூஜாவின் வாழ்க்கையில் புயலை உண்டு பண்ண வேண்டிய திட்டத்திற்கு இந்த கொடைக்கானல் டூரை ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது...?'

லேசாக... கண்களில் நீர் திரையிட - நரேந்திரனை நிமிர்ந்து பார்த்தாள். பேச வேண்டிய வாக்கியங்களை மனதிற்குள் கோர்வையாக்கிக் கொண்டாள்.

# 19

"நீங்கள் எல்லோரும்... குடும்பம் குடும்பமா போவீங்களா சார்...?'' விமலாவின் குரலில் தெரிந்த ஏக்கம்... நரேந்திரனை உருக்கியது.

''ஆமாம்மா...''

''எனக்கு ரொம்ப நாளாவே ஒரு ஆசை சார்...''

''என்னம்மா...''

''இப்படிக் குடும்பங்களுக்கு மத்தியில் நானும் அவங்களில் ஒருத்தியாய் இருக்க வேண்டும்ன்னு. அது இதுவரை... நிறைவேறாத ஆசையாகவே இருக்கு...''

விமலா வராத கண்ணீரை... கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள்.

'பாவம்... அநாதை...' நரேந்திரன் இரக்கப்பட்டான்.

''எங்க கூட வேணும்னா... நீயும் ஜாயின் பண்ணிக்கம்மா...'' என்று சொல்லி விட்டான்.

அந்த வார்த்தையை வைத்து... முதல்நாளில் எவ்வளவு தூரத்திற்கு விளையாட முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு பூஜாவின் உணர்வுகளோடு விளையாடிப் பார்த்துவிட்டாள் விமலா...

'உடைந்து போய்... அழுத கண்ணும்... வீங்கின மூஞ்சியுமாய் வருவாள்ன்னு பார்த்தால் இவள் சிரித்துக் கொண்டு வருகிறாளே... இதற்கு முன்னால்கூட புருசனிடம்



சகஜமாய் பேசமாட்டாள். சிரிக்கக் கூலி கேட்பாள். இப்போது - அதுவும் போய் கோந்து இல்லாமல் - இரண்டு பேரும் ஒட்டிக்கொண்டு பின்னிப் பிணைகிறாங்களே... இந்த பாஸூம்தான் இவளைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார். இன்றைக்கு என்ன ஆனது..? பெண்டாட்டியிடம்... ஏதோ காதலியிடம் கொஞ்சுவதைப் போலக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாரே... ஊஹூம்... இதை வளரவிடக் கூடாது...'

விமலா எழுந்து கொண்டாள்.

''எங்கேம்மா போறே...?'' என்றான் ஜெகன்.

''சாப்பிட்டுவிட்டேன் சார்...'' விமலா எரிச்சலுடன் கூறினாள்.

''அதுக்கு ஏம்மா அந்தப் பக்கம் போற? கை கழுவ வாஷ்பேசின் இந்தப் பக்கம் இருக்கு...''

''சார் சாப்பிட்டு விட்டாரான்னு பார்க்கலாமுன்னு...''

''அதையெல்லாம் அவன் வொய்ப் பார்த்துக்குவாள்... நீ கை கழுவிவிட்டு ரூமுக்குப் போ... நைட் நேரத்தில் வெளியே அலையாதே... இது நம் ஊரில்லை. கொடைக்கானல்... நாளையிலிருந்துதான் சுற்றிப் பார்க்க போகணுமுன்னு பிளான்...''

ஜெகன் அவளை அந்த இடத்தை விட்டுக் கிளப்புவதில் குறியாக இருந்தான். வேறு வழியின்றி கை கழுவி விட்டு... லிப்டை நோக்கிப் போனாள் விமலா... அவள் மனம் கறுவிக் கொண்டது.

'இன்னைக்கு ஒரு நாளோடு எல்லாம் முடிந்து விடவில்லை. இன்னும் மூன்று நாள்கள் என் கைவசம்

இருக்கின்றன. இந்த விமலா யாருன்னு காட்டாமல்... கொடைக்கானலை விட்டு நான் போவதாக இல்லை...'

விமலா சூளுரைத்திருப்பதை அறியாதவளாய்... பூஜா தன் மீண்ட சொர்க்கத்தை ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

கண்ணுக்கு முன்னால் இருந்தும்... கைக்கு எட்டாத தொலைவில் இருந்த அவளுடைய கணவன் இன்று அவளது கைப்பிடியில் இருந்தான்.

'என்னிடம் இதுபோல் பேசமாட்டானா...?' என்று அவள் ஏங்கித் தவித்த - அவனுடைய பிரத்யேகமான அடையாளமான நகைச்சுவை கலந்த நையாண்டிப் பேச்சை அவளிடம் பேசி சிரித்துக் கொண்டிருந்தான்.

'உன்னைப் பிடிச்சிருக்குன்னு ஒரு வார்த்தை சொல்லமாட்டானா...' என்று ஏங்கித் தவித்தவளிடம்...

''அசத்தறடி...'' என்று கண் சிமிட்டினான். இத்தனைக்கும் மேலாக இரவில் கொடைக்கானலில் குளிருக்கு இதமாக அவளோடு கலந்தான்.

''போட்டில் இருந்து ஊர் சுற்றுவதை ஆரம்பிக்கலாமா...?''

பிரசாத் கேட்டதை... உடனடியாக அனைவரும் ஆமோதித்தார்கள். ஏரியில் படகில் ஏறி அமர்ந்தபோது... மற்ற குடும்பங்கள் நான்கு இருக்கைகள் கொண்ட படகில் அமர்ந்துவிட விமலா சுவாதீனமாக நரேந்திரனின் அருகில் அமர்ந்து கொண்டாள். படகின் பின் இருக்கைகளில் பூஜாவும் ஹரிஷூம் அமர்ந்து கொள்ள வேண்டியதாகிவிட்டது.



எப்போதும் விமலாவைக் கண்காணித்துக் கொண்டே இருக்க முடியாத மற்ற நண்பர்களின் குடும்பங்கள் படகு சவாரியை அனுபவிக்கக் கிளம்பிப் போய்விட - நரேந்திரனின் அருகில் உட்கார முடியாத பூஜா மனதிற்குள் புழுங்கினாள்.

விமலா ஒரு கணம்கூட நரேந்திரனை திரும்பிப் பார்க்க விடவில்லை. சின்னப் பெண் போல... கண் விரித்து ஏரியைப் பார்த்துக் குதூகலிப்பதைப் போல் பாவனை செய்து கொண்டிருந்தாள்.

அவளுடைய உற்சாகத்தைக் கனிவுடன் நரேந்திரன் பார்க்க - அது பூஜாவின் மனதில் கோபத்தைக் கிளப்பி விட்டது.

போதாக் குறைக்கு விமலா... தண்ணீரில் கையை விட்டு விளையாடிக் கொண்டே தண்ணீரை அள்ளி நரேந்திரனின் மீது தெளித்தாள். பூஜா திகைத்து விட்டாள்.

'இவள் என்ன இப்படிச் செய்கிறாள்...?'

நரேந்திரனிடம் பேசிக் கொண்டே பின்புறமாகத் திரும்பி... பூஜாவைப் பார்த்த விமலாவின் விழிகளில் அலட்சியப் பார்வை தெரிந்தது.

## 20

ஊசிமரக் காடுகளின் இடையே குதிரைச் சவாரி செய்தபோது விமலா பயந்து அலற, அவளின் இடையைப் பிடித்துத் தூக்கி குதிரையில் இருந்து இறக்கி விட்டான் நரேந்திரன். பயம் விலகாதவள் போல அவனைக் கட்டிப்

பிடித்துக் கொண்ட விமலா அவனது தோள் வளைவில் பூஜாவை வெற்றிப் பார்வை பார்த்தாள்.

''ஏங்க... இங்கேதான் குணா படத்தில் வர்ற குகை இருக்குதாமே...'' என்று கேட்டுக் கொண்டிருந்த தீபா விடம்... ''வா... அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற குகையைக் காண்பிக்கிறேன்.'' என்று அழைத்துக் கொண்டு கிளம் பினான் சூர்யா.

''பொறு தீபா... எனக்கும் அந்தக் குகையைப் பார்க்கணும்...'' வசுமதி கூற...

''அடடா... செங்கோட்டையைப் பார்க்கக்கூட இப்படி ஆளாய் பறந்திருக்க மாட்டாங்கப்பா. இந்த சினிமாவில் வர்ற குகையைப் பார்க்க... இப்படி பறப்பா... பறக்கிறாங்க பாரேன்...'' என்று பிரதாப்பிடம் சொன்னான் சரவணன்.

''அப்போ எங்களை சினிமா பைத்தியம்ன்னு சொல்கிறீங்களா...?''

தீபா சிலிர்க்க, வசுமதி அவளுடன் கூட்டு சேர்ந்து கொண்டாள்.

''ஏண்டா... அமெரிக்காவுடன்கூட பகை வளர்த்துக் கலாம். இந்த லேடி பின்லேடன்களிடம் பகை வளர்த்துக் கலாமா? இத்தனை வருசம் குடும்பம் நடத்தியும் இது உனக்குத் தெரியவில்லையே...''

சரவணனைப் பார்த்து ஜெகன் இவ்வாறு கூறியதும்... சரவணனை விட்டுவிட்டு ஜெகனைப் பிடித்துக் கொண் டார்கள் அந்தப் பெண்கள்.

பூஜா அவர்களுடன் கலந்து பேச ஆசைப்பட்டாள். ஆனால் நரேந்திரன், விமலாவின் பயத்தைப் போக்க...



சாய்ந்து கிடந்த பெரிய மரக் கிளையின் மீது அவளை அமர வைத்து... அருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். அவன் இல்லாமல் அவனுடைய நண்பர்களின் குடும்பத் தோடு கலந்து பழகுவது சரிவராது என்று பூஜாவிற்குத் தோன்றியது.

'பேச்சோடு பேச்சாக... 'நரேன்... எங்கே...?' என்று கேட்பார்கள். திரும்பிப் பார்ப்பார்கள். விமலாவைத் தோளில் சாய்த்துக் கொண்டு அவன் ஆசுவாசப்படுத்திக் கொண்டிருப் பதைப் பார்த்து விட்டால் ஆள் ஆளுக்குக் கதை புனைந்து விடுவார்கள்.'

'வேண்டாம்...' பூஜா ஹரிஷுடன் மெதுவாக விலகி நடந்தாள்.

''ஹார்ஸ் ரைடிங் போகிறாயா ஹரிஷ்...?''

''நோ மாம்... வேர் இஸ் டாட்...?''

நரேந்திரன், விமலாவிடம் நெருக்கமாக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் மகன் பார்த்து விடக்கூடாது என்று பிரிந்து நடந்து வருகிறவளிடம் ஹரிஷ் இப்படிக் கேட்டால் அவள் என்ன பதிலைச் சொல்வாள்...?

**அ**ன்று இரவு... நரேந்திரன் அவளை நெருங்கிய போது பூஜா விலகிப் படுத்தாள்.

''ஏண்டி...?''

''ம்ப்ச்... ஊர் சுற்றிய அசதி...''

''அவன் வற்புறுத்தவில்லை. உண்மையிலேயே அவனுக்கும் அயர்வாக இருந்ததால் கண்மூடி உறங்கி விட்டான்.

'எப்போதும் இப்படி இருக்க மாட்டாரே...'

பூஜா அதற்கும் மனம் குமைந்தாள்.

மறுநாள் கோக்கன் வால்க்ஸை வலம் வந்தபோது... வரிசையாக இருந்த கடைகளில் விமலாவுக்கு தின்பதற்கு நிறைய வேண்டி இருந்தது.

''சார்... பர்ஸை ரூமில் வைச்சுட்டு வந்துட்டேன்...''

''உதை வாங்கப் போற... இந்த கொடைக்கானல் டிரிப் முழுவதும் என்னோட செலவுன்னு சொல்லியிருக்கேனா இல்லையா...?''

அவள் தின்பதற்கு அவன் பணம் கொடுக்க நிற்க.. அவனுக்கும் அவனுடைய நண்பர்களின் குடும்பத்திற்குமான இடைவெளி அதிகரித்தது.

பூஜாவால் கணவனை விட்டுவிட்டு அவர்களுடன் போக முடியவில்லை. அதே சமயம் விமலாவுடன் இணைந்து நிற்கவும் பிடிக்கவில்லை.

பெண்மையின் நுட்ப உணர்வில்... அவள்... விமலாவின் சாகஸத்தை உணர்ந்திருந்தாள். அவளுக்கு மிக நன்றாகத் தெரியும் - விமலா வேண்டுமென்றே இதையெல்லாம் செய்கிறாள் என்பது...

எந்தவித ஆதாரமும் இல்லாமல் நரேந்திரனிடம் இதைப் பற்றிப் பேச அவளால் முடியவில்லை. கண்ணுக்கு முன்னால் நரேந்திரனைத் தொட்டுப் பேசி... அவள் பழகும்போது விலகி நிற்காத நரேந்திரனின் மேல் தன் உள் மனதில் வெறுப்பு வளருவதையும் பூஜாவால் தடுத்து நிறுத்த முடியவில்லை.



அந்த சுற்றுலாவை... முள்மேல் நிற்பது போன்ற உணர்வுடன் பூஜா எதிர்கொண்டாள்.

''இன்னும் ஒரு நாள்தான். இந்த டூர் முடிந்து விடும். ம்ஹூம்... அடுத்து நமக்கு இருக்கவே இருக்கு ரொட்டீன் லைஃப்...''

உஷா பெருமூச்சு விட்டபோது...

'அப்பாடி... இன்னும் ஒரே ஒரு நாள்தான். டூர் முடிந்து விடும். ஊரைப் பார்த்து ஓடி விடலாம்...' என்று பூஜா நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.




அதிகாலையில் தெரியும் கொடைக்கானல் மலையின் மேகம் சூழ்ந்த தோற்றத்தை நீண்ட காரிடாரின் முடிவிலிருந்த ஜன்னல் வழியாகப் பூஜா பார்த்து ரசித்துக் கொண்டிருந்த போது அவள் பின்னால் வந்து நின்றாள் விமலா...

''தேங்க்ஸ்...''

திரும்பிப் பார்த்த பூஜா... விமலாவை வெறுப்புடன் பார்த்தாள்...

''எதுக்கு...?''

''என் நரேனுடன் இந்த மூன்று நாள்களும் கொடைக்கானல் மலையில் என்ஜாய் பண்ண விட்டதற்கு...''

தன் காதுகளை நம்ப முடியாமல் அதிர்ச்சியுடன் ...லாவைப் பார்த்தாள் பூஜா...

''என்ன உளறுகிறாய்...?''

''உளறல் இல்லை. நிஜம்.''

''வேண்டாம் விமலா.. உன் விளையாட்டை வேறு எங்காவது வைத்துக் கொள். நான் பொல்லாதவள்...''

''நான் உன்னை விடப் பொல்லாதவள்...''

''அதுதான் இந்த ஊர் உலகத்திற்கே தெரியுமே...''

''அதற்குத் தெரிந்து எனக்கு என்ன ஆகப் போகுது...? உனக்குத் தெரியணும். அதுதான் எனக்கு முக்கியம்...''

''விமலா...''

''சும்மா கத்தாதே... அவருடன் கொடைக்கானலுக்கு வந்து ஊர் சுற்றணும்னு ஆசைப்பட்டேன். ஊருக்குத் தெரியாத உறவாச்சே... தயங்கினார். இந்த டூரை நாங்கள் பயன்படுத்திக் கொண்டோம்.''

''நான் நம்பமாட்டேன்...''

''நம்பாதே... அதனால் எனக்கு என்ன நஷ்டம்?''

''அவரிடம் கேட்கிறேன்...''

''இல்லைன்னு சொல்லுவார்... உன் முன்னால் என்னைக் கூப்பிட்டு விசாரிப்பதைப் போல நடிப்பார். நான் அப்படிப் பேசவே இல்லைன்னு சாதிச்சுடுவேன். ஆனால், இதெல்லாம் எதுக்கு...? உனக்கு உண்மை தெரியணும்னா... இன்னைக்கு நாங்க... என் ரூமில் என்ஜாய் பண்ணப் போகிறோம். நீ நேரிலேயே வந்து பார்த்துக் கொள்ளேன்...''

'இருக்காது...' பூஜாவிற்கு உடல் பதறியது... அவளுடைய நரேந்திரன் ஒரு நாளும் அவளுக்கு அநீதி செய்ய மாட்டான். அவளைக் கண்டு கொள்ளாமல் இருப்பானே



தவிர... மனதாலும்... அவளை விட்டுவிட்டு... வேறு ஒருத்தியை நினைக்க மாட்டான்.

''என்ன... இதெல்லாம்... இருக்காதுன்னு நினைக்கறியா?'' அவள் மனதைப் படித்தாள் விமலா...

''உனக்கு சவால் விடுகிறேன் பூஜா. இன்னைக்கு புரோக்ராம் என்ன... பார்க்கில் சுற்றணும்னுதானே... பார்க்கில் சுற்றும் போது நாங்க இரண்டு பேரும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி ஹோட்டலுக்கு வந்து விடுவோம். நான் என் ரூம் கதவைப் பூட்டாமல் வைத்திருக்கிறேன். உன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்.''

'இவள் சொல்வது உண்மையாக இருந்தால்... என்னிடம் மறைப்பாளே தவிர... உண்மையை ஒப்புக் கொள்ள மாட்டாளே...'

''இதையெல்லாம் ஏன் உனக்குச் சொல்கிறேன் தெரியுமா? எனக்கு நரேன் முழுதாக வேண்டும். உன்னோடு எல்லாம் என்னால் அவரைப் பங்கு போட்டுக் கொள்ள முடியாது. அதனால் நீ ஓடிப் போய்விடு...''

''மரியாதையாய் பேசு... ஓடிப் போகும் பழக்கமெல்லாம் உனக்குத்தான் வரும். எனக்கு வராது...''

''அப்ப நடந்தே போ... எனக்கு என்ன... நீ அவரை விட்டுப் போக வேண்டும். அவ்வளவுதான். அதை நீ நடந்து போனால் என்ன... உருண்டு போனால் என்ன... எல்லாம் எனக்கு ஒன்றுதான்...''

'இவ்வளவு தைரியமாக இவள் சவால் விடுகிறாள் என்றால் ஏதாவது இல்லாமலா இருக்கும்..?''

கடந்த நான்கு வருடங்களாக நரேந்திரன் பூஜாவிட மிருந்து மனதால் விலகிப் போக ஆரம்பித்திருந்தான்.

விமலா அவனுடைய செகரட்டரியாக வந்து சேர்ந்து நான்கு வருடங்கள்தான் ஆகின்றன.

'ஒன்றும்... ஒன்றும்... இரண்டு...'

பூஜாவின் மனதில் குளிர் பிறந்தது. இருக்குமோ... அவளுடைய நரேந்திரனை இவள்தட்டிப் பறித்துக்கொண்டிருப்பாளோ...

பூங்காவில்... மற்றவர்கள் கதை பேசி சிரித்துக் கொண்டிருக்கையில், பூஜா மட்டும் தவிப்புடன் நரேந்திரனைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள்.

'எனக்கு மட்டும் ஏன்... இவர்களைப் போல சிரித்துக் கொண்டிருக்க முடியவில்லை...' அவள் மனம் ஏங்கியது.

விமலா... நரேந்திரனை அழைத்தாள். அவன் பூஜாவை விட்டு விலகி எழுந்து... அவளிடம் நடந்தான். அவள் மெல்லிய குரலில் எதையோ பேசினாள். அவர்கள் இருவரும் பூங்காவை விட்டு வெளியேறினார்கள்.

போகும்போது... பூஜாவைப் பார்த்து ஏளனச் சிரிப்பு ஒன்றை உதிர்த்து விட்டுப் போக விமலா மறக்கவில்லை.

பூஜா ஹரிஷ்ஷுடன் எழுந்தாள். மற்றவர்களின் கவனத்தைக் கவராமல் பூங்காவை விட்டு வெளியே வந்தாள். ஆட்டோ பிடித்து.. அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றாள். லிப்டிலிருந்து வெளிப்பட்டதும் அவர்களுடைய அறையைத் திறந்து... ஹரிஷை கட்டிலில் உட்காரவைத்து டிவியைப் போட்டு விட்டாள். ஹரிஷ் டிவியில் ஆழ்ந் திருக்க... இவள் சப்தம் எழுப்பாமல் வெளியே வந்து தட தடக்கும் இதயத்தோடு விமலாவின் அறைக் கதவின் மேல் கையை வைத்தாள். அது திறந்து கொண்டது. உள்ளே சென்றாள்.

உள்ளே அவள் கண்ட காட்சியில் அவள் உயிர் பறந்தது.



## 22

வாசலில் காய் வாங்கிக் கொண்டிருந்த மரகதம் வீட்டு வாசலில் ஆட்டோ வந்து நிற்கவும் நிமிர்ந்து பார்த்தாள். பெட்டியோடு இறங்கிய பூஜா...

''ஹரிஷ்... கீழே இறங்கு...'' என்று சொல்லியபடி ஆட்டோவுக்குப் பணம் கொடுத்தாள்.

உள்ளூரில் இருந்தாலும் வருடத்திற்கு ஒருமுறை வந்து ஒரு வாய் காப்பியோடு போகும் மகள் பெட்டியோடு வந்து நிற்பதைக் கண்டதும் 'ஏதோ சரியில்லை...' என்று புரிந்து கொண்டு விட்டாள் மரகதம்...

அதை வெளியே காட்டிக் கொள்ளாமல்... மகளை இன் முகத்துடன் வரவேற்றபடி... பேரனைத் தூக்கிக் கொண்டாள்.

''உள்ளே வா பூஜா. என்னங்க... யாரு வந்திருக்கிறான்னு பாருங்க...''

பேப்பரைக் கீழே இறக்கிய ராமாமிர்தம்.. மகளைக் கண்டதும் ஆச்சரியமாய் பேப்பரைத் தூக்கிக் கடாசி விட்டு எழுந்து கொண்டார்.

''என்னம்மா... தனியே வந்திருக்கிற... மாப்பிள்ளை எங்கே...?''

''அவர் வரவில்லை... அப்பா, நானும் ஹரிஷ்ஷும் இனிமேல் இங்கேதான் இருக்கப் போகிறோம்.''

தங்கை வந்திருப்பதை அறிந்து... அவளை வரவேற்க... ...லிருந்து இறங்கி வந்த சத்யன் துணுக்குற்றான்.

''என்ன ஆச்சு பூஜா...?''

''என்னை எதுவும் கேட்காதே அண்ணா. நானும் உன் மருமகனும்... இங்கே இருக்கலாமா.. வேண்டாமா... அதை முதலில் சொல்லு...''

''தாராளமாய் இருக்கலாம்...''

''கடைசி வரைக்கும் இருக்கலாமா...?''

''ம் ம் ம்...''

பூஜா அதற்குமேல் எதுவும் பேசாமல்... அறைக்குள் போய்விட்டாள். வீட்டில் இருந்தவர்களும்... அவளை எதுவும் கேட்காமல் தாங்கிக் கொண்டனர்.

ஹரிஷ்... அங்கிருந்தே... பள்ளிக்குப் போய் வர ஆரம்பித்தான்.

நரேந்திரன் அவளைத் தேடி வந்தான். பூஜா அறைக்குள் அடைந்து கொண்டு... அவனைப் பார்க்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டாள்.

''தப்பாக நினைக்க வேண்டாம் நரேன்... என் சின்னத் தங்கைக்கு பூஞ்சை மனசு. அவ மனசு எதனாலேயோ காயப் பட்டிருக்கு. அது ஆறட்டும். அதுவரை அவளும் ஹரிஷூம் எங்க வீட்டிலேயே இருக்கட்டும்'' சத்யன் கூறிவிட்டான்.

''அவதான் முட்டாள்தனமா எதையோ செய்ய றாள்ன் னா... குடும்பம் மொத்தமுமே அவளை ஆதரிக்கறீங்களே... ஏன்னு கேட்க மாட்டீங்களா...?'' நரேந்திரன் ஆத்திரப்பட்டான்.

''எங்ககிட்ட சொல்லக்கூடிய விசயமா இருந்தால் அவளே சொல்லியிருப்பாளே...'' சத்யனின் கூர்மையான பதில்... நரேந்திரனைக் குத்திக் கிழித்தது.



அவனும்தான் என்ன செய்வான்...! கொடைக்கானலில் - பூங்காவில் எல்லோரும் அமர்ந்திருந்த போது விமலா அவனை அழைத்தாள். அருகே சென்று விசாரித்த போது மயக்கமாக வருகிறது என்று சொன்னாள். மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் அவளை ஹோட்டல் அறையில் விட்டுவிட்டு வரத்தான் நரேந்திரன் சென்றான். மயக்கம் வருகிறது என்று சொல்லும் இளம்பெண்ணைத் தனியாக அனுப்ப அவனால் முடியவில்லை.

விமலாவின் அறைக்குள் சென்ற போதே... அவள் தொய்ந்து நரேந்திரனின் கைகளில் மயங்கி விழுந்து விட்டாள். அவளைக் கைகளில் ஏந்தி... கட்டிலில் படுக்க வைத்த போது அவளது கரங்கள் அவனது கழுத்தைச் சுற்றிப் பிணைந்து இருக்க அவள் மேல் விழுந்து விட்டாள்.

அறைக் கதவை யாரோ திறந்து மூடும் சப்தம் கேட்டு விலகி எழுந்து வந்து பார்த்தபோது அங்கே யாரும் இல்லை. விமலாவின் அறையைப் பூட்டி விட்டு பூங்காவிற்குப் போன போது பூஜா அங்கு இல்லை.

''ஆட்டோவில் ஏறிப் போனாளே...'' ராகினி மட்டும் பூஜாவைக் கவனித்திருந்தாள்.

ஹோட்டலுக்கு அவன் ஓடினான். அங்கே பூஜா பெட்டியோடு கிளம்பிக் கொண்டிருந்தாள். என்ன சொல்லியும் அவளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. எவ்வளவு கேட்டும் அவள் காரணம் சொல்லவில்லை.

வேறு வழியில்லாமல் ஜெகனை செல்ஃபோனில் அழைத்து அவசர வேலை வந்திருப்பதால் அவன் சென்னைக்குத் திரும்புவதாக சொல்லிவிட்டு - மறக்காமல் விமலாவை அழைத்துக் கொண்டு வந்து விடும்படி கேட்டுக் கொண்டான்.

வாடகைக் காரில் சென்னை திரும்பினார்கள். நரேந்திரன் அந்தப் பக்கம் அலுவலகம் போனபோது, இந்தப் பக்கம் மகனுடன் தாய் வீட்டிற்கு வந்து விட்டாள் பூஜா.

இத்தனை வருட திருமண வாழ்க்கையில் அவர்களுக்குள் ஆயிரம் சண்டை சச்சரவுகள் நடந்திருக்கின்றன. ஆனால், வீட்டைவிட்டு பூஜா வெளியேறியதில்லை. இன்று மட்டும் ஏன் இப்படிச் செய்தாள் என்று நினைத்து... நினைத்து மனம் குழம்பினான் நரேந்திரன்.

“ஏன் சார் ஒரு மாதிரியாய் இருக்கீங்க...?'' என்று ஒன்றும் அறியாதவள் போல் கேட்ட விமலாவிடம்... மனதில் இருந்ததைக் கொட்டி விட்டான்.

'போய் விட்டாள்...' மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொண்டே - வெளியே போலியாய் வருத்தப்பட்டாள் விமலா.

''உங்க அருமை அவங்களுக்குத் தெரியலை சார்...'' என்று போட்டு வேறு கொடுத்தாள்.

பூஜா இல்லாத வீட்டில் கால் வைத்தால் நரேந்திரனுக்குப் பித்துப் பிடித்தது போல் ஆனது. அவளில்லாத வாழ்வை வாழ அவனால் முடியவில்லை. தன் மனதில் பூஜாவின் மேல் இந்த அளவிற்குக் காதல் இருக்கும் என்று அவன் எண்ணிக்கூடப் பார்த்தது இல்லை...

'பூஜா... ஐ லவ் யூ...' என்று மனதிற்குள் கூறிக் கொண்டான். இதை நேரடியாய் அவளிடம் சொல்லியிருந்தால் அவள் விலகிச் செல்லாமல் இருந்திருப்பாளோ என்று மருகினான்.

அவளின் நினைவில் அவன் புலம்பிக் கொண்டிருந்த போது அவனுடைய குடும்ப டாக்டர் உமாவதி... அவனுக்குப் போன் பண்ணினார்.



''நரேன்... என் ஹாஸ்பிட்டலுக்கு வந்துவிட்டுப் போங்க...''

நரேந்திரன்... உமாவதியின் முகம் பார்த்துக் கொண்டு புரியாத பார்வையோடு அமர்ந்திருந்தான்.

'ஏன் வரச்சொல்லியிருக்கிறாங்க...'

''நரேன்... உங்க மிஸஸ் கன்சீவ் ஆகியிருக்கிறாள்...''

'வாவ்... இதை ஏன் அவள் என்னிடம் சொல்லவில்லை...?'

''பட்... அவங்க அதை அபார்ட் பண்ணச்சொல்கிறாங்க...''

''வாட்...?''

நரேந்திரன் இந்த முறை கோபத்துடன் மாமனார் வீட்டிற்குச் சென்று - சத்யன் தடுக்கத் தடுக்க... பூஜாவின் அறை புகுந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

''யாரைக் கேட்டு... அபார்ஷன் பண்ணப் போனாய்...?''

''யாரைக் கேட்கணும்...?''

''என்னைக் கேட்கணும்... உன் பிள்ளையின் அப்பன் நான்...''

''நாளைக்கு விமலாவின் பிள்ளைக்கும் அப்பா ஆவீங்கதானே...?'

''பூஜா...?''

நரேந்திரனுக்கு சட்டென்று எல்லாம் விளங்கிவிட்டது. அன்று விமலாவின் அறைக்கதவைத் திறந்து மூடியது

பூஜாதான். இவள் அவர்களைப் பார்த்திருக்கிறாள். தவறாக நினைத்திருக்கிறாள்.

''ச்சீ... அவள் எனக்குத் தங்கை போல...''

''அசிங்கமாய்ப் பேசாதீங்க நரேன்... அவள் வேறு விதமாய் என்னிடம் சொன்னாள். 'நேரில் வந்து பாரு'ன்னா வந்தேன்...''

''ஓ... மைகாட்... அவள் மனதில் இவ்வளவு விஷம் இருந்ததா...? பூஜா... அவள் மேல் எனக்கிருந்தது இரக்கம். அநாதைன்னு சொன்னாள். ஆதரவு காட்டினேன். அன்னைக்கு மயக்கம் வருதுன்னு சொன்னாள். ரூமுக்கு அழைச்சுக்கிட்டுப் போனேன். ரூம் வாசலிலேயே மயக்கம் போட்டுவிட்டாள். அவளைத் தூக்கிப் படுக்கையில் போட்டேன். தவறிப் போய் மேலே விழுந்து விட்டேன்...''

நரேந்திரனின் கண்களில் பொய் இல்லை. காதல் இருந்தது. அவளைப் பிரிந்த தவிப்பு இருந்தது. பூஜா தாள முடியாமல் அழுதாள்.

''ச்சு... அழாதே. உன்னைப் பிடிச்சிருக்கான்னு ஒரு தடவை நீ கேட்டாய். அப்போ அதற்குப் பதில் சொல்ல வில்லை. இப்போது சொல்கிறேன். கேட்டுக் கொள். உன்னைத் தவிர வேறு யாரையும் எனக்குப் பிடிக்காது.''

பூஜா, நரேந்திரனின் மார்பில் நிம்மதியுடன் சாய்ந்தாள்.